பொங்கல் சிறப்பிதழ்

விலை ₹ 20
16 ஜனவரி 2014

புதிய தலைமுறை

மலர் 5 | இதழ் 17

சமூக விழிப்புணர்வு வார இதழ்

விஜயகாந்த் பின்னும் சஸ்பென்ஸ்

- முஸ்லிம் கோயிலில் தீ மிதிக்கும் இந்துக்கள்
- மலைக்குகையில் வாழும் மனிதர்கள்
- ஒரு கிராமத்தின் பேச்சுமொழி சமஸ்கிருதம்

வித்தியாசமான கிராமங்கள்

- வாடகை வீட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது எப்படி?

Moviezzworld.com

சீக்கரத்தை நோக்கி

OUR RESULTS

2011 - 16 IAS, IPS.,

2012 - 22 IAS, IPS.,

2013 - 169 Wrote IAS Mains

Smart Leaders I.A.S

A Unit Of Smart Leads

Admission Open : IAS, IPS, IFS.,

TNPSC: Group I, II, IV & VAO

SMART LEADERS IAS

ஆரம்பித்த மூன்றாம் ஆண்டிலேயே சிகரத்தை நோக்கி

ஸ்மார்ட் லீடர்ஸ் ஐ.ஏ.எஸ்

ஆசையில்லாத முயற்சியாலும், முயற்சி இல்லாத ஆசையாலும் பயனில்லை.
வருங்கால ஆட்சியாளர்களாக ஆசைப்படுங்கள்; முயற்சி எடுங்கள்...

போன் : 044-43525468, 9176787980, 7299717767

www.smartleadersias.com

Moviezzworld.com

Many surveys, one result!

SRM University

ranked India's No. 1

by India Today*, The Education Times, DNA Zee and The Financial Express

*Factual Ranking, 2013

ADMISSIONS 2014

ENGINEERING

B. Tech
Aerospace Engineering | Automobile Engineering | Biomedical Engineering | Biotechnology | Chemical Engineering | Civil Engineering | Computer Science and Engineering | Electrical and Electronics Engineering | Electronics and Communication Engineering | Electronics and Instrumentation Engineering | Genetic Engineering | Information Technology | Information and Telecommunication Engineering | Mechanical Engineering | Mechatronics Engineering | Nanotechnology / Software Engineering

B. Arch | B. Des

M. Tech | M. Arch | Ph.D

SCIENCE AND HUMANITIES
Bachelors, Masters and Doctoral degrees in Commerce | Computing | Bio Sciences | Media | Sciences | Hotel Management | Education

MEDICINE AND HEALTH SCIENCES
Bachelors, Masters and Doctoral degrees in Medicine | Dentistry | Pharmacy | Nursing | Physiotherapy | Occupational Therapy | Public Health

MANAGEMENT
BBA | MBA | MBA (Integrated) | Ph.D

IMPORTANT DATES

Issue of Application form opened	: 15	December	2013
Issue of Application form closes	: 10	March	2014
Last date for receipt of Application	: 15	March	2014

Entrance Examination Mode and Dates
(i) Paper - Pencil Mode: April 27, 2014
(ii) Computer-based Exam: April 17 to April 22, 2014
For B.Tech and Health Sciences UG: both modes
For M.Tech, MBA, MCA: only Computer based exam

TEST CITY CENTRES IN INDIA: Paper Pencil: 98, Online: 40

SPECIAL ANNOUNCEMENT: Foreign and NRI students can apply online or download application

YOUR LIFE STARTS HERE!

3521 record placements achieved. 2562 students from 2014 batch already placed, progressing to a new record.

1320 international students from 48 countries

1253 scholarships awarded, ₹16 crore

LEARN LIKE THE WORLD DOES
Curriculum | Research | Innovation

SEMESTER ABROAD INCREDIBLE OPPORTUNITIES
MIT | Harvard | Carnegie | Warwick | NUS | RMIT

INTERNATIONAL AND CORPORATE CONNECT
World's Best 40 Universities | Top 215 Companies

ACCREDITATION AND RECOGNITION
NAAC 'A' grade | MHRD 'A' category

SCHOLARSHIPS
Founder's Scholarship: 100% waiver of tuition fee, hostel fees and monthly stipend of ₹1000 for high achievers in academics and sports, and other deserving applicants
Fee Waiver of 50%: For applicants scoring an aggregate of 95% and above in relevant subject groups in school finals, as per eligibility criteria

LOANS
On-the-spot sanction of bank educational loans during admission counselling

HOW TO APPLY
You can apply (i) online using credit / debit card
(ii) fill application online, download and courier with DD for ₹900
(iii) buy application at lead branches of Axis Bank, City Union Bank, Indian Bank, Karur Vysya Bank, Post Offices and the University campuses

ELIGIBILITY: ENGINEERING:
B.Tech: Pass in 10+2 or its equivalent with minimum 70% aggregate in Mathematics, Physics and Chemistry for all programs. For Biotechnology, Biomedical, Genetic Engineering, minimum of 70% aggregate in Mathematics / Biology, Physics and Chemistry.
B. Arch: 70% aggregate in HSC and a pass in NATA is essential

To apply and details of programs offered in various campuses, eligibility and other information visit www.srmuniv.ac.in

Campuses - Chennai (Kattankulathur, Ramapuram, Ramapuram Part - Vadapalani), Trichy, Delhi NCR

CONTACT
Director (Admissions)
SRM University, SRM Nagar,
Chennai Area - Kattankulathur - 603 203,
Kancheepuram Dist, Tamil Nadu, India.
Tel: +91 44 27455510, 47437500, 27417400
Fax: +91 44 27453622
E-mail: admissions.india@srmuniv.ac.in

SRM UNIVERSITY
(Under Section 3 of UGC Act 1956)

RAMAPURAM
Bharathi Salai, Ramapuram,
Chennai - 600 089
Tel: +91 44 30603042, 30603092
Mob: +91 98845 81748, +91 98414 67605
Fax: +91 44 30603073

RAMAPURAM PART - VADAPALANI
No.1, Jawaharlal Nehru Salai, 100 feet road,
Vadapalani, Chennai - 600 026
Tel: +91 44 43969966, 43969956
Fax: +91 44 43969957

DELHI
NCR Campus,
Delhi Meerut Road, Modi Nagar,
Ghaziabad, Uttra Pradesh - 201 204.
Tel: +91 1232 234301, 234304
Fax: +91 1232 234308, 234309

HEAD OFFICE
No.1 Jawaharlal Nehru Street,
Vadapalani, Chennai - 600 026.
Tel: +91 44 27455510, 47437500
Fax: +91 44 23624778

ENGINEERING | MEDICINE AND HEALTH SCIENCES | MANAGEMENT | SCIENCE AND HUMANITIES

Moviezwild.com

இருக்கண் வருங்கால்...

இளைஞர்கள் அதிகம் உள்ள நாடு என்று எல்லோரும் சொல்லிச் சொல்லி பெருமைப்படுகிறார்கள். ஆனால் அந்த இளைஞர்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என யாராவது அக்கறைப் படுகிறார்களா? இனி அந்தக் கவலை வேண்டாம். ஏனெனில் அந்தக் கவலையை அரசாங்கம் தன் பொறுப்பாக எடுத்துக் கொண்டுவிட்டது!

அப்படி என்ன செய்து விட்டது என்கிறீர்களா? பெட்ரோல் விலையை இரண்டு வாரத்திற்கு ஒருமுறை உயர்த்திக் கொண்டிருக்கிறதே, அது ஏன் தெரியுமா? இந்த விலை உயர்வை எதிர்கொள்ள முடியாமல் மெல்ல மெல்ல இளைஞர்கள் சைக்கிளுக்கு மாறுவார்கள். சைக்கிளில் செல்வது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லதல்லவா?

ஆனால் நெடுநாள் படிந்துவிட்ட பழக்கத்திலிருந்து எளிதில் விடுபடுவது அத்தனை சுலபமல்ல என்றுதானே சொல்ல வருகிறீர்கள்? அட, உங்களுக்குத் தெரிந்தது அவர்களுக்குத் தெரியாதா? அவர்கள் என்ன லேசுப்பட்டவர்களா? அடேங்கப்பா! எத்தனை பெரிய பொருளாதார வல்லுநர்கள் அவர்கள்!

அதனால்தான் 10 நாளைக்கு ஒருமுறை விலையை உயர்த்தி நம் பொறுமையைச் சோதித்து வருகிறார்கள். எப்படியும் ஒரு கட்டத்தில் நம் பொறுமை எல்லை மீறி, போதுமடா சாமி என்று இரண்டு சக்கர நான்கு சக்கர வாகனங்களை தூக்கிக் கடாசிவிட்டு சைக்கிளுக்கு வந்துவிடுவோமில்லையா?

அரசாங்கம் உடல் ஆரோக்கியத்தை மட்டுமல்ல, மன ஆரோக்கியத்தையும் கருதிப் பார்த்திருக்க வேண்டும். அங்கே இருப்பவர்கள் என்ன லேசுப்பட்டவர்களா? அடேங்கப்பா! எத்தனை பெரிய பொருளாதார வல்லுநர்கள் அவர்கள்! இரண்டு சக்கர, நான்கு சக்கர வாகனம் என்றால் வீட்டை விட்டுக் கிளம்பினால் கல்லூரி அல்லது வேலை இவற்றுக்கு மட்டுமா போகிறார்கள்? தொலைவு என்பது ஒரு பொருட்டில்லை என்று நண்பர்களோடு ஊர் சுற்றக் கிளம்பி விடுகிறார்கள்! அல்லது நண்பர்களாக ஓரிடத்தில் கூடி வெட்டிப் பேச்சுப் பேசுகிறார்கள். அதில் நேரம் மட்டுமா வீணாகிறது? மனதும் அல்லவா பாழாகிறது! சைக்கிள் என்றால் எவ்வளவு தூரம் சுற்ற முடியும்? கால் அல்லவா வலிக்கும்?

'உயிர்கள் இடத்தில் அன்பு வேண்டும்...' என்று பாரதியார் எழுதியதை பொருட்படுத்தாமல் அரசாங்கம் சும்மா இருக்க முடியுமா? பெட்ரோல் விலையை உயர்த்தினால் மக்கள், தானாக மாட்டு வண்டி யுகத்திற்கு வந்துதானே ஆக வேண்டும்? மாட்டு வண்டிக்கு மாடு வாங்கித்தானே ஆக வேண்டும்? வாங்கினால் போதாது; அதைப் பராமரித்தும் ஆக வேண்டும். அப்போது, தானே அன்பு பெருக்கெடுத்து ஓடாதா? மாடு என்றால் தமிழில் செல்வம். இனி பாருங்கள்... வீட்டிற்கு வீடு செல்வம் வந்து சேரப் போகிறது! அப்படி செல்வம் சேர வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கமாக்கும். அவர்கள் என்ன லேசுப்பட்டவர்களா? அடேங்கப்பா! எத்தனை பெரிய அறிவுஜீவிகள் அவர்கள்!

அந்த மாடுகளுக்கு அம்மா என்று தாயின் நினைவும் வரும். அவர்களை முதியோர் இல்லத்தில் கொண்டு தள்ளும் கொடுமையும் அல்லவா குறையும்? அங்கே இருப்பவர்கள் என்ன லேசுப்பட்டவர்களா? அடேங்கப்பா! எத்தனை பெரிய உளவியல் வல்லுநர்கள் அவர்கள்!

நம் தாய்மார்கள் மீது அரசுக்கு எப்போதும் தனிப் ப்ரியம்தான். காய்கறிகளை வேக வைத்துச் சாப்பிட்டால் அதில் உள்ள விட்டமின் சத்துக்கள் போய்விடுகின்றன என்கிறது விஞ்ஞானம். அத்தோடு, எண்ணெய் அதிகம் சேர்த்துக் கொள்வதும், ஒரு தரம் காய்ச்சின எண்ணெயை மீண்டும் மீண்டும் காய்ச்சுவதும் ஆரோக்கியத்திற்குக் கேடு. இதை எவ்வளவு தூரம் எடுத்துச் சொன்னாலும் நம் தாய்மார்கள் கேட்கத் தயாரில்லை. இதைத் தடுக்க வேண்டுமானால் ஒரே வழி, சமையல் எரிவாயு உருளை விலையை உயர்த்துவதுதான் என்ற யோசனை அரசாங்கத்திற்கு உதயமாகியிருக்கிறது. அங்கே இருப்பவர்கள் என்ன லேசுப்பட்டவர்களா? அடேங்கப்பா! எத்தனை பெரிய அறிவாளிகள் அவர்கள்! இனி எந்தப் பெண்மணியாவது தினம் தினம் அடுப்புப் பற்ற வைக்க வேண்டும் எனக் கனவிலாவது நினைப்பாரா? இனி பச்சைக் காய்கறிகள்தான். உடல் ஆரோக்கியம்தான். இவ்வளவு கருணை உள்ள அரசுக்கு நாம் என்ன கைமாறு செய்யப் போகிறோம்!

விஜயகாந்த் என்னும் சஸ்பென்ஸ்

Movizworld.com

கவர் ஸ்டோரி
மாலன்

இந்த மக்களவைத் தேர்தல் இதுவரை சந்தித்திராத புதிய வாய்ப்புகளையும் சவால்களையும் தமிழகத்தின் முக்கிய அரசியல் கட்சிகளுக்கு ஏற்படுத்தியுள்ளன. வாய்ப்பு: தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்றால் பேரம் பேசும் வலிமை கூடும். சவால்: தேர்தல் களத்தில் கூட்டணிக்குக்கூட கட்சிகள் வராமல் தனிமைப்பட்டுப் போய்விடாமல் இருப்பது எப்படி?

தேர்தலுக்குப்பின் உள்ள வாய்ப்பை விட தேர்தலுக்கு முன் உள்ள சவால்தான் அரசியல் கட்சிகள் முன் இன்று விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது. ஆதாரம்?

விஜயகாந்த்தின் தேமுதிகவைத் தங்கள் பக்கம் இழுக்க திமுக, காங்கிரஸ், பாஜக ஆகிய மூன்று கட்சிகளுமே முனைந்து நிற்கும் காட்சி.

பதற்றத்தில் திமுக

டிசம்பர் 23-ஆம் தேதி தேமுதிக ஏற்பாடு செய்துள்ள கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி. கிறிஸ்துவ மத போதகர் எஸ்றா சற்குணம் அந்த நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார். அவர் கருணாநிதியின் நண்பர். திமுக அபிமானி. அவர் பேசும்போது, 'திமுக கூட்டணியில் தேமுதிக இடம் பெற வேண்டும்' என்று பகிரங்கமாகவே பேசினார். மறுநாள், 'திமுக கூட்டணிக்கு தேமுதிக வருமானால் மகிழ்ச்சி அடைவேன்' என்று கருணாநிதியும் அறிக்கை விடுத்தார். தேமுதிகவுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்னாள் அமைச்சர் ஒருவரைப் பணித்ததாகவும் செய்திகள் வெளியாகின. எஸ்றா சற்குணம் பேசிய நான்கு நாட்களுக்குப் பிறகு, தேனி மாவட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் அலுவலகத்தை திறந்து வைத்துப் பேசும்போது திருமாவளவன், திமுக கூட்டணிக்கு வருமாறு தேமுதிகவுக்கு அழைப்பு விடுத்தார். ஜனவரி 5-ஆம் தேதி தேமுதிக பொதுக்குழுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது கருணாநிதியின் வார்த்தைகளை மேற்கோள்காட்டி தேமுதிகவிற்கு ஸ்டாலின் அழைப்பு விடும் காட்சிகள் கலைஞர் தொலைக்காட்சியில் மீண்டும் மீண்டும் ஒளிபரப்பாகின.

இவையெல்லாம் தேமுதிகவை தனது கூட்டணிக்கு இழுத்துவிட வேண்டும் என்பதில் திமுக பதற்றம் கலந்த அவசரத்தில் இருக்கிறது என்பதைக் காட்டுகின்றன. ஏன் இந்த அவசரம்? இரண்டு காரணங்கள். அண்ணாவின் மறைவிற்குப் பின், 1971-லிருந்து 2009 வரை 10 மக்களவைத் தேர்தலை, ஏதாவது ஒரு தேசியக் கட்சியுடன் (1998-இல் தமிழ் மாநில காங்கிரசுடன் அது கூட்டணி வைத்திருந்தாலும், அப்போது தமாகா என்பது காங்கிரசின் பெருவாரியான தொண்டர்களைத் தன் வசம் வைத்திருந்தது) கூட்டு சேர்ந்துதான் தேர்தலை எதிர் கொண்டிருக்கிறது. 42 ஆண்டுகளுக்குப் பிறகு அது தேசியக் கட்சிகளை உதறிவிட்டுத் தனியே எதிர்கொள்ளவிருக்கிறது. காங்கிரசுடனும், பாஜகவுடனும் உறவு இல்லை என்று அது அறிவித்துவிட்டது. இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள், பாமக, மதிமுக ஆகியவை அதனுடன் உறவுக் கொள்ளத் தயாரில்லை. இந்த நிலையில் அது மாநில அரசியலில் தனிமைப்பட்டு நிற்கிறது. தனிமைப்பட்டு விடவில்லை என்ற தோற்றத்தை ஏற்படுத்த அதற்கு ஒரு பெரிய கட்சியின் உறவு தேவை. அந்தக் கட்சி தேமுதிகவைத் தவிர வேறெதுவுமாக இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் வேறு எந்தப் பெரிய கட்சியும் அதனோடு உறவு கொள்ள மறுத்துவிட்டன.

காய் நகர்த்தும் காங்கிரஸ்

திமுகவைப் போலவே தனிமைப்பட்டு நிற்கும் இன்னொரு கட்சி 2004-லிருந்து கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக திமுகவோடு கூட்டணி கண்ட காங்கிரஸ். திமுகவிற்காவது, விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம், முஸ்லிம் லீக் போன்ற கட்சிகள் உடனிருக்கின்றன. எனவே பெயரளவிற்காவது கூட்டணி என்று சொல்லிக் கொள்ள இயலும். ஆனால் காங்கிரஸ் கட்சிக்கு அதுவும் இல்லை. திமுகவைப் போலவே அதுவும் 42 ஆண்டுகளாக ஏதேனும் ஒரு திராவிடக் கட்சியோடு கூட்டணி கண்டுதான் தமிழகத்தில் களமிறங்கியிருக்கிறது. காங்கிரசிலிருந்து பிரிந்து தமிழ் மாநில காங்கிரஸ் உருவானபோதுகூட, 1991 தேர்தலை அது திருநாவுக்கரசருடைய எம்ஜிஆர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டு சேர்ந்துதான் எதிர்கொண்டது. வாக்குகள் கணக்கில் அந்தக் கட்சியினால் பெரிய பலனை அது எதிர்பார்க்கவில்லை என்பதை அது இடங்களைப் பிரித்துக் கொண்டதைக் கொண்டே அறிந்து கொள்ளலாம். அந்தத் தேர்தலில் 3 இடங்களை திருநாவுக்கரசர் கட்சிக்குக் கொடுத்துவிட்டு 35 இடங்களை அது தன் வசம் வைத்துக் கொண்டது (மற்றொரு இடம் தா.பாண்டியனைத் தலைவராகக் கொண்ட ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு). அந்தச் சிறிய கட்சிகளைக்கூட வைத்துக் கொண்ட காங்கிரசின் நோக்கம் தனிமைப்பட்டுவிடவில்லை என்ற தோற்றத்தை உருவாக்கத்தான்.

ஆனால் இந்த முறை அதுகூட சாத்தியமில்லாமல் காங்கிரஸ் தனிமைப்பட்டுக் கிடக்கிறது. அது எப்போதுமில்லாமல் இப்போது தனிமைப்பட்டுக் கிடக்கிறது என்பதை அதன் மூத்த தலைவர்களில் ஒருவரான ப.சிதம்பரம் பகிரங்கமாகவே தொண்டர்கள் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்.

தனித்துப் போட்டி?

நான் சமீபத்தில் என் மகன் நடிக்கும் 'சகாப்தம்' படத்திற்கு பூஜை போட்டேன். ஆனால், அதுவரைக்கும் அது யாருக்காவது தெரியுமா? அதேபோல், என் மனதில் ஒரு ரகசியம் உள்ளது. அதை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. இன்றைக்கு ஊடகங்கள், தேமுதிக அந்தக் கட்சியுடன் கூட்டணி, இந்தக் கட்சியுடன் கூட்டணி என்று கூறுகின்றன. நாங்கள் தனித்து நின்றால் என்ன செய்வீர்கள்? அதனால், பொறுத்திருந்து பாருங்கள்.

- ஜனவரி 3-ஆம் தேதி பொதுக்குழுக் கூட்டத்தில் விஜயகாந்த்.

இந்த நிலையை மாற்ற, காங்கிரசின் மற்றொரு முக்கியத் தலைவரான ஜி.கே. வாசன் முயற்சிகள் மேற்கொண்டதாகத் தெரிகிறது.

தேமுதிகவை தன் பக்கம் இழுத்துக்கொள்ள திமுக முயற்சிப்பதாக செய்திகள் வெளியான ஒரு வாரத்திற்குப் பிறகு டிசம்பர் 30-ஆம் தேதி விஜயகாந்த்தை வீடு தேடி சென்று சந்தித்திருக்கிறார் ஜி.கே.வாசன், திரைத்துறையில் அறிமுகமாகவிருக்கும் விஜயகாந்த்தின் மகன் சண்முகப் பாண்டியனுக்கு வாழ்த்துச் சொல்லச் சென்றதாக வெளியில் சொல்லப்பட்டாலும், கூட்டணி குறித்துப் பேச்சுக்கள் நடந்ததாகத் தெரிகிறது. அவர்கள் இருவரும் 1 மணி நேரம் பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள். எனவே கூட்டணி குறித்துப் பேசியிருக்க வாய்ப்புண்டு.

திமுகவிற்கும் தேமுதிகவிற்குமிடையே, யார் பெரியவர் என்ற ஈகோ பிரசினை இருந்ததைப் போல ('ஒரு விமானத்தில் 2 கேப்டன்கள் இருப்பார்கள். ஒரு கேப்டனுக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டால் இன்னொரு கேப்டன்தான் காப்பாற்றுவார். எனவே இன்னொரு கேப்டனை சேர்த்துகொள்வது தவறு இல்லை' என்று எஸ்றா சற்குணம் பேசியது இதற்கு ஒரு சான்று). காங்கிரசிற்கும் தேமுதிகவிற்கும் இடையே பெரிய பிரச்சினைகள் கிடையாது .

மாநிலங்களவைத் தேர்தலின்போது தன்னுடைய வேட்பாளருக்கு காங்கிரசின் ஆதரவைக் கேட்டபோது அது அவருக்குக் கிடைக்கவில்லை. காங்கிரஸ் அப்போது திமுக வேட்பாளரான கனிமொழிக்கு ஆதரவளித்தது. அப்படி ஆதரவளிப்பதன் மூலம் திமுகவைத் தன் கூட்டணியில் தக்கவைத்துக் கொள்ள முடியும் என நம்பியது. ஆனால் அந்த நம்பிக்கை பொய்த்துப் போன நிலையில் தேமுதிகவுடன் உறவு கொள்வதில் பெரிய தடை ஏதும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் தில்லி சட்டமன்றத் தேர்தலில் தேமுதிக தனது வேட்பாளர்களை நிறுத்தியதுகூட காங்கிரசிற்கு எதிரான வாக்குகள் பாஜகவிற்கோ, ஆம் ஆத்மிக்கோ ஒட்டுமொத்தமாகச் சென்றுவிடாமல் பிரிப்பதற்குத்தான் என்று ஒரு கருத்து அரசியல் வட்டாரங்களில் உண்டு.

தேடி வந்த பாஜக

தனக்கென தனித்த பெரிய ஆதரவுத் தளம் தமிழகத்தில் இல்லாத நிலையில் தனது தலைமையில் ஒரு கூட்டணியை உருவாக்கிக் கொள்ள பாஜக முயல்கிறது. தேமுதிக, பாமக, மதிமுக ஆகியவை இடம் பெற்றால் அது தமிழகத்தின் பெரிய கட்சிகளுக்கு சவால் விடக்கூடியதாக இருக்கும் என்று அதன் நினைப்பு. இந்த எண்ணத்தை விதைத்தவர், அதற்காக கட்சிகளுக்கு இடையே தூது போனவர் தமிழருவி மணியன். வேறு எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேர இயலாத சூழ்நிலையில் இருக்கும் மதிமுக உடனடியாக இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தில்லி சென்று பாஜக தலைவர் ராஜ்நாத் சிங்கை சந்தித்து வந்துவிட்டது. அன்புமணி ராமதாசும் ராஜ்நாத் சிங்கை சந்தித்திருக்கிறார்.

ஆனால் விஜயகாந்த் தில்லி செல்லவில்லை. அவர்கள் வந்து சந்திக்கட்டுமே என்றிருந்தார். அவரது எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. புத்தாண்டு தினத்தன்று மதியம் 2 மணி அளவில் தமிழக பாஜக தலைவர் பொன். ராதாகிருஷ்ணன், தேசிய செயற்குழு உறுப்பினர் இல.கணேசன், மாநில பொதுச் செயலர் மோகன்ராஜுலு ஆகியோர் சென்னையில் உள்ள தேமுதிக அலுவலகம் சென்று விஜயகாந்த்தை சந்தித்தனர். ஒரு மணி நேரம் பேச்சுவார்த்தை நடந்தது. கூட்டணி உருவாகிவிடும் என்ற நம்பிக்கை பாஜக வட்டாரத்தில் தென்படுகிறது.

ஆனால் தேமுதிகவுடன் ஒரே அணியில் இடம் பெற பாமகவிடம் தயக்கம் நிலவுகிறது. அண்மையில் நடைபெற்ற அதன் செயற்குழுக் கூட்டத்தில் தேமுதிக மீது கடும்

பிளஸ் டூ தேர்வு எழுதும் மாணவர்களா நீங்கள்?

உங்களுக்கு வழிகாட்டுகிறது

புதிய தலைமுறை கல்வி

வெற்றிப் படிகள் 2013-14

தேர்வில் சிறக்க... வாழ்வில் சாதிக்க...

Presented by SKP ENGINEERING COLLEGE THIRUVANNAMALAI

Powered by Agni College of Technology OMR, Chennai

- +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற அனுபவமிக்க ஆசிரியர்களின் ஆலோசனைகள்.
- +2 படித்த பிறகு அடுத்து என்ன படிக்கலாம்? வெற்றிப் பாதைக்கு வழிகாட்டும் தகவல்கள்.

அனுமதி இலவசம்!

தேதி	இடம்	தொடர்புக்கு
11.1.2014	VSB இன்ஜினியரிங் காலேஜ், கோவை ரோடு, கரூர்.	80560 07209
11.1.2014	பிரான்சிஸ் சேவியர் இன்ஜினியரிங் காலேஜ், வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி.	95000 19430
11.1.2014	நாடார் சரஸ்வதி காலேஜ் ஆஃப் இன்ஜினியரிங் & டெக்னாலஜி, தேனி.	80560 07208
18.1.2014	SVS காலேஜ் ஆஃப் இன்ஜினியரிங், மயிலேறிபாளையம், பொள்ளாச்சி ரோடு, கோயம்புத்தூர்.	95000 19432
25.1.2014	SKP இன்ஜினியரிங் காலேஜ், திண்டிவனம் ரோடு, திருவண்ணாமலை	99400 24559
25.1.2014	இமயம் இன்ஜினியரிங் காலேஜ், கண்ணனூர், துறையூர், திருச்சி.	87544 17328
25.1.2014	கப்புராயலு ரெட்டியார் திருமண மண்டபம், பாண்டி ரோடு, கடலூர்.	95000 19437
25.1.2014	மதர் தெரசா இன்ஜினியரிங் காலேஜ், வாகைக்குளம், தூத்துக்குடி.	95000 19430

Associate Sponsors: NPR

Local Sponsors: SVS, SHIVANI, SURYA, IMAYAM ENGINEERING COLLEGE THURAIYUR, TRICHY DT., SRI VENKATESWARA COLLEGE OF ENGINEERING & TECHNOLOGY, JAYALAKSHMI INSTITUTE OF TECHNOLOGY, SCAD GROUP OF INSTITUTIONS, PONDICHERRY ALPHA College of Engineering & Technology, RENGANAYAGI VARATHARAJ COLLEGE OF ENGINEERING, Dr. NAVALAR NEDUNCHEZHIYAN COLLEGE OF ENGINEERING, LIMRA, CHENDHURAN

நியூ ஜெனரேஷன் மீடியா கார்ப்பொரேஷன் பிரைவேட் லிமிடெட்,

தொலைபேசி: 044-45969701, ஃபேக்ஸ் 044-45969536 / இணையதளம்: www.puthiyathalaimurai.tv / இ-மெயில்: events@newgenmedia.in

Moyavi2World.com

விமர்சனங்கள் வைக்கப்பட்டதாகத் தெரிகிறது. தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைதாகி சிறை மீண்ட தொண்டர்களுக்கான பாராட்டு விழாவில் பேசிய ராமதாஸ், 'நடிகரே தனது கட்சியை பட்டமரம் எனக் கூறிக் கொள்கிறார்' என்று 'கமெண்ட்' அடித்திருக்கிறார்.

டிசம்பர் 23-ஆம் தேதி துவங்கி ஜனவரி 1-ஆம் தேதிக்கு இடைப்பட்ட ஒரு வாரத்தில் விஜயகாந்த்திற்கு மூன்று பெரிய கட்சிகளிடமிருந்து வெளிப்படையாகவே அழைப்புகள் வந்துள்ளன. இப்படி அவருக்கு ஏற்பட்டுள்ள 'டிமாண்ட்'டிற்கு என்ன காரணம்?

தனிமைப்பட்டுவிடுவோம் என்ற அச்சம் ஒரு காரணம் என்றால் வாக்குக் கணக்குகள் இன்னொரு காரணம்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், தேமுதிக 9 தொகுதிகளில் ஒரு லட்சம் வாக்குகளையும், 19 தொகுதிகளில் 75 ஆயிரம் வாக்குகளையும் பெற்றது. சில தொகுதிகளில் வெற்றி பெற்றவருக்கும் அவரையடுத்து வந்தவருக்குமிடையே இருந்த வாக்கு வித்தியாசத்தைவிட தேமுதிக பெற்ற வாக்குகள் அதிகம். அதாவது அங்கு களத்தில் தேமுதிக இல்லாதிருந்தால் தோல்வியடைந்தவர் வெற்றி கண்டிருக்கக் கூடும்.

சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் 39 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்டது. அந்தத் தேர்தலில் அது 30.73 லட்சம் வாக்குகள் பெற்றது. அந்தத் தேர்தலில் பதிவான மொத்த வாக்குகள் 3.02 கோடி. அந்த அடிப்படையில் பார்த்தால் அது பெற்ற வாக்குகள் சுமார் 10 சதவீதம். 2006 சட்டமன்றத் தேர்தலில் அது தனித்துப் போட்டியிட்ட பெற்ற வாக்குகளை விட (8.38%) அதிகம். 2011 தேர்தலில் தேமுதிகவுடன் கூட்டணியை அதிமுக விரும்பியதற்கு இதுவும் ஒரு காரணம்.

ஆனால் அதெல்லாம் பழைய கதை. சமீபகாலமாக அதன் செல்வாக்கு சரிந்திருக்கிறது என்கிறார்கள் தேமுதிகவின் விமர்சகர்கள். டிசம்பர் 23-ஆம் தேதி கட்சி நடத்திய கிறிஸ்துமஸ் விழாவில் விஜயகாந்த், 'தேமுதிகவில் மரங்கள் பட்டுப்போய் விட்டதாக (எம்எல்ஏக்கள் சென்று விட்டதாக) மற்றவர்கள் குறை சொல்கிறார்கள். பட்டுப்போன மரங்கள்தான் மீண்டும் துளிர்க்கும்' எனப் பேசியதைச் சுட்டிக் காட்டுகிறார்கள்.

என்ன நடக்கும்?

விஜயகாந்த் பெரிய திட்டங்களோடு காய்களை நகர்த்துபவர் இல்லை என்றும் மனதில் பட்டதைச் சட்டென்று அறிவிப்பவர் (impulsive) என்றும் அவருக்கு ஒரு இமேஜ் உண்டு. ஆனால் அது உண்மையில்லை. 2005 ஏப்ரல் மாதம்தான் அவர் கட்சி தொடங்கினார். ஆனால் அதற்கு முன்னரே 1993-ஆம் ஆண்டே அவரது ரசிகர் மன்றத்தினரை உள்ளாட்சித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட வைத்து தனது பலத்தை உறுதி செய்து கொண்ட பின்தான் அரசியலுக்கு வந்தார். அதே போல இந்த மக்களவைத் தேர்தலையும் 2016-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கான முன்னோட்டமாகப் பயன்படுத்திக் கொள்வார் என்கிறார்கள் சில அரசியல் நோக்கர்கள்.

திமுகவுடன் கூட்டணி என்றால் 15 இடங்களும், மாநிலங்களவையில் 2 இடங்களும் மற்ற எந்தக் கட்சியுடன் கூட்டணியானாலும் தனக்கு 20 இடங்கள் வரை தர வேண்டும் என அது கோருவதாகத் தெரிகிறது. காங்கிரஸைத் தவிர அது எந்தக் கூட்டணிக்கும் சாத்தியமில்லை. பாமக கூட்டணிக்கு வரவில்லை என்றால், திமுகவிற்கு கொடுக்கப்பட்டுள்ள 'ஃபார்முலாவை (15+2) பாஜக பரிசீலிக்கக் கூடும் எனத் தெரிகிறது. பாஜக கூட்டணிக்குள் மதிமுக வருவதை சுப்ரமணிய சுவாமி எதிர்ப்பதாகவும் ஜனவரி 17-ஆம் தேதி தில்லியில் நடைபெறவிருக்கும் செயற்குழுக் கூட்டத்தில் இதைக் குறித்துப் பேசவிருப்பதாகவும் சில செய்திகள் சொல்கின்றன.

பிப்ரவரி இரண்டாம் வாரத்தில் நரேந்திர மோடி சென்னை வரவிருக்கிறார். அதற்குள் கூட்டணியை விரைவில் இறுதி செய்து மேடையில் ஏற்ற விரும்புகிறது பாஜக. ஆனால் விஜயகாந்த்தோ பிப்ரவரி 5-ஆம் தேதி உளுந்தூர்பேட்டை மாநாட்டில்தான் கூட்டணியை அறிவிப்பார் போலிருக்கிறது.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

இந்த வாரக் கேள்வி:

தமிழக மீனவர்களுக்கு துப்பாக்கியும், அதைக் கையாள பயிற்சியும் கொடுக்க வேண்டுமென்று பழ.நெடுமாறன் கூறுவது...

A. நியாயம்தான்

B. விபரீத யோசனை

C. கருத்து இல்லை

உங்கள் பதிலை **56161** என்ற எண்ணிற்கு **PTM** (இடைவெளி விட்டு) **TFG** (இடைவெளி விட்டு) **A** அல்லது **B** அல்லது **C** என்று டைப் செய்து 12.01.2014-ஆம் தேதிக்குள் எஸ்.எம்.எஸ். அனுப்புங்கள். **www.puthiyathalaimurai.com** இணையதள முகவரிக்குச் சென்றும் இந்தக் கணக்கெடுப்பில் வாக்களிக்கலாம்.

- ஆசிரியர்

மினிஸ்டர் ஒயிட்

பிரீமியம் ரெடிமேட் ஷர்ட்டுகள், வேஷ்டிகள், பனியன்கள் மற்றும் ஜட்டிகள்

Minister® White
PREMIUM COLLECTIONS

இந்தியாவின் மிக சிறந்த மில்களின் முதல் தரமான காட்டன் துணிகளாலும் இத்தாலியன் காட்டன், கிஸா காட்டன் போன்ற உயர்ந்த ரக துணிகளாலும் மட்டுமே தயாரிக்கப்படுவது மினிஸ்டர் ஒயிட் பிரீமியம் ரெடிமேட் ஷர்ட்டுகள்.

மினிஸ்டர் ஒயிட் பெயரில் போலியாக துணிகள்

நாங்கள் எந்த ஒரு கடைக்கும் மினிஸ்டர் ஒயிட் என்ற பெயரில் துணிகளாக கொடுப்பதில்லை, மினிஸ்டர் ஒயிட் ரெடிமேட் ஷர்ட்டுகளாக மட்டுமே கிடைக்கும்.

மினிஸ்டர் ஒயிட் குருப்பின் தயாரிப்புகள்

CEE YES™ COTTONS | abran™ SHIRTS & TROUSERS

www.ministerwhite.com

தொடர்புக்கு:
யூசுப்: 090947 56665 | விஜய்: 090947 62044

மொத்த விற்பனை நிலையம்

NEW LOOK GARMENTS (INDIA) PRIVATE LIMITED

M.K.V. டவர், 2வது மற்றும் 3வது மாடி,
3, பர்கிட்ரோடு, தி.நகர், சென்னை - 600 017.
போன்: 044-24361746

குறிப்பு: மொத்தமாக வாங்குவோருக்கு சிறப்பு தள்ளுபடி உண்டு.

Moviezzworld.com

சேலஞ்ச் 2013

நடக்க வைத்த 'புதிய தலைமுறை'

டி.எம். பத்மநாபன், பெரம்பூர், சென்னை



என் வயது எழுபத்தி ஒன்பது. நான் ரயில்வே துறையில் பணியாற்றினேன். ஓய்வு பெற்று 20 ஆண்டுகள் ஆகின்றன. விதவிதமான பிள்ளையார் சிலைகளை சேகரிப்பதும் புகைப்படம் எடுப்பதும் எனது பொழுதுபோக்கு. உடலின் மேல் எனக்கு பெரிய அளவுக்கு அக்கறை இருந்தது இல்லை. நண்பர்கள், உறவினர்கள் எல்லாம் அறிவுரை கூறியும் நான் கேட்கவில்லை. எனது நண்பர்கள் பலர் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க... நான் மட்டும் ரத்தக் கொதிப்பால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தேன். இப்படியே விட்டால் சர்க்கரையும் வரும் என்று பலரும் கூறினார்கள். அந்தச் சமயம்தான் நமது 'புதிய தலைமுறை'யின் நியூ இயர் சேலஞ்ச் பார்த்தேன்.

தினமும் தவறாமல் நடைப்பயிற்சி மேற்கொள்வேன் என்று எழுதி ஜெராக்ஸ் எடுத்து காலையில் எழுந்ததும் எனது கண்ணில் படுமாறு ஒட்டி வைத்தேன். ஒரு நான்கு 5 நாட்கள் சென்றவுடன் காலை 5 மணிக்கு தூக்கத்தை விட்டு வாக்கிங் போகவேண்டுமா என்றெல்லாம் யோசித்தேன். ஆனால், எனது மகனும் மருமகளும் என்னை உற்சாகப்படுத்தி சரியான நேரத்தில் எழுப்பி வாக்கிங் அனுப்பினார்கள். வீட்டில் ஒட்டிவைத்த ஜெராக்ஸும் என்னை எழுந்து நடக்கச் சொல்லி உற்சாகப்படுத்தியது. தொடர்ந்து ஒரு மாதம் வாக்கிங் போன பின் நன்கு பழக்கமாகிப் போனது. யாரும் எழுப்பாமலேயே நான் எழுந்து செல்ல ஆரம்பித்தேன். ஒரு நாளின் மிகப்பிடித்த நேரமாக எனது வாக்கிங் நேரமே இருக்கிறது. புதிய நண்பர்களையும் நல்ல ஆரோக்கியத்தையும் இந்த வாக்கிங் வழங்கியுள்ளது.

முதலில் மூன்று வேளை ரத்தக் கொதிப்புக்கு மாத்திரை எடுத்து வந்தேன். நடைப்பயிற்சிக்குப் பிறகு, இப்போது இரண்டு வேளை எடுத்தால் போதும் என்று மருத்துவர் சொன்னார். மேலும் கடைசி வரை எனது வேலைகளை எல்லாம் யார் உதவியும் இல்லாமல் என்னாலேயே செய்யமுடியும் என்கிற நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது. சமீபத்தில் எனது பேரனுக்குப் பெண் பார்க்கச் சென்றபோது, 'தாத்தான்னா கம்பு வெச்சு நடந்து வருவார்ன்னு பார்த்தோம். நீங்க இவ்ளோ ஸ்மார்ட்டா இருக்கீங்க' என்று கிண்டலடித்து, பெண் வீட்டார் வெட்கப்பட வைத்தார்கள். இதற்கு எல்லாம் முக்கிய காரணம் 'புதிய தலைமுறை' தான். அதற்கு எத்தனை நன்றிகள் சொன்னாலும் தீராது. இந்த ஆண்டும் அந்தச் சபதத்தைத் தொடர நினைத்ததோடு அல்லாமல் நண்பர்களையும் அழைத்துச் செல்ல முடிவெடுத்திருக்கிறேன்.

கடந்த ஆண்டு, 'புதிய தலைமுறை' புத்தாண்டுச் சிறப்பிதழில் [03 ஜனவரி 2013] வாசகர்களுக்கு நியூ இயர் சேலஞ்ச் அறிவித்திருந்தோம். அதாவது, 2013 -ஆம் ஆண்டு பிறக்கும்போது, நீங்கள் ஒரு சபதம் எடுக்க வேண்டும். அதை அந்த அறிவிப்பு வெளியான பக்கத்தில் எழுதி வைத்து ஆண்டு முழுவதும் பின்பற்றி வரவேண்டும். ஆண்டின் முடிவில் நீங்கள் எடுத்துக் கொண்ட சபதத்தை நிறைவேற்றியிருந்தால் எங்களுக்கு எழுதி அனுப்புங்கள் என்று கூறியிருந்தோம். 2014-ஆம் ஆண்டு பிறந்துவிட்ட நிலையில், கடந்த வாரம் நமது அலுவலகத்துக்கு சேலஞ்சில் களம் இறங்கியவர்கள் கடிதம் எழுதியிருந்தனர். அதில் இரண்டு கடிதங்களை தேர்ந்தெடுத்து சர்ப்ரைஸ் விசிட் அடித்து அவர்களைச் சந்தித்தோம். அவர்களிடம் பேசியதிலிருந்து...

உதவினால் படுத்தவுடன் உறங்கலாம்

ஏ.வி.குமார், அனகாபுத்தூர், சென்னை

2013-ஆம் ஆண்டு இரண்டு சபதங்கள் எடுத்தேன். ஒன்று, தினமும் காலை நடைப் பயிற்சி செய்வது. இன்னொன்று, தினமும் ஒருவருக்காவது உதவி செய்வது. இதில் முதல் சபதத்தைப் பல காரணங்களால் தொடர முடியவில்லை. ஆனால், இரண்டாவது சபதத்தை நிறைவேற்றியே தீர்வது என்று உறுதி பூண்டேன். நமது 'புதிய தலைமுறை' இதழில் வந்த நியூ இயர் சேலஞ்ச் பக்கத்தில் அதை எழுதி ஜெராக்ஸ் எடுத்து எனது வீட்டில், அலுவலகத்தில், எனது மெடிக்கல் ஷாப்பில் என எல்லா இடங்களிலும் ஒட்டிவைத்தேன். நான் முன்பே சமூக சேவையில் ஈடுபட்டிருந்தேன். எங்கள் ஏரியாவின் முன்னாள் கவுன்சிலர் திருமதி.பார்வதி குமாரசாமி இறக்கும் தருவாயில், தனது வீட்டை விற்று, அதில் வந்த 6 லட்சம் ரூபாயை என்னிடமும் என் நண்பர்களிடமும் கொடுத்து ஏழை மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கூறினார். அதை வங்கியில் சேமித்து அதில் வரும் வட்டியைக் கொண்டு அவர்களது ஒவ்வொரு நினைவு நாளிலும் எளிய மக்களுக்கு உதவி செய்து வந்தேன். இதைக் கண்ட புனித வேலு என்பவர், தனது கடைசிக் காலத்தில் 5 லட்சம் ரூபாயை என்னிடம் கொடுத்து, இதேபோல் வருடா வருடம் அரசு பள்ளிக் குழந்தைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கூறினார். அதன் பிறகு அதையும் தொடர்ந்து செய்து வந்தேன். இது எல்லாம் நண்பர்களின் உதவியோடு வேறொருவரின் பணத்தில் செய்கிறோம், நாமே தனியாக எதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தபோதுதான் இந்த சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது. தேவைப்படுபவர்களுக்கு உதவி செய்வதில் உள்ள மனத் திருப்தி வேறு எதிலும் வராது. தினமும் அடுத்தவர்களுக்கு உதவி செய்தால் நீங்கள் படுத்த உடன் தூக்கம் வரும். உங்களுக்கு இருக்கும் தனிப்பட்ட பிரச்சினை கூட மறைந்து விடும். நான் மெடிக்கல் ஷாப் வைத்திருப்பதால் அதிகபட்சம் மருத்துவ உதவியே செய்கிறேன். எங்கள் தெருவில் வசிக்கும் ஒருவருக்கு வாரா வாரம் டயாலிசிஸ் செய்ய வேண்டியது இருக்கும். ஒரு வாரம் அவருக்கு உதவி செய்தேன். தொடர்ந்து உதவி செய்ய பொருளாதாரம் இடம் தரவில்லை அதனால் ஏ.எஸ். மாணிக்கம் அறக்கட்டளைக்கு அந்த நபரை அறிமுகப்படுத்தி வைத்தேன்.

இப்போது ஒவ்வொரு வாரமும் அவர்கள் அவருக்கு உதவுகிறார்கள். நான் உதவி செய்வது தெரிந்து ஒரு முறை வந்தவர்கள் புதிதாக ஒருவரைக் கூட்டி வருகிறார்கள். அவர்களுக்கு மருந்து கொடுத்து செலவுக்கு 100 ரூபாயும் கொடுப்பேன். இன்று கூட ஓர் அம்மா தனக்குத் தெரிந்த இன்னொருவரை அழைத்து வருவதாகச் சொல்லியிருக்கிறார். சிறு குழந்தைகளின் பள்ளிப் படிப்புக்கு உதவி செய்வதும் உண்டு. பணத்தை பெற்றோர்களின் கையில் கொடுக்காமல் நேரடியாக பள்ளியிலேயே கட்டிவிடுவேன். இதனால் எல்லோர் மத்தியிலும் நல்ல மதிப்பு இருக்கிறது. இதற்கு எல்லாம் 'புதிய தலைமுறை' தான் காரணம். என்றாவது ஒரு நாள் வேலைப் பளுவால் உதவி செய்யாமல் விட்டால்கூட இந்த ஜெராக்ஸைப் பார்த்ததும் நினைவு வந்து யாரையாவது தேடிப் போய் உதவி செய்துவிட்டு வருவேன். இந்த ஆண்டும் இதைத்தொடர நினைத்திருப்பதால் அந்த ஜெராக்ஸை இன்னும் கழட்டாமல் அப்படியே வைத்திருக்கிறேன்.

படங்கள் : **க. அறிவழகன்**

மகுடம் சூடிய குட்டி இளவரசன்!

'புதிய தலைமுறை' புத்தாண்டுச் சிறப்பிதழில் நட்சத்திரம் 2013 பட்டியலில் விளையாட்டுத்துறையில் தன்னுடைய சிறப்பான சாதனைகளுக்காக இடம் பிடித்திருந்த 7 வயதே ஆகும் செஸ் வீரர் பிரக்னானந்தா பற்றி எழுதியிருந்தோம். சென்றவாரம் துபாயில் நடந்து முடிந்த உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் 8 வயதிற்குட்பட்டோருக்கான பிரிவில் உலக சாம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளார் இந்த லிட்டில் சாம்பியன். ஸ்டாண்டர்ட் மற்றும் பிளிட்ஸ் என இரண்டுவகைப் போட்டிகளிலும் இவர்தான் உலக சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். தான் விளையாடிய 11 போட்டிகளிலும் வென்று சாம்பியன் பட்டத்தை இவர் வென்றது மிகப்பெரிய சாதனையாகக் கருதப்படுகிறது.

Maxwell.com

தடகளத் தங்க மங்கை!

சென்ற ஆண்டு விளையாட்டுத் துறையில் தன்னுடைய சாதனைகளுக்காக, 'புதிய தலைமுறை'யின் தமிழன் விருது பெற்றவர் தடகள வீராங்கனை காயத்ரி. ஏழ்மையான சூழலிலிருந்து வளர்ந்து சர்வதேச அளவில் வெற்றிகள் பெற்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்தவர் இந்த இளம் வீராங்கனை. சென்ற ஆண்டு தமிழக அரசு 5 இளம் வீரர்களை தேர்ந்தெடுத்து ஒலிம்பிக் போட்டிகளுக்காக தயார் செய்துவருகிறது. அந்த 5 பேரில் ஒருவராக காயத்ரி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஒலிம்பிக்கில் தங்கம் வெல்லும் முனைப்போடு தயாராகிக் கொண்டிருக்கிறார்.

மணிகண்டன் IAS அகடமி

அரசு வேலை பெற வேண்டும் என்பது அனைவரின் கனவு. அந்தக் கனவை நிஜமாக்கிக் கொண்டிருக்கிறது **மணிகண்டன் IAS அகடமி.** சென்னை திருமங்கலத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் அதன் நிறுவனர் **V. மணிகண்டன்** கூறியதாவது; எங்களது நிறுவனத்தில் அனைத்து போட்டித் தேர்விற்கும் புதிய பாடத் திட்டத்தின்படி சிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசால் நடத்தப்படும் IAS / IPS மற்றும் IFS (Indian Forest Services) தேர்வுகளில் எங்கள் நிறுவனத்தில் பயிற்சி பெற்ற மாணவர்கள் இந்திய அளவில் முதல் இடங்களில் தேர்ச்சி பெற்று பல மாநிலங்களில் பணியாற்றி வருகின்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் IAS/IPS-2015க்கான வகுப்புகள் வரும் 8.1.2014 (புதன்கிழமை) அன்று தோடங்கவுள்ளன.

மேலும் TNPSC நடத்தும் Gr. I, Gr. II மற்றும் VAO தேர்வுளிலும் முதலிடத்தில் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். தற்போது இதற்கான வகுப்புகள் அனுபவம் மிக்க ஆசிரியர்களை கோண்டு சமச்சீர் பாடத் திட்டத்தின்படி நடத்தப்படுகின்றன.

நீங்களும் அரசு அதிகாரியாக பணிபுரிய வேண்டும் என்ற கனவு உடையவராக இருந்தால், 5.01.2014 (ஞாயிற்றுக்கிழமை) அன்று தோடங்க இருக்கும் மேலும் TNPSC Gr. I \ II, பயிற்சி வகுப்புகளில் கலந்து கோண்ட உங்கள் கனவை நனவாக்கிடுங்கள்.

மேலும் விவரங்களுக்கு 9840634068, 9791163423, 9865164295 என்ற எண்களிலும் www.monikandaniasacademy.in என்ற இணையதள முகவரியிலும் தோடர்பு கோள்ளலாம்.

பயிற்சி வகுப்பில் கலந்து கொள்பவர்கள் முன்பதிவு செய்து கொள்ளவும்.
UPSC, Gr. I, Gr. II Mains, Gr. IIA, VAO, TET வகுப்புகள் சேர்க்கை நடைபெறுகிறது.

Advt.

எப்படி?

இவள் பாரதி

வாடகை வீட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது எப்படி?

இன்றைக்கு வாடகைக்கு வீடு கிடைப்பதே பிரச்சினையாக இருப்பது ஒருபுறம். அப்படியே கிடைத்தாலும் சொல்லும் கண்டிஷனுக்கெல்லாம் ஆமாம் போட்டுவிட்டு குடியேறினால் அடுத்த வருடமே வாடகையை உயர்த்துவது, மின்சாரக் கட்டணம் அதிகமாகக் கேட்பது எனப் பல பிரச்சினைகளை அடுத்தடுத்து சந்திக்க வேண்டியிருக்கிறது. இது தவிர வாடகைக்குக் குடிவருபவர்களும் சில பிரச்சினைகளை ஏற்படுத்துவதுண்டு. எனவே வாடகை வீட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது எப்படி எனத் தெரிந்துகொள்வோம்.

முன்பணம்

வீட்டுக்கான முன்பணம் பெற வரம்பு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. சந்தை நிலவரத்தைப் பொறுத்தே பெறப்படுகிறது. சென்னை போன்ற நகரங்களில் மாத வாடகையைப்போல் பத்து மடங்கும் மற்ற நகரங்களில் சுமார் ஐந்து மடங்கும் முன்பணம் வாங்குகிறார்கள். அவரவர் சாமர்த்தியத்திற்கேற்றாற்போல் பேரம் பேசி குறைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

ஒப்பந்தம்

→ முதலில் வீட்டு உரிமையாளர் மற்றும் வாடகைக்கு வருபவர் அக்ரிமெண்ட் / ஒப்பந்தம் எழுதிக் கொள்வது அவசியம். 20 ரூபாய் முத்திரைத்தாளில் முன்பணம், மாத வாடகை எவ்வளவு எனத் தெளிவாக ஒப்பந்தம் எழுதிக் கொள்வது மிக அவசியம்.

→ ஒப்பந்தத்தில் முன்பணம், மாத வாடகை, மின் கட்டணம், தண்ணீர்க் கட்டணம், பராமரிப்புக் கட்டணம் தவிர வேறு ஏதாவது கட்டணங்கள் இருந்தால், அதையும் கட்டாயம் குறிப்பிட வேண்டும். அதில் ஏதாவது மாற்றம் செய்ய வேண்டும் என்றால், இரு தரப்பினரும் சேர்ந்துதான் மேற்கொள்ள முடியும்.

ரசீது

வாடகைக்குப் குடியிருப்பவர் முன்பணம் தொடங்கி, அனைத்துக்கும் உரிமையாளரிடம் ரசீது பெற்றுக் கொள்வது அவசியம். இதற்கென அச்சடித்த ரசீதுகள் எதுவும் தேவையில்லை. சாதாரண வெள்ளைத் தாளில் எழுதி வாங்கிக் கொண்டாலே போதுமானது. தேவைப்பட்டால், ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டியும் வாங்கிக் கொள்ளலாம்.

வாடகை அதிகமாக வசூலித்தால்:

→ தாம் கொடுக்கும் வாடகை அதிகம் என்று குடியிருப்பவர் நினைத்தால், சிறு வழக்கு நீதிமன்றத்தில் மனு போடலாம். அதன் பின்னர், குடியிருப்பவர் ஒரு என்ஜினீயரையும் வீட்டு உரிமையாளர் ஒரு என்ஜினீயரையும் வைத்து, வீட்டின் மதிப்பைக் கணக்கிட்டு அவரவர்களுக்குச் சாதகமாக சமர்ப்பிப்பார்கள். எது சரி? எது தவறு என்பதை இரண்டு என்ஜினீயர்களும் கொடுத்த விவரங்களிலிருந்து சரி பார்த்து தீர்ப்பு வழங்குவார்கள்.

→ வீட்டின் உரிமையாளர் வாங்கும் வாடகை நியாயமானது இல்லை என்கிறபோது சென்னைவாசிகள் என்றால், சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் இருக்கும் சிறு வழக்கு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம். மற்ற மாவட்டத்திலுள்ளவர்கள், முன்ஷிப் நீதிமன்றங்களை அணுகலாம்.

வீட்டைக் காலிசெய்ய வைக்க:

→ தமிழ்நாடு கட்டிடங்கள் சட்டம் 1960, பிரிவு 10/2-யின்படி குடியிருப்பவர் வாடகை கொடுக்காமல் இருப்பது, உள் வாடகை அல்லது மேல் வாடகைக்கு விடுவது, வீட்டு உரிமையாளரை நீ ஒனரே இல்லை எனச் சொல்வது, மூன்று மாதங்களுக்கு மேல் வீட்டைப் பூட்டியே வைத்திருப்பது, வீட்டை சேதப்படுத்துவது போன்ற காரணங்களுக்காக குடியிருப்பவரை காலி செய்யச் சொல்ல முடியும்.

+2 கட் ஆப் குறைவா? கவலை வேண்டாம்

AIPMT-2014 மே 4ல் தேர்வு எழுதி MBBS.

JEE-IIT/NIT Main & Advance. விடுதி வசதி உண்டு ✓

10th Std

படியுங்கள் Bridge Course 10th Std Exam 2014 April தேர்வு எழுதிய பிறகு 11th std PCM, PCB, CBSE - NCERTY BOOK for AIIMS/ JIPMER/AIPMT/JEE, Etc. என 43 நாட்கள். ஆபெ விடுதி. முன்பதிவு ✓

Join SUCCESS GUARANTED PROG. (SGP)
Medical AIPMT for 10 Pass & 11th Joing

8 & 9th FOUNDATION COURSE (F2)

6 & 7th FOUNDATION COURSE (F1)

Engg. & Medical Use Holidays & Vocation

IIT MBBS MAKERS

Since 1997 @ 38, M. Pur, Bikaji Complex, Ring Rd, N.Delhi.

Head Off : 18, PMS Complex, Sakti Ngr, ஈரோடு–12

கிளை : சாரதா காலேஜ் ரோடுஇராமகிருஷ்ண சிக்னல், Salem-07

கிளை : 97, Robertson Rd, நேரு வித்யாலயா பள்ளி எதிரில் R.S. Puram, Coimbatore-2.

CEO
K.CHELLAMUTTHU
M.Phil., M.Sc.,MBA., B.Ed.(Ph.D)
20Yrs CBSE - AIPMT @ N.Delhi
iitmbbsmakers@gmail.com

Erode : 96984 30004 Coimbatore : 98656 30004 Salem : 88830 30004

10,000 20,000

பொக்கிஷம்

பக்கம் 585

தமிழக அரசு (A to Z)

(அனைத்து துறைகளின் சேவைகள் மற்றும் சலுகைகள் முழுவிவரம்)

- TNPSC
- வருவாய்த்துறை (Revenue Department)
- காவல்துறை (Police Department)
- பதிவுத்துறை
- சென்னை மாநகராட்சி
- ரியல் எஸ்டேட் (சட்ட பாதுகாப்பு)
- தபால்துறை (Postal Department)
- ஆயுள் காப்பீடு (Life Insurance)
- பாஸ்போர்ட் (A to Z)
- விசா (Visa)
- ரயில்வே துறை (Railway Department)
- வாக்காளர் அடையாள அட்டை
- வருமான வரித்துறை (Income Tax Department)
- சேவை வரி (Service Tax)
- வங்கி A to Z தகவல்கள்

₹ 350

செல்: 99412 01410

விமர்சனங்களுக்கு நன்றி தினத்தந்தி மக்கள் குரல் தி இந்து தின இதழ் துக்ளக்

தகவல் அறியும் உரிமைச் சட்டம்

Rs.100

பொக்கிஷம்

முக்கிய விண்ணப்பப் படிவங்கள்

(அரசுத் துறைகளில் பொதுமக்கள் பயன்படுத்த வேண்டிய முக்கிய விண்ணப்பப் படிவங்களின் தொகுப்பு)

IMPORTANT APPLICATION FROMS

₹ 350

100-க்கும் மேற்பட்ட விண்ணப்பப் படிவங்கள்

வடகரை செல்வராஜ்

3 புத்தகங்களையும் வாங்கி பயனடையுங்கள்

மேற்கண்ட நூல்கள் கல்வி பயிலும் அனைவர் வீட்டிலும் இருக்க வேண்டிய பொக்கிஷம்.
தபால் செலவு முற்றிலும் இலவசம்

ரேவதி பப்ளிகேஷன்ஸ் 76, பாரதீஸ்வரர் காலனி, 2-வது தெரு, கோடம்பாக்கம், சென்னை-24.

வாடகை வீடு சட்டம்:

தமிழகக் கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டப்படி ஒரு வீட்டின் வாடகை என்பது அந்த வீட்டின் ஒட்டு மொத்த மதிப்பை வைத்து நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு வீட்டின் மதிப்பென்பது நில மதிப்பு மற்றும் கட்டிட மதிப்பைக் கணக்கிட்டு வருவதாகும். இப்படி கணக்கிட்டுக் குடியிருப்புக்கு 9 சதவிகிதமும், குடோன், கடை போன்ற கமர்ஷியலுக்கு 12 சதவிகிதமும் வாடகை நிர்ணயிக்க வேண்டும் (அதாவது ஒரு வீட்டின் மதிப்பு 10 லட்சம் என்றால் 9 சதவிகிதம் வைத்துக் கணக்கிட வேண்டும். வருடத்திற்கு 90,000 ரூபாய் வரும். 12 மாதங்களுக்குப் பிரித்தால், மாதத்திற்கு 7,500 ரூபாய் வரும்).

அடுத்து, கட்டிட மதிப்பு என்பது அதன் தளங்களைப் பொறுத்தது. மூன்று தளங்கள் இருக்கிறதெனில், முதல் தளத்திற்கு மொத்த நிலத்தின் மதிப்பையும் அந்தத் தளத்திற்கான கட்டிட மதிப்பையும் கணக்கிட வேண்டும். இரண்டாம் தளமென்றால், நிலத்தின் மதிப்பில் பாதியையும் மூன்றாவது தளமென்றால், நிலத்தின் மதிப்பில் மூன்றில் ஒரு பங்கையும் கணக்கிட வேண்டும்.

இத்துடன் ஒரு வீட்டின் கூடுதல் வசதிகளைப் பொறுத்து (கார் பார்க்கிங், லிஃப்ட், ஏசி, வாட்டர் ஹீட்டர், ஃப்ர்னிச்சர், எலிவேஷன், ஓவர் டேங்க் போன்றவை) கணக்கிட்டுக் கொள்ளலாம். கரண்ட் உள்ளிட்ட வசதிகளைப் பொறுத்து, மொத்த மதிப்பில் 7.5 சதவிகிதம்வரை வருடத்திற்கு நிர்ணயிக்கலாம்.

→ தமிழ்நாடு கட்டிடங்கள் சட்டம் 1960, பிரிவு 10/3-யின்படி வீட்டு உரிமையாளரின் வாரிசுகளுக்கு வீடு தேவை என்றாலோ, தன் சொந்தத் தேவைக்கு வேண்டுமென்றாலோ குடியிருப்பவரைக் காலி செய்யச் சொல்லலாம்.

→ தமிழ்நாடு கட்டிடங்கள் சட்டம் 1960, பிரிவு 14 பி-யின்படி வீட்டை இடித்துக் கட்ட வேண்டும் என்றால், அவரைக் காலி செய்யச் சொல்லலாம்.

குடியிருப்போருக்கும், வீட்டு உரிமையாளருக்கும் பிரச்சினை எனில்:

→ வீட்டு உரிமையாளருக்கும் குடித்தனக்காரருக்கும் இடையே ஏதாவது பிரச்சினை வந்து, பேச்சுவார்த்தையே இல்லாமல் போய்விடுவதும் உண்டு. அதுபோன்ற நேரங்களில், வீட்டு உரிமையாளரின் வங்கிக் கணக்கில் வாடகைப் பணத்தை போட்டு வரலாம்.

→ வங்கிக் கணக்கு பற்றிய விவரம் கிடைக்கவில்லை எனில், மணியார்டர் செய்யலாம். அதையும் வாங்க மறுத்து திருப்பி அனுப்பினால், சிறு வழக்கு நீதிமன்றத்தில் டெபாசிட் செய்து வந்தால், குடித்தனக்காரர் மீது வீட்டின் உரிமையாளர் குற்றம் எதுவும் சொல்ல முடியாது.

வீட்டு உரிமையாளர்களின் கவனத்திற்கு:

→ குடியிருப்பவர் வீட்டைக் காலி செய்ய வேண்டும் என்றால், குறைந்தது இரண்டு முதல் மூன்று மாதங்களுக்கு முன்னறிவிப்பு தரவேண்டும். இந்த விஷயத்தை ஆரம்பத்திலேயே அக்ரிமெண்ட்டில் எழுதிக் கொள்வது நல்லது. சொந்தக் காரணம், மகன்/மகளுக்கு வீடு தேவை என்பது போன்றவற்றுக்காக வீட்டை காலி செய்யச் சொல்லலாம்.

→ அதே நேரத்தில், வீட்டின் உரிமையாளருக்கு அந்தப் பகுதியில் வேறு ஒரு வீடு இருந்து, அது காலியாக இருக்கும் பட்சத்தில் வாடகைக்கு இருப்பவரைக் காலி செய்ய வைக்க உரிமை இல்லை. வீட்டை இடித்துக் கட்டுவது என்றால், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் அனுமதி வாங்கியதற்கான ஆதாரத்துடன்தான் வீட்டைக் காலி செய்யச் சொல்ல முடியும். வீட்டைக் காலி செய்த பிறகு இடிக்கவில்லை என்றால், ஏற்கெனவே வாடகைக்கு இருந்தவரை அதில் குடியமர்த்த வேண்டும்.

→ வீட்டை இடித்துக் கட்டிய பிறகும் பழைய வாடகைதாரர்கள் வீட்டைக் கேட்டால், அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். வீட்டின் உரிமையாளர் ஒருவேளை தவறான தகவல் கொடுத்து காலி செய்ய வைத்தால், குடியிருப்பவர் அதற்கான நஷ்டஈடு கோரலாம்.

→ இதேபோல், வாடகைக்கு இருப்பவர் சரியாக வாடகை தரவில்லை அல்லது வாடகையே தரவில்லை என்றாலும் வீட்டின் உரிமையாளர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம். வாடகை சரியாக தரவில்லை என்பதற்காக மின்சாரம், தண்ணீர் சப்ளையை நிறுத்துவது சட்டப்படி தவறு. நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தே இழப்பீடு பெற முடியும்.

மின் கட்டணப் பிரச்சினைக்கு:

வாடகை வீட்டில் குடியிருப்போரிடம் அதிக மின் கட்டணம் வசூலிப்பது சட்ட விரோதமானது. ஆதாரத்துடன் புகார் தெரிவித்தால் தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணைய அதிகாரிகளால் சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒரே மின் இணைப்பில், பல வீடுகள் வைத்திருக்கும் வீட்டு உரிமையாளர்கள், ஒரே இணைப்புக்கு கூடுதல் மின் மீட்டர் இணைப்புகளை கூடுதல் வைப்புத்தொகை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். ஆனால், பெரும்பாலான வீட்டு உரிமையாளர்கள் இந்த வசதிகளைப் பயன்படுத்த முன்வருவதில்லை.

இந்திய மின்சாரச் சட்டம் 2003-யின்படி, மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ள கட்டணத்தைத்தான், மின் பகிர்மான நிறுவனங்கள் வசூலிக்கின்றன. ஆனால், தமிழகத்தில் குறிப்பாக சென்னையில் வாடகை வீட்டில் குடியிருப்போரிடம் மீட்டருக்கு மேல் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதாவது மீட்டரில் பதிவான யூனிட்டுகளை கணக்கிட்டு, ஒரு யூனிட்டுக்கு ₹7 முதல் ₹9 வரை வீட்டு உரிமையாளர்கள் வசூலிக்கின்றனர்.

வீடு வாடகைக்கு எடுக்கும் போதே மின் கட்டணம், குடிநீர்க் கட்டணம் குறித்து வீட்டு உரிமையாளர்களிடம் எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் செய்ய வேண்டும்.

மின்சாரச் சட்டப்படி, கூடுதல் கட்டணம் வசூலிக்கும் வீட்டு உரிமையாளர்களுக்கு 3 மாதச் சிறைத் தண்டனை கிடைக்க சட்டத்தில் வழிகள் உள்ளன.

திரு.வீ. அரிதாசன் B.Tech, MBA அவர்கள் நடத்தும்

நீங்களும் ஏற்றுமதி செய்யலாம்!

முறையான, முழுமையான பயிற்சி வகுப்பு

வீ.அரிதாசன் B.Tech, MBA.,

17, அஜீஸ் முல்க் முதல் தெரு, ஆயிரம் விளக்கு, சென்னை - 600 006.

பேசி: 044-42142304, 94442 83129, 94441 46807. / இணையதளம்: www.chandhai.com

நாள்	நேரம்	இடம்
ஜனவரி - 12	காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	அண்ணாமலையார் ரெசிடன்சி, புது பஸ் நிலையம் அருகில், வேலூர்.
ஜனவரி - 19	காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	ஹோட்டல் ஆதித்யா, வடபழனி, சென்னை..
ஜனவரி - 26	காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	மங்களா இண்டர்நேஷ்னல் காந்திபுரம், கோவை.

பயிற்சி கட்டணம் ரூ. 2500/-

வாரந்தோறும் புதன் இரவு 10.30 மணி மற்றும் வெள்ளி இரவு 10.30 மணி மற்றும் சனிக்கிழமை மதியம் 2.00 மணிக்கு மக்கள் தொலைக்காட்சியில் வீ.அரிதாசன் அவர்களின் நேரலை நிகழ்ச்சியை கண்டு பயன்பெறுங்கள்.

நிறுவனம் துவங்குவது, அனுமதி பெறுவது, இறக்குமதியாளரை கண்டுபிடிப்பது, எந்தப் பொருள், எந்த நாட்டுக்கு...? விலை நிர்ணயம் செய்தல், பேக்கேஜிங், அனுப்பும் வழிமுறைகள், ஆவணங்கள், காப்பீடு, குறைந்த வட்டிக்கு வங்கிக்கடன், மானியம் பெறுதல் போன்ற அனைத்து தகவல்களும் பயிற்சியின் போது விரிவாக விளக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் அனுமதி விண்ணப்பப்படிவம், 250 பக்க பயிற்சிக் கையேடு மற்றும் 80,000 இறக்குமதியாளர் முகவரிகளும் தரப்படும். பயிற்சியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அனுபவசாலிகளையும் நேரில் சந்திக்கலாம்.

மதிப்புக் கூட்டுதல் பயிற்சி

(இயற்கைத் தேன், கருஞ்பாசி மதிப்புக் கூட்டுதல் மற்றும் இயற்கை அங்காடி துவங்க பயிற்சி)

நாள் : 20.01.2014 (திங்கள் கிழமை)
நேரம் : காலை 9.30 முதல் மாலை 5.30 வரை
இடம் : ஓட்டல் ஆதித்யா, வடபழனி, சென்னை.
பயிற்சிக் கட்டணம் ரூ. 2000/-

நாள் : 27.01.2014(திங்கள் கிழமை)
நேரம் : 9.30 முதல் மாலை 6.00 வரை
இடம் : மங்களா இண்டர்நேஷனல் காந்திபுரம், கோவை.
பயிற்சிக் கட்டணம் ரூ. 2000/-

MOVEZZWORLD.COM

பெரிய மாற்றங்களை ஏற்படுத்துபவை சிறிய விசயங்களே!

ISO-9001: 2008
VitalElixir ECO Wash

100% ORGANIC

நமது மனதிற்கு நல்ல சிந்தனையை தூண்டுபவை தூய்மையான ஆடைகளே என உளவியல் மருத்துவர்கள் கூறுவது உண்டு. உதாரணமாக நல்ல உடைகளுக்கு எல்லா கதவுகளும் திறக்கும்.

சிறப்புமிக்க ஆடைகளை பாதுகாக்க இன்றைய சிக்கனம் பொருளாதார சூழ்நிலை, பெண்களின் வேலைப்பளு, நேரமின்மை இவற்றை மனதில் கொண்டு சிங்கப்பூர் நானோ தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டது ECO WASH

ECO WASH	மற்ற வாஷிங்
நடுநிலை pH (Neutral pH) ஆர்கானிக் அடிப்படை	காரத்தன்மை pH (Alkali pH) காஸ்டிக்சோடா, காரம்
Neutral pH சருமம், துணி, மெசின்க்கு 100% பாதுகாப்பானது.	Alkali pH (காரம்) சருமம், துணி, மெஷின் அரிக்கும் தன்மை கொண்டது.
Front Load, Top Load M/c க்கு ஒரே அளவு ECO WASH	Front Load, Top Load M/c க்கு வெவ்வேறு விலை, பவுடர், அளவு பயன்படுத்தவேண்டும்.
நுரை (Foam) இல்லை மெஷின் தடையில்லாமல் இயங்கும்.	நுரை 100% (Foam) உள்ளது. மெஷின் சரிவர இயங்காது.
கைவேலை, நேரம் மிச்சம். (கை கொண்டு பிரஷ்போடவோ கசக்கவோ தேவையில்லை)	மெஷினிலிருந்து துணியை எடுத்து பிரஷ் போடவேண்டும் வேலை அதிகம். Time waste ஆகும்.
தண்ணீர், மின்சாரம், பணம் மிச்சம்	தண்ணீர், மின்சாரம், பணம் செலவு அதிகம்.

நமக்கு வரும் எதிர்மறையான விளைவுகளை உணர்ந்துவிட்ட பிறகு நாம் ஏன், நம்மை மாற்றிக் கொள்ளக்கூடாது?

100% Organic

செயல்முறை

மெஷினில் அளவு தண்ணீர் வைக்கவும். ECO WASH கேன் மூடியில் இருந்து ஒரு மூடி (20 மிலி) ஊற்றவும். துணி வகைகளைப் பொருத்து 8 லிருந்து 12 வரை போடவும். நன்கு நனைய வைத்து 30 நிமிடம் ஊற வைக்கவும். பின்னர் வழக்கம்போல் வாஷ் பண்ணவும்.

Customer Care No.
9443394155 / 9367794155

Distributors Wanted

அமெரிக்க கம்பெனிகளை விட
40 % விலை குறைவு
30 % ஆற்றல் அதிகம்

More Green! More Rain!!

அஞ்சலி
செந்தூர்பாண்டி

முன்னத்தி ஏர்!

MoviezWorld.com

முகம் மறைக்கும் வெண்தாடி, அதற்குள் எப்போதும் எட்டிப் பார்க்கும் குழந்தைச் சிரிப்பு. எப்போதும் சுறுசுறுப்பு. சுருட்டி கட்டிய முண்டாசு. இதுதான் நம்மாழ்வார் என்கிற 75 வயது இளைஞரின் தோற்றம். தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளியருகே இளங்காடு கிராமம் இவர் பிறந்த ஊர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை இளங்கலைப் படிப்பை முடித்து, பசுமைப் புரட்சி, தொழில்மயமாக்கம், சூழல் மாசடைதல் தொடர்பாக காரமான விமர்சனங்களையும் ஆக்கபூர்வமான மாற்றுகளையும் முன்வைத்தவர். இந்த மண்ணுக்கு அவர் ஆற்றிய அரும்பணிகள் ஏராளம். தமிழ்நாட்டில் இயற்கை வழி வேளாண்மை முறைகளை அயராமல் ஊக்குவித்தவர். வானகம், குடும்பம் அமைப்பு உட்பட பல அரசு சாரா அமைப்புகளின் அமைப்பாளரும் ஆவார்.

இவரிடம் இயற்கை விவசாயம் கற்க வரும் இளைஞர்கள் உணர்ச்சி மிகுதியில் ரசாயன விவசாயத்தை அழிக்க வேண்டும் என்று கூறும்போது, தனக்கேயுரிய அந்த குழந்தைச் சிரிப்பை உதிர்த்துவிட்டு, 'அய்யா... அய்யா... அப்படி எல்லாம் எதிர்மறையா பேசக்கூடாதுய்யா... நீங்க ரசாயன விவசாயத்தை அழிக்கணும்னு சொல்லப்பிடாது. இயற்கை விவசாயத்த வளர்க்கணும்னு சொல்லணும். எப்பவுமே அழிக்கிறது சுலபம், ஆக்குறது கஷ்டம். கஷ்டப்பட்டு ஆக்கிட்டீங்கன்னா அது நீண்ட நாளைக்குப் பலன் தரும். அதனால நீங்க இயற்கை விவசாயத்தை கையிலெடுங்க. ரசாயனம், தானா காணாமப் போயிடும்' என்று எதிர்மறையைக்கூட நேர்மறையாய் சிந்தித்த சிந்தனையாளர்.

நம் நாட்டின் வேம்பிற்கு ஐரோப்பிய நாட்டினர் உரிமை கொண்டாடியபோது, அதைப் போராடி மீட்டுக் கொடுத்ததில் நம்மாழ்வாருக்கு முக்கியப் பங்குண்டு. அங்கே நடந்த ஒரு வாதத்தில், 'உங்களுக்கு பேஸ்ட்டும் பிரஷ்ஷும் வேற வேற. எங்களுக்கும் ரெண்டுமே ஒண்ணு தான்' என்றார். 'எப்படி?' என்று மேல்நாட்டு அறிஞர்கள் கேட்டபோது வேப்பங்குச்சியைக் காட்டி, 'இதுதான் பிரஷ். இதைச் சுவைத்தால் உள்ளே வெண்ணிறத்தில் இருக்கும் கசப்பான இதன் சாறுதான் பேஸ்ட்...' என்றார். இப்படி ஏட்டறிவோடு பல அனுபவ அறிவையும் சொல்லிப் போராடியதால்தான் வேம்பு இன்று நம் வசமானது.

கரூர் மாவட்டம் கடவூர் அருகில் சிறுமான்பட்டி கிராமத்தில் 2009-ஆம் ஆண்டு சுமார் 45 ஏக்கர் பரப்பளவில் வானகம் என்கிற உயிர்ச்சூழல் மையம் ஒன்றை அமைத்து, அதில் இயற்கை வேளாண்மை குறித்து இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து வந்தார் நம்மாழ்வார். இந்த அமைப்பின் சார்பில் பல வெளியூர்களுக்கும் போய், இளைஞர்களுக்குப் பயிற்சியளித்திருக்கிறார் இவர். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அவரிடம் வந்து பயிற்சி எடுத்து இன்று தமிழகம் முழுதும் அவரது விழுதுகளாக வேரூன்றி, இயற்கை வேளாண்மையில் ஈடுபட்டு வருகிறார்கள். நானும் வானகத்தில் நூற்றுக்கணக்கான இளைஞர்களுடன் இரண்டு வாரங்கள் தங்கியிருந்து பயிற்சி எடுத்துக் கொண்டது மறக்க முடியாத அனுபவம்.

படித்தவர்கள் விவசாயம் செய்வதில் நாட்டம் கொள்வதில்லை. ஆனால் இதை மாற்றி, படித்த இளைஞர்கள் பலரும் ஆர்வத்துடனும் நம்பிக்கையுடனும் இயற்கை விவசாயத்தை நோக்கி திரும்பியதற்குக் காரணம் நம்மாழ்வார் என்றால் அது மிகையாகாது.

அவர் மறைந்து விட்டார். விதைத்தவன் உறங்கலாம், ஆனால் விதைகள் உறங்குவதில்லை.

Facilities offered

Free : No Annual / Maintenance charges.

Free : International Visa Debit Card. Students can purchase Books, Railway, Flight Tickets through this Card. College Fees, Hostel Fees payable online.

Free : Withdrawal through 11,00,000 ATMs around the Globe.

Free : Collection of outstation Cheques.

Free : Bill payment / Mobile banking facility.

Free : Fund Transfer facility through Net-Banking to any Branch of CUB and other banks through RTGS/NEFT.

Free : Monthly statement through e-mail.

CUB YOUNG INDIA

CENTURY YOUNG BANK

Designed for students and young professionals between 18-25 years of age. Suitable for all their multiple needs with latest technology.

It is right time to start a greater Chapter to a prosperous future with CUB.

CUB

TRUST AND EXCELLENCE SINCE 1904

CITY UNION BANK LTD.

Registered Office : Kumbakonam - 612 001, Tamil Nadu.
Tel : 0435-2402322 Fax : 0435-2431746 E-mail : rpm@cityunionbank.com
Website : http://www.cityunionbank.com SMS : "CUBDEPOSIT" to 9900654321

All our Branches are completely Networked

For further details please contact our nearest branch.

* Conditions apply

• Any Branch Banking • Internet Banking • ATMs • Electronic Money Transfers • VISA Debit Card • SMS Banking

கைலாசநாதர் கோயில்

“நேற்றிருந்தேன் அந்த ஊரினிலே”

‘யாதும் ஊரே யாவரும் கேளீர்’ என்றான் என் முப்பட்டான் கனியன் பூங்குன்றன். ‘இத்தரை கொய்யாப்பிஞ்சு, நீயதில் சிற்றெறும்பே’ என்று நம் இருப்பை புள்ளிக்குள் சுருக்கினான் பாரதிதாசன். பின்னர் அவனே முன் நகர்ந்து சென்று பேரானந்தக் களிப்பில் மொழியுடன் கூத்தாடி, ‘எங்கும் பாரடா! இப்புவி மக்களை! பாரடா! உனது மானிடப் பரப்பை! என் குலம் என் இனம் என்றுனை தம்முள் ஆழ்த்திய மக்கள் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சி கொள்’ என்று கவி பாடினான்.

என் ஊர் என்று நான் எதைச் சொல்வது? 10 மாதங்கள் இருட்டில் கிடந்த தாய் வயிற்றுக் கருவூரையா? அப்படிப் பார்த்தால் உண்மையில் அதுதான் நான் பிறந்த ஊர். பிள்ளைத்தமிழ் பாடித்திரிந்த மார்கழி வீதிகளையா? அது வளர்ந்த ஊர். தீதும் நன்றும் கற்றுத் தெளிந்த நகரத்து நாற்புற சந்திகளையா? அது அறிந்த ஊர். பிறந்ததும், வளர்ந்ததும், அறிந்ததுமான முப்புரமும் என் அகம், புறமே!

‘பொருட்காட்சியில் பார்த்த
பால்ய வயது சிநேகிதனின் முகம்
இனிஷியலோடு
அவன் பெயரை
நினைவிற்கு கொண்டு வரும்’

என்கிற கலாப்ரியாவின் கவிதையைப் போல சொந்த ஊரின் ஞாபகங்கள் ஒரு மச்சத்தைப் போல, தழும்பைப் போல நம் உடலுடன் ஒட்டிக்கொள்கின்றன. நத்தையைப் போல சொந்த ஊர் ஞாபகங்களை முதுகில் சுமந்து அலையும் மனிதர்கள் நாம்.

என் ஊர் காஞ்சிபுரம்.



பிரபலங்கள் தங்கள் ஊரின் ஈரமான நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள்

இந்த வாரம்:

நா.முத்துக்குமார்

பிறந்ததிலிருந்து இளங்கலை இயல்பியல் படித்த காலம் வரை, 'நகரேஷ்வர் காஞ்சி' என்று அழைக்கப்படுகிற, 'ஹோ' வென்று அகன்று விரிந்த காஞ்சிபுரத்தின் தெருப் புழுதிகள் தான் என்னை வாரி அணைத்துக் கொண்டன.

என் ஊரை நான் இரண்டு விதமாகப் பார்க்கிறேன். ஊரில் வாழ்ந்தபோது நானறிந்த என் ஊர். பொருள்வயிற்பிரிவிற்காக சென்னைக்கு வந்துவிட்டபின், கடந்த 20 வருடங்களாக அவ்வப்போது நான் திரும்பிப் பார்க்கும் காஞ்சிபுரம்.

ஒவ்வொரு முறையும் என் ஊர் எனக்கு ஏதோ ஓர் ஆச்சரியத்தையும் அடுத்து ஓர் அதிர்ச்சியையும் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறது. 'நெடுநாட்கள் கழித்து சொந்த ஊருக்குச் செல்பவர்கள்' என்று எப்போதோ நான் எழுதிய கவிதைதான் நினைவிற்கு வருகிறது. அந்தக் கவிதை;

**'நெடுநாட்கள் கழித்து
சொந்த ஊருக்குச் செல்பவர்கள்
சின்னதாகிப் போன
பால்ய வயதின் சட்டைக்குள்
வளர்ந்த உடலுடன்
நுழைகிறார்கள்**

**பொருள் வயிற் பிரிவுக்கு முன்
ஒவ்வொரு அணுவும்
பரிச்சயமாயிருந்த சொந்த வீடு
சற்றே அந்நியமாகி
தங்கும் விடுதிபோல்
திகிலூட்டுகிறது**

**கொஞ்சம் உப்பும், பாசமும்
தூக்கலான
சாப்பாட்டு ருசி மட்டும்
நம் வீடுதான் என்கிற
ஆறுதல் தருகிறது**

**சிற்றிலாடிய வயல்வெளிகள்
பன்னாட்டு தொழிற்சாலைகளின்
புகை போக்கிகளுக்குக் கீழே
புதைந்து கிடக்கின்றன**

**மிக சகஜமாய்த் தென்படும்
புதிய புதிய முகங்கள்
பூர்வீக வீட்டை விற்றுவிட்ட
பழைய நண்பர்களைப் பற்றி
விசாரிக்க வைக்கின்றன**

**சம்சாரிகளாகி விட்ட
சிநேகிதர்கள்,
'எப்படா வந்தே' என
வழிமறித்துக் கேட்கிறார்கள்
பதில் சொல்வதற்கு முன்பே
'என்னிக்குப் போற?' என
அடுத்த கேள்வி வருகிறது**

**ஒவ்வொரு முறை
வந்து போகும் போதும்
நெருங்கிய ஒருவரின்
மரணம் பற்றிய செய்தியும்,
தொடர்பு கொண்டு
தெரிவிக்க முடியாமைக்கான
வருத்தமும்
யார் வீட்டுத்
திண்ணையிலேயோ
ஒரு கண்ணீர்த் துளியைப்
போல்
அமர்ந்திருக்கிறது'**

இன்றிருக்கும் ஊருக்குள் நேற்றிருந்த ஊரைத் தேடுவது, ஊரைத் தேடுவது மட்டுமா? இன்றிருக்கும் நானில்

> சொந்த ஊரின் ஞாபகங்கள் ஒரு மச்சத்தைப் போல, தழும்பைப் போல நம் உடலுடன் ஒட்டிக்கொள்கின்றன. நத்தையைப் போல சொந்த ஊர் ஞாபகங்களை முதுகில் சுமந்து அலையும் மனிதர்கள் நாம்

நேற்றிருந்த நானைத் தேடுவதல்லவா அது? ஊர் ஒரு மாயப்பலகையில் வெவ்வேறு வண்ணங்களில் காலத்தை வரைந்து காட்டிக் கொண்டே இருக்கிறது.

மார்கழி வாசல் தேவதைகளும், பூசணிப்

பூக்கோலங்களும் காணாமல் போயிருக்க, பெருமாள்

கோயிலும், பல்லக்கு தூக்கிகளின் கோஷமும், இன்னமும் அப்படியே ஊரில் எஞ்சியிருக்கிறது. கிருஷ்ணா தியேட்டர்கல்யாணமண்டபம் ஆனதும்; முருகன் டாக்கீஸ் பட்டு ஜவுளிகளின் ஷாப்பிங் மால் ஆனதும்; பாலாற்றில் இறங்கி பெரும் பெரும் லாரிகள் மண் எடுத்த பள்ளத்தில் கிடக்கும் பாலீதின் பைகளைப்போல ஞாபகத்தை அரித்துக் கொண்டிருக்கின்றன.

ஆயிரங்கால் மண்டபம்

ஏகாம்பர நாதர் கோயில் ஆயிரம் கால் மண்டபமும்; கிறீச்சிட்டுத் தொங்கும் வவ்வால்களின் எச்சங்களும்; சங்கர் ஸ்டோர்ஸில் வாங்கிய பிரில் இங்க் பேனாவின் சட்டைப்பைக் கறைகளும்; காசில்லாத காலங்களில் ஸ்ரீதர் கேப், ராமாஸ் கேப், இண்டியன் காபி ஹவுஸ்,

ஹோட்டல் சக்ரா, அராபத் ஹோட்டல்களில் இருந்து வெளியே கசியும் பசியின் வாசனையையும்; கைலாச நாதர் கோயில் மைதானத்தில் ஸ்கூல் யூனிபார்மோடு, 'pen please sir, chocolate please madam' என்று வெள்ளைக்கார முகங்களை துரத்தியதையும்; தெருவெங்கும் மூங்கில் கழிகள் நட்டு, பட்டு நூல்களை பாவெடுத்து சிக்கெடுத்த அதிகாலைகளையும்; தேரடி வீதியையும்; ராஜாஜி மார்க்கெட்டையும்; பகல் 12 மணிக்கு சங்கு ஒலிக்கும் பேருந்து நிலையத்தையும் நான் படித்த அந்திரசன் மேல் நிலைப்பள்ளியின் புராதனக் கட்டிடத்தையும்; பச்சையப்பன் கல்லூரியின் பரந்து விரிந்த மரவெளிகளையும் எப்படி என்னால் மறக்க முடியும்? என்னை நானாக்கிய இடங்கள் அல்லவா. அவை!

ஒவ்வொரு முறை கண்ணாடி பார்க்கும் போதும் எனக்குள் இருந்து ஒரு குட்டிப் பையன் வெளியே வந்து என் சொந்த ஊருக்கு கூட்டிச் செல்கிறான். அவன் விரல் பிடித்து நடந்து போவதில் எனக்கு சந்தோஷம். எனென்றால் என்றென்றும் என் ஊரில் இருக்கவே நான் விரும்புகிறேன்.

சந்தா தொகையில் இப்போது மேலும் சேமிப்பு...
மூன்று வழிகளில்

மேற்கூறிய திட்டங்கள் மூலம் சந்தா தொகையில் சலுகை பெற, உங்களுடைய சந்தா எண்ணை கண்டிப்பாக குறிப்பிட்டு அனுப்பவும்.

- புதிய தலைமுறை ஆண்டு சந்தா ₹ 599/- மட்டுமே
- புதிய தலைமுறை 6 மாத சந்தா ₹ 299/- மட்டுமே
- புதிய தலைமுறை கல்வி ஆண்டு சந்தா ₹ 399/- மட்டுமே
- புதிய தலைமுறை கல்வி 6 மாத சந்தா ₹ 199/- மட்டுமே

காசோலைகள், வரைவோலைகள் (செக், டி.டி)
NEW GENERATION MEDIA CORPORATION PRIVATE LTD, CHENNAI
என்ற பெயரில் மட்டுமே இருக்க வேண்டும். செக், டி.டி,
இவற்றுடன் இந்தப் படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்.
CTS 2010 என்று குறிப்பிட்ட செக் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

SEND sms to 56161 <PT> <MAG> <NAME>
Book Your Subscription Online:- www.puthiyathalaimurai.com/subscription

அனுப்ப வேண்டிய முகவரி:
சந்தா பிரிவு, புதிய தலைமுறை, தபால் பெட்டி எண். 3209,
எண். 25A, N.P. இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஈக்காட்டுதாங்கல், சென்னை: 600 032.
தொடர்புக்கு: 044-45969701, 45969702 / e-mail: subscriptions@newgenmedia.in

புதிய தலைமுறை

சந்தா படிவம்

புதிய தலைமுறை கல்வி

☐ புதிய தலைமுறை ஆண்டு சந்தா ₹ 599/- ☐ புதிய தலைமுறை கல்வி ஆண்டு சந்தா ₹ 399/-
☐ புதிய தலைமுறை 6 மாத சந்தா ₹ 299/- ☐ புதிய தலைமுறை கல்வி 6 மாத சந்தா ₹ 199/-

நான் மேற்கூறிய சந்தாவை ☐ புதுப்பிக்க ☐ பரிசளிக்க ☐ பரிந்துரைக்க விரும்புகிறேன்.

சந்தா எண்:

பெயர்: _____

முகவரி: _____

மாநிலம்: _____ *பின்கோடு: _____

*தொலைபேசி / மொபைல்: _____

காசோலை / டி.டி. விவரம்:

எண்.: _____

வங்கி: _____

தேதி: _____

தொகை: _____

*பின்கோடு மற்றும் தொலைபேசி எண்ணை கண்டிப்பாக குறிப்பிடவும்.

கையொப்பம்

MyVizaWorld.Com

நான் ராமதாஸ்...

மார்கழி மாதத்தின் குளிரையும் மீறி அனல் பறக்கிறது, அரசியல் வட்டாரங்களில். காரணம், இன்னும் சில மாதங்களில் வரவிருக்கும் மக்களவைத் தேர்தல். எந்தக் கட்சியுடன் கூட்டணி அமைத்துக் கொள்வது என்று கட்சித் தலைவர்கள் தலையை பிய்த்துக் கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். நிலைமை முற்றும் முன் நீங்கள் அவர்களுக்கு உதவலாம். அவர்கள் நிலையில் நீங்கள் இருந்தால் யாருடன் கூட்டணி வைப்பீர்கள்? ஏன் அந்த முடிவு என்பதை காரண காரியங்களுடன் அல்லது காமெடியாக கலாய்த்தோ எழுதி அனுப்புங்கள். ஆனால் யாரையும் காயப்படுத்திவிட வேண்டாம். கட்டுரைகள், 'புதிய தலைமுறை'யில் ஒரு பக்க அளவில் (சுமார் 200 வார்த்தைகளில்) அமைய வேண்டும். கட்டுரைகளைச் சுருக்க திருத்த, 'புதிய தலைமுறை தேர்தல் ஆணையத்திற்கு அதாங்க, ஆசிரியர் குழுவிற்கு உரிமை உண்டு.

தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகளை எழுதியவர்களுக்கு சீட் உண்டு ஸாரி, பரிசு உண்டு, ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

இந்த வாரம் நீங்கள் எடுக்கப்போகும் அவதாரம்: டாக்டர். ராமதாஸ்

அனுப்ப வேண்டிய முகவரி:
நான் ராமதாஸ்,
'புதிய தலைமுறை'
எண் : 25 ஏ (என்.பி.)திரு.வி.க. இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி,
சென்னை - 600 032

Moviezzwithram

Green Pearl
ELECTRONICS

THANK YOU SUN GOD FOR BRINGING DOWN MY ELECTRICITY BILL

OFF-GRID SOLAR POWER SYSTEMS

- From 1KW onwards
- Unit includes Panels, PCU, MPPT Charger etc.
- We use MPPT Charger / Panel for Maximum Power Generation

Advantages

- You can bring down your energy bill
- You can start producing your own solar energy daily
- You can help our state to become a power surplus state
- Applicable for independent houses / Shops / Office / Schools / Colleges / Hospitals and Industries.

PARTNER WITH GREEN PEARL & JOIN THE SOLAR REVOLUTION

NEED HELP?

To Place Order

Call (044) 3345 1400 / 01 / 02 / 03 / 04 / 05 or
Email us at: sales@greenpearlelectronics.com or
support@greenpearlelectronics.com

Green Pearl Electronics Private Limited
(An SRM Group Company)

East Potheri Village, Kattankulathur- 603203. Tamil Nadu. Ph: 044 3345 1400 to 09
E-mail: sales@greenpearlelectronics.com, support@greenpearlelectronics.com
www.greenpearlelectronics.com.

LED LIGHTING | SOLAR ENERGY | POWER SYSTEMS

நெறி: மூன்று

இறுதி வரை இயங்கு

லையத் தலைமை



...மிகுகான்!

தொடர்
வெ.இறையன்பு

படம் : வாசுதேவன்

உற்சாகம் மிகுந்த ஓர் இளைஞன் விற்பயிற்சி தரும் பள்ளியில் சேர்ந்தான். பயிற்சியாளரிடம் அதிகாலையில் சென்று மரங்களில் வட்டங்களைவரைந்துவிட்டு அவற்றைஇலக்காகக்கொண்டு அம்புகளை எறிவது வழக்கம். பல பயிற்சியாளர்கள் வட்டத்தை விட்டுவிட்டு வேறு எங்கெங்கோ அம்பு எய்து அயற்சி உறுவார்கள். ஆனால் இந்த இளைஞன் எய்த அம்புகளோ அனைத்தும் வட்டத்திற்குள்ளேயே இருந்தன. காரணம், அவன் அம்புகளை எய்துவிட்டு அவற்றைச் சுற்றி வட்டம் போட்டான். விற்பயிற்சி தருகிற ஆசான் அவருடைய அம்புகளைப் பார்த்துவிட்டு மறுபடியும் அம்பை எய்தச் சொன்னார். அந்த அம்புகள் மறுபடியும் வட்டத்திற்குள் சென்று சரியாகச் சேர்ந்தன. அந்த இளைஞனைத் தட்டிக்கொடுத்து, 'எப்படி இவ்வளவு சரியாக எய்கிறாய்? நீ அடுத்த நிலைக்கு உள்ள பயிற்சியில் இணைந்து கொள்' என் கூறிவிட்டுச் சென்றார். மற்ற சீடர்கள் அவனிடம் 'எப்படி இது சாத்தியம்?' என்று கேட்டனர். அதற்கு அவன், 'ஏற்கெனவே அம்புகள் செல்லவேண்டிய வழியை அறிந்திருந்ததால் இது சாத்தியமாயிற்று' என்று குறிப்பிட்டான்.

அலெக்ஸாண்டர் ஆசியாவை வெற்றிகொள்ள முற்பட்டபோது கூரையைப்போல இருந்த ஒரு கல்லறையை தெற்கு ஈரானில் பார்த்தார். அது யாருடைய கல்லறை என்று அப்போது அவருக்குத் தெரியாது. அந்தக் கல்லறையில், 'நிலையில்லாதவர்களே! நான்தான் சைரஸ். பாரசீக சாம்ராஜ்யத்தை வடிவமைத்தவன். என்னையோ, என் கல்லறையையோ மலினப்படுத்தாதீர்கள்!' என்று எழுதப்பட்டிருந்தது. அதற்குப் பிறகே அந்தக் கல்லறை குறித்த விவரங்களை சில்லறைத் தகவல்கள் மூலம் ஒருங்கிணைத்து ஒரு முடிவுக்கு வந்தார்.

சைரஸ் என்கிற சொல்லுக்கு சூரிய வம்சத்தைச் சார்ந்தவன் என்கிற பொருளும் உண்டு. குரு என்கிற சொல்லில் இருந்துதான் சைரஸ் பிறந்தது என்பது சரித்திர ஆசிரியர்களின் முடிவு. அவன் முதலாம் கேம்பிசஸ் மகன். அவனுடைய நாடு மெடியன் நாட்டிற்கு கப்பம் கட்டி வந்தது.

சைரஸ் இறுதிவரை இயங்கிய மாபெரும் தளபதி. நலிவடைந்திருந்த பாரசீக சாம்ராஜ்யத்தை தூக்கி நிறுத்தியவன். சைரஸ் வாழ்க்கையைப் பற்றிய சுவையான குறிப்பு ஒன்றை ஹிரோடாட்டஸ் அளித்திருக்கிறார். முதல் சரித்திரப் புத்தகத்தை எழுதியவர் அவர். அவரை வரலாற்றின் தந்தை என்றும் குறிப்பிடுவார்கள். சைரஸ் பிறந்தபோது ஆஸ்டியாகஸ் என்கிற பாரசீக மன்னனுக்குக் கனவு வந்தது. அவனுடைய மகள் வயிற்றுப் பேரன் அவனுக்கே உலை வைப்பான் என்பதுதான் அந்தக் கனவு. அப்போது அரண்மனையில் பணியாளராக இருந்த ஹெர்பேகஸ் என்பவனிடம் குழந்தையைக் கொடுத்து அதைக் கொல்லும்படி உத்தரவிட்டான்.

ஹெர்பேகஸ் கொல்ல மனமின்றி குழந்தையை மலைப் பகுதியில் மாடு மேய்ப்பவர்களிடம் ஒப்படைத்து விட்டான். அவர்களில் ஒரு தம்பதி இறந்து பிறந்த தங்களுடைய குழந்தையை அதற்குப் பதிலாகக் கொடுத்துவிட்டு உயிரோடு இருந்த சைரஸை வளர்க்க ஆரம்பித்தனர். சைரஸுக்கு பத்தாண்டுகள் இருக்கும்போது ஆஸ்டியாகஸைக் காண நேர்கிறது. அவனுக்கு இந்தப் பையன் மாடு மேய்ப்பதைப் போல தெரியவில்லையே என்று முகக் குறிப்புகளைப் பார்த்து தெரிய ஆரம்பிக்கிறது.

ஹெர்பகேஸ் செய்த தவறுக்காக அவனுடைய சொந்த மகனை சாகடித்து அவனுடைய மாமிசத்தை சாப்பிடச் செய்கிறான் ஆஸ்டியாகஸ். ஆனால் சைரஸை பெற்றோரிடம் சேர்க்கிறான். கனவில் வந்ததைப் போலவே சைரஸ், ஆஸ்டியாகஸை தோற்கடித்தான். ஆனால் ஆஸ்டியாகஸ் கொல்லப்படாமல் உரிய சுதந்திரம் கொடுக்கப்பட்டு அங்கே வசிக்க அனுமதிக்கப்பட்டான்.

சைரஸ் மனித உரிமைகள், அரசியல், ராணுவ உத்திகள் போன்றவற்றிலும் கெட்டிக்காரனாகத் திகழ்ந்தவன்.

லிடியாவைச் சார்ந்த குரோசியஸ் என்கிற மன்னனை படுதோல்வி அடையச் செய்தான். மேற்குப் பகுதியைத் தன்னுடைய இடைவிடாத படையெடுப்புகளால் வெற்றி கொண்டான் சைரஸ். பாரசீக நாடு பல திக்குகளிலும் தெரிய ஆரம்பித்தது. முக்கியமான ஏழு எல்லை நகரங்களை சைரஸ் உருவாக்கினான். எதிரிகள் நாட்டிற்கும் தனது பகுதிக்கும் இடையே போரற்ற பகுதியை அவன் உருவாக்கினான். அந்த நேரத்தில் பாபிலோன் உலக நிகழ்வுகளின் மையப்பகுதியாகத் தன்னைக் கருதிக் கொண்டிருந்தது. பிரபஞ்ச சக்கரவர்த்தி என்று தன்னை அவர்கள் அழைத்துக் கொள்ளும் பழக்கம் இருந்தது. நெபுகட்நெசார் போன்ற மன்னர்களின் நிழல் பாபிலோனியாவின் மீது அந்த நேரத்திலும் படிந்திருந்தது.

பாபிலோனியாவை எப்படியாவது மண்டியிட வைக்கவேண்டும் என்கிற தீவிரமான முனைப்பு சைரஸிடம் இருந்தது. அவன் படையெடுப்பை நிகழ்த்திச் செல்லுகிறபோது பல பகுதிகள் எந்த எதிர்ப்பும் இன்றி தங்கள் வாயில்களை அகலத் திறந்து வைத்தன. இரண்டு படைகளுக்கும் இடையே டைகரீஸ் நதியின் கரையில் கி.மு. 539-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் யுத்தம் நடந்தது. நிறைய கொள்ளையும் மனித உயிரிழப்பும் நடந்தன. பாபிலோனியாவின் மன்னன் நபோனிடஸ் தாக்குப் பிடிக்க முடியாமல் தலைநகருக்குத் திரும்பினான். ஆனால் அவனை சைரஸ் துரத்திச் சென்று தாக்கினான். இறுதியில் பாபிலோன் படிந்தது. அந்த யுத்தம் சைரஸின் ராணுவ வாழ்க்கையின் உச்சபட்ச சாதனையாக இருந்தது.

ஆற்றல் நிறைந்த மன்னர்களின் வாள்கள் உறையில் உறங்குவது இல்லை. சைரஸ் குதிரைகளின் மீது அமர்ந்து தன்னுடைய வீரர்களை வழி நடத்தினான். பத்தாண்டுகளாக அவனுடைய இந்தப் பயணம் தொடர்ந்தது. அவனுடைய முடிவு குறித்து பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. அவன் மசகெட்டே என்கிற மரபின மக்களோடு ஸ்டெப்பி பகுதியில் உள்ள இன்றைய கசகஸ்தான், யுஸ்பெக்கிஸ்தான் ஆகிய பகுதிகளில் தாக்குதலை நடத்தினான். மசகெட்டே பகுதியினர் சைத்தியன்கள்போல உடையும் வாழ்வும் கொண்டவர்கள். அவர்கள் குதிரையின் மீதமர்ந்தும் காலாட்படையாகவும் தாக்குதல் நடத்தினர்.

அந்தப் பகுதியைக் கைக்கொள்வதற்காக ராணியாக இருந்த டொமரிஸ் என்கிற பெண்ணுக்கு திருமண முன்மொழிவை சைரஸ் அனுப்பினான். அவளோ மறுத்தாள். பாலங்கள் கட்டியும் படகுகள் தருவித்தும் முன்னேற முயன்றான் சைரஸ். டொமரிஸ் அவனுடைய படைகளை இருவருக்கும் பொதுவான ஒரு நிலப்பகுதியில் மோதுவதற்கு சம்மதிப்பதாக தகவல் அளிக்கிறாள். அதை ஏற்றுக்கொண்டு சில சிப்பாய்களை அந்தக் கோட்டைக்கு வெளியே விட்டுவிட்டு போர்க்களத்திற்குத் தகுதியானவர்களோடு புகுந்தான் அவன்.

டொமரிஸ் படையின் தளபதியாக இருந்த அவள் மகன் அந்த பலவீனமானவர்கள் எல்லோரையும் எதிர்பாராத தாக்குதலால் அழித்துத் தீர்த்தான். அவனுடைய மகன் எஞ்சி இருந்தவர்களால் சிறை பிடிக்கப்பட... தற்கொலை செய்து கொண்டான். டொமரிஸ் இதைக் கேள்விப்பட்டு மிகப் பெரிய படையோடு போர்க்களத்திற்கு வந்தாள். உக்கிரமான போர் நடந்தது. அதில் சைரஸ் இறந்துபோனான். டொமரிஸ் அவனுடைய உடலை தன்னிடம் கொண்டுவரச் செய்து தலையை வெட்டி ரத்தம் தோய்ந்த பாத்திரத்தில் முக்கி எடுத்து பழிதீர்த்துக் கொண்டாள். இது ஒரு விதமாக அவனது மரணம் பற்றி பதிவாகி உள்ள தகவல்கள்.

இறுதிவரை இயங்கி ஓய்வில்லாமல் போர்க் களத்திலேயே காலத்தைக் கழித்து பாரசீக நாட்டை மிகப்பெரிய ராஜ்யமாக உருவாக்க முனைந்தவன் சைரஸ். அவன் எதிரிகளைத் தாராளமாக நடத்தும் மன்னிக்கும் குணம் கொண்ட மனிதன். அதனால்தான் அவனிடம் தோற்ற குரோசியஸ் கொல்லப்படும் நேரத்தில் அவனை விடுவித்து நண்பனாகவும் ஆலோசகனாகவும் வைத்துக் கொண்டான். ஓரளவிற்கு வெற்றி பெற்றதும் அமைதியான வாழ்க்கையை நாடுவது மனிதர்களின் வழக்கம். ஆனால் தன்னுடைய நாட்டை முடிந்த அளவு விரிவாக்கிவிடவேண்டும் என்கிற நோக்கில் கவலைப்படாமல் தொடர்ந்து இயங்கியவன் அவன்.

போரை மட்டும் நேசித்தவன் அல்ல, அமைதியையும் விரும்பியவன். எதிரிகளை வென்றதோடு அவர்களை

எந்த ஒரு மகத்தான செயலையும் தொடங்குகிறவர்கள் பெரிய நோக்கத்தை கக்கத்தில் வைத்திருக்க வேண்டும். அதை அடையும்வரை உறங்காமல் தொடர்ந்து இயங்கிக்கொண்டே இருக்க வேண்டும்

சைரஸ்

அருகில் வைத்துக்கொள்ளவும் விரும்பியவன். எதிரி நாடுகளை வென்ற பிறகு அவர்களை மிகுந்த அன்போடு நடத்தி, அவர்களின் ஒரு துளி ரத்தமும் சிந்தாமல் பார்த்துக் கொண்டவன். நியாயத்திற்கும் நேர்மைக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவன். உலகை ஒரு முனையிலிருந்து மறுமுனை வரை அதிரவைத்ததாக அழைக்கப்பட்டவன். அவனுக்குப் பிறகு பாரசீகம் அவனைப் போன்ற மன்னனைக் கண்டதில்லை என ஏதென்ஸ் நகரத்தைச் சார்ந்த ஜெனோபோன் சிலாகிக்கிறான்.

ஈரான் நாட்டு மக்கள் சைரஸை இன்னும் தந்தை ஸ்தானத்தில் வைத்துப் பார்க்கிறார்கள். அடிபணிந்த நாட்டுக் குழந்தைகளை தன் நாட்டுக் குழந்தைகளைப் போல பார்த்துக் கொண்டவன் சைரஸ் என சரித்திரம் குறிப்பிடுகிறது. பாபிலோனியாவின் மன்னர்கள் கொடுங்கோலர்களாக நடந்தபோது அவர்களை அடிமைத் தளையிலிருந்து விடுவித்து வைத்தவனாக சைரஸ் இருந்தான். அவன் ராஜ தந்திரத்திலும் சிறந்தவன். வாள் வீச்சிலும் கெட்டிக்காரன். இரானிய இலக்கியத்திலும் தத்துவம் போன்றவற்றிலும் அவன் ஏற்படுத்திய தாக்கம் மகத்தானது. ஈரானில் புதிய மதம் நிறுவப்பட்டபோது அவனுடைய தாக்கம் இருந்துகொண்டேயிருந்தது.

அலெக்ஸாண்டர் சைரஸின் கீர்த்தியைக் கேள்விப்பட்டு அவன் வியப்பட்டான்.

புனைவியல் நாயகர்களான ஹெர்குலஸ் போலவும் ரோமுலஸ் போலவும் பாரசீக நாட்டு மக்களால் கருதப்பட்டவன் சைரஸ். அவனை மகத்தானவன் என்கின்ற அடைமொழியிட்டே அனைவரும் அழைத்தார்கள். மதங்களை எல்லாம் அவன் சமமாக நடத்தினான். சிறுபான்மை மக்களை கௌரவமாக நடத்தினான். யூதர்கள் அவனை நியாயவான் என்று பாராட்டினார்கள்.

சைரஸின் தலைமை, ராஜ்யத்தைக் கட்டமைப்பதில் மிளிர்ந்தது. அவனைப்போல சிறிது சிறிதாக பகுதிகளை இணைத்து பெரிய ராஜ்யத்தை உருவாக்க அசாத்தியப் பொறுமையும் உழைப்பும் தேவை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். பத்தாயிரம் தேர்ந்தெடுக்கப்பட்ட சிப்பாய்களைத் தரமான பயிற்சி கொடுத்து படையை உருவாக்கியவன் அவன். நாடு முழுவதும் நூதனமான அஞ்சல் முறையையும் அவன் புகுத்தினான். நாடு என்கிற கோட்பாட்டிலிருந்து சூப்பர் நாடு என்கிற வடிவமைப்பைப் பல இனங்கள், மதங்கள், மொழிகள் நாடுகள் கொண்ட பகுதியாக உருவாக்கியது அவனுடைய தலைமையின் பங்களிப்பு.

2003-ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ஷிரின் இபாடி ஏற்புரை வழங்குகிறபோது, தான் மாமன்னன் சைரஸ் வழி வந்தவன் என்றும் ஈரானியன் என்றும் பெருமையாக அறிவித்துக் கொண்டதோடு, விரும்பாதவர்கள் மீது விருப்பத்தை அவன் ஒருபோதும் செலுத்தவில்லை என்றும் மதத்தையோ யார் மீதும் திணிக்காதவன் என்று அவனுடைய பெருமையைக் குறிப்பிட்டார்.

சைரஸ் தோட்டங்களை விரும்பியவன். நாடு முழுவதும் மலர்ச் சோலைகளை உருவாக்கியவன். பல பாசன வாய்க்கால்களை உருவாக்கியவன். இரண்டு பெரிய அரண்மனைகளை கட்டடக் கலையின் அடையாளமாக உருவாக்கினான்.

எந்தக் கட்டத்திலும் நம்பிக்கை இழக்கக் கூடாது. வாய்ப்பு வருகிறவரை அமைதி காத்து திறன்களை வகுத்துக் கொள்ள வேண்டும். பெருந்தன்மையான குணங்களை உடை தீர்மானிப்பதில்லை, நடத்தையே தீர்மானிக்கிறது என்பதையெல்லாம் சைரஸ் வாழ்ந்த வாழ்க்கை நமக்கு சுட்டிக்காட்டுகிறது. ஒரு நாடு ஒரே மன்னனோடு சூம்பிப் போய்விட்டால் அது தலைமைப் பண்புக்கான அடையாளம் அல்ல. ஒருவர் அமைக்கும் அடித்தளத்தில் அடுத்த தலைமுறை செழித்து செம்மை சேர்க்க வேண்டும். சைரஸின் மகன் இரண்டாம் கேம்பிசஸ் எகிப்து, நுபியா போன்ற நாடுகளை இணைத்து இன்னும் பெரிதாக பாரசீக சாம்ராஜ்யத்தை வடிவமைத்தான்.

எந்த ஒரு மகத்தான செயலையும் தொடங்குகிறவர்கள் பெரிய நோக்கத்தை கக்கத்தில் வைத்திருக்க வேண்டும். அதை அடையும்வரை உறங்காமல் தொடர்ந்து இயங்கிக்கொண்டே இருக்க வேண்டும். கூட்டுப்புழுவாக இருக்கும்போதும் பட்டாம்பூச்சி அமைதியாக இருப்பதைப்போலத் தோன்றினாலும், வெளியே தெரியாமல் இயங்கிக்கொண்டே இருக்கிறது. அதைப் போலவே வளமான வாய்ப்பு வருகிறவரை நம்மை செறிவுபடுத்திக்கொண்டே நாம் இருக்க வேண்டும். இதுவே வீரமாகப் போராடி இறந்தாலும் அவன் வாழ்க்கை தரும் வாசிப்பு.

(தலைமை கொள்வோம்)

MyTamizMun



MovieWorld.com

Moviezzworld.com

மல்லி

சிறுவர்களின் நிஜமான வாழ்க்கையைச் சொல்லும் கதை...

திங்கள் முதல் வெள்ளி வரை
மாலை 6.30 மணிக்கு

புதுயுகம்
நம்ம டவுன். நம்ம டிவி.

Airtel (491), Sun Direct (129) மற்றும் அனைத்து கேபிள்களிலும் புதுயுகத்தை கண்டு மகிழுங்கள்!
உங்கள் கருத்துக்களை 1800 102 8085 அல்லது feedback@puthuyugam.tv-ல் பதிவு செய்யுங்கள்

Fourth Dimension

To advertise please contact
FOURTH DIMENSION
North : Jayanta Sarcar - 98911 37223
Mumbai & West : Thyagaraj- 98199 50892
South : Balakrishnan – 97898 64444

வாசகர் மணிவாசகம் - 3

zzworld.com

புதிய தலைமுறை

வாசகர்:

கே. அர்ச்சனா,

நெய்வேலி

வாழப் பொருள் வேண்டும்
ாழ்வதிலும் பொருள் வேண்டும்

Moviezzworld

பொங்கல் சிறப்புப் பக்கங்கள்

மலைக்குகை

பென்னாகரம் அருகே உள்ள மலைக்கிராமத்தில் மனிதர்கள் இன்னும் குகைக்குள்ளே வாழ்ந்து வருகின்றனர்

குகைக்குள் குனிந்தேதான் நடக்க வேண்டும். நிமிர்ந்தால் கூர்மையான பாறைகள் தலையில் இடிக்கும். தூங்கும் போதும் உடலை குறுக்கியபடிதான் தூங்க வேண்டும். விலங்குகளால் எந்த நேரத்திலும் ஆபத்து வரலாம். இரவில் ரத்தத்தை உறைய வைக்கும் பனியும் உண்டு. பகலில் ரத்தத்தை ஆவியாக்கும் வெயிலும் உண்டு. இப்படி ஒரு சூழ்நிலையில் நம்முடைய வாழ்க்கையை நினைத்துப்பார்க்க முடிக்கின்றதா?

போஜ்ஜியப்பன்

இத்தகைய சூழலில்தான் வாழ்ந்து வருகிறார்கள் பென்னாகரம் அருகில் மலைக்குகையில் வாழும் இருளர் இன மக்கள். பென்னாகரத்திலிருந்து ஒகேனக்கல் போகும் சாலையிலிருந்து, பிரிந்து செல்கிறது அந்தச் சிறிய சாலை. அடர்ந்த வனத்துக்குள் 20 கி.மீ. பயணம் செய்தால், சாலை முடிந்து மலைகள் சூழ்ந்த காட்டுப்பகுதி வருகிறது. காட்டுப் பகுதியினுள் காற்றின் உய்ங் இசையுடனும், பறவைகளின் கீச்... கீச்... பாடல்களுடனும் 8 கி.மீ. நடந்தால் வருகிறது சறுக்கல் பாறை மலைக்கிராமம்.

முத்துப்பட்டி மலையின் உச்சியில் அமைந்திருக்கும் இந்தக் கிராமத்தில் செல்போனைத் தவிர வேறு எந்த மின் சாதனங்களும் எட்டிப் பார்க்கவில்லை. உடையைத் தவிர நாகரிக வளர்ச்சியின் எந்தச் சுவடும் அந்த மக்களிடம் தென்படவில்லை. மக்கள் வசிப்பது மலைக்குகைகளில்.

தமிழ் மற்றும் கன்னடம் கலந்து பேசுகிறார்கள். நாம் வழக்கமாகப் பேசும் குகை என்ற வார்த்தையை அவர்களின் இருளர் பாஷையில் கவி என்று சொல்லுகிறார்கள். கவி என்றால் அவர்கள் மொழியில் வீடு.

இவர்கள் வசிக்கும் குகைகளுக்கு அருகேஒரு ஆழமானபகுதி இருக்கிறது. எட்டிப்பார்த்தால் வற்றிப்போன சிறிய ஆறு. அவ்வப்போது பெய்யும் மழையின் காரணமாக ஆற்றில் தண்ணீர் சிறு ஓடைகளாக போய்க் கொண்டிருக்கின்றது. அந்தத் தண்ணீர்தான் இந்த மக்களுக்கு நீர் ஆதாரம்.

கிருஷ்ணன்

ஒவ்வொரு குகைக்குள்ளும் சராசரியாக மூன்று

மனிதர்கள்

குடும்பங்கள் வாழ்கின்றன. கொள்ளுத் தாத்தா முதல் பேரன் வரை அதிகாலை எழுந்து கேழ்வரகைக் காய்ச்சிக் குடித்துவிட்டு, காட்டுக்குள் கிழங்குகள் பொறுக்கச் செல்கின்றனர். காட்டுக்குள் பல கிலோமீட்டர் தூரம் நடந்தே சுண்டைக்காய், கிழங்கினை சேகரிக்கின்றனர். சேகரிக்கப்பட்டவை வாரம் முறை, பென்னாகரம் சந்தையில் விற்கப்படுகின்றன.

சந்தையில் விற்ற பணத்தில் தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டு மீண்டும் சறுக்கல் பாறை வந்து சேர்கிறார்கள். பத்தாண்டு முன்பு வரை இந்த மக்கள் நகரத்துக்கு எந்தத் தொடர்பும் இல்லாமல் வாழ்ந்திருக்கிறார்கள்.

அப்போதுதான் பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் நஞ்சப்பன் இங்கு வந்து மக்களைச் சந்தித்து, நகர மக்களுடன் இயல்பாக பேசிப் பழகவும், அவர்கள் மீது இவர்களுக்கு இருந்த பயத்தினையும் போக்கி இருக்கிறார்.

கேழ்வரகைத் தங்களின் பிரதான உணவாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்த இந்த மக்கள், தற்போது அரிசியை சாப்பிடத் தொடங்கியிருக்கிறார்கள். ''பல தலைமுறைகளாக இந்தக் கவியில்தான் வாழ்ந்துகிட்டு இருக்கோம் சாமி! நமக்குப் பணம் அப்படின்னு ஒரு விஷயம் கீழ உள்ள நாட்டுக்குப் போன பிறகு (பென்னாகரம்) தான் தெரியும். அதுக்கு முன்னாடி எங்க அம்மா காட்டுல கிடைக்கிற சுண்டைக்காய் பொறுக்கி கீழே உள்ள நாட்டில் கொடுத்து, அங்குள்ள பணக்கார சாமி வீட்ல கொடுக்கிற ராகி மாவை வாங்கிட்டு வருவாங்க. அதுதான் எங்களுக்குச் சாப்பாடு...'' என்று தனது பால்ய வயது வாழ்க்கை முறையை நினைவுகூர்கிறார் இந்தக் குழுவின் எஜமான் என்று அழைக்கப்படும் போஜ்ஜியப்பன்.

மழைக்காலத்திற்குத் தேவையான உணவை குகைக்குள் பள்ளம் தோண்டி சேமித்து வைத்துவிடுகின்றனர். இந்தக் குழுவில் காதல் திருமணமும் செய்யப்படுகிறது. சம்பந்தப்பட்ட ஆண், பெண் இருவரின் வீட்டு சம்மத்துடன் மிக எளிமையான முறையில் காட்டுக்குள் இருக்கும் குலதெய்வம் முன் திருமணம் நடைபெறுகிறது. இந்த இனத்தில் உள்ள அனைத்து மக்களும் போஜ்ஜியப்பனின் வார்த்தைகளுக்கு கட்டுப்படுகின்றனர். ஏதாவது பிரச்சினை என்றாலும் சரி, விசேஷம் போன்ற தருணங்களிலும் போஜ்ஜியப்பன் முன்னின்று நடத்தி வைக்கிறார்.

சறுக்கல்பாறை மலைக்கிராமத்தின் கீழே உள்ள போடூர் பகுதியில் இப்போது சில இருளர் குடும்பத்திற்கு வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. ஆனால், காட்டில் வாழ்ந்து பழகிய மக்களுக்கு வீட்டில் வாழ்கின்ற வாழ்க்கை முறை சற்று சிரமமாகவே இருக்கிறது. சில குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளின் படிப்பிற்காக தற்போது இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

''காட்டுல உள்ள புளியம் பழத்தினை எடுக்க நாங்க அரசாங்கத்துக்கு காசு கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கு. எங்களுக்கு வேற பொழப்பு தெரியாது சாமி! காட்டில் கிடைக்கிற சுண்டைக்காய், கலாக்காய் எடுத்து வித்து இப்போ ஒருவேளை கஞ்சி குடிச்சிட்டு இருக்கோம். காசுதான் சாமி

இப்போ எங்களுக்கு இருக்கிற பிரச்சினை. காட்டுல வாழும்போது, காசுனா என்னன்னு தெரியாம இருந்தோம். இப்போ அந்தக் காசாலதான் எங்களுடைய வாழ்க்கை நிம்மதியில்லாம இருக்கு...'' என்று கனத்த குரலில் பேசுகிறார், குழுவில் கவுண்டர் என்று அழைக்கப்படும் கிருஷ்ணன்.

படங்கள் : **என்.ஹரிபிரசாத்**

என்.ஹரிபிரசாத்

இஸ்லாமிய தெய்வத்திற்கு விரதம் இருந்து இந்துக்கள் பூக்குழி இறங்க, பக்தர்களுக்கு திருநீரும் சர்க்கரையும் வழங்குகிறார் முஸ்லிம் பூசாரி

ஊரே திருவிழாக் கோலம் பூண்டிக்கிறது. வண்ணக் காகிதங்கள் மற்றும் சீரியல் விளக்கு அலங்காரங்களால் அருள்மிகு ஃபாத்திமா நாச்சியார் கோயில் ஜொலித்துக் கொண்டிருக்கிறது. கோயில் முன்பாக, சீரியல் விளக்குகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட மாரியம்மனும் சிவலிங்கமும் பள்ளிவாசலும் பிறை நட்சத்திரமும் பளிச் பளிச்சென்று மின்னிக் கொண்டிருக்கின்றன.

முஸ்லிம் தெய்வமான ஃபாத்திமா நாச்சியாருக்கு விரதம் இருந்து பூக்குழி இறங்குகின்றனர் இந்துக்கள். அங்கு வரும் பக்தர்களுக்கு திருநீரும் சர்க்கரையும் வழங்குகிறார் முஸ்லிம் பூசாரி. சிவகங்கை - புதுக்கோட்டை மாவட்டங்களின் எல்லையில் அமைந்திருக்கும் வாராப்பூரில், ஒவ்வொரு ஆண்டும் பத்து நோன்பு விழா நடைபெறுவது வழக்கம். கடந்த நவம்பர் 14-ஆம் தேதியன்று இரவு பூக்குழி இறங்கும் நிகழ்ச்சி.

ஃபாத்திமா நாச்சியார் கோயிலுக்கு எதிராக வட்டவடிவில் பிரமாண்டமான பூக்குழி ஒன்று அமைக்கப்பட்டு, நெருப்பு கனன்று கொண்டிருக்கிறது. பொழுது சாயும் வேளையில், குடும்பம் குடும்பமாக கோயிலை நோக்கி மக்கள் வருகிறார்கள். வாராப்பூர் மட்டுமின்றி, அருகேயுள்ள கட்டையன்பட்டியிலிருந்தும் மக்கள் வருகிறார்கள். ஒவ்வொருவரின் கையிலும் ஒரு விறகுக்கட்டை. பெரியவர்கள் பெரிய அளவிலான விறகுக்கட்டையையும், சிறுவர்கள் தாங்கள் தூக்கிச் செல்லக்கூடிய அளவிலான விறகுக் கட்டையையும் சுமந்து வந்து பூக்குழிக்குள் வீசுகிறார்கள். பிரமாண்டமான பூக்குழி என்பதால் நெருங்க முடியாத அனல் தகிக்கிறது.

ஏ.ஆர்.தங்கவேலு

''இதுக்குப் பத்து நோம்பு திருவிழான்னு பேரு. பத்து நாளுக்கு திருவிழா நடக்கும். மொகரம் அன்னைக்கி நோம்பு திறப்பாங்க. கிராமத்து சார்பா நேந்துவிட்ட கிடாய முஸ்லிம் மக்கள் சமைச்சு சாப்பிடுவாங்க. மூணாவது நாளுக்கு கிராமத்துல எல்லாரும ஒண்ணா சேந்து சாமி சிலையை நிறுத்துவோம். ராத்திரியில முஸ்லிம் மக்கள் பாத்தியா ஓதுவாங்க. அப்புறமா, பானகமும் பருப்புச்சோறும் சாமிக்குப் படைப்போம். இதே மாதிரி தெனமும் ஏழு நாளைக்கி நடக்கும். ஒம்பதாவது நாள் ராத்திரி பத்து மணிக்குப் பூ (நெருப்பு) போடுவோம். ராத்திரி முழுக்க நெருப்பு எரியும். மறுநாள் பகலிலும் இரவிலும் தொடர்ந்து எரியும்'' என்கிறார், வாராப்பூரைச் சேர்ந்த பெரியவர் ஏ.ஆர்.தங்கவேலு.

வெளியூர்களில் இருந்து சொந்த பந்தங்கள் வந்து குவிந்த வண்ணம்

முஸ்லிம் கோயிலில் தீமிதி விழா:

முஸ்லிம் பூசாரி விபூதி கொடுக்கிறார் இந்துக்கள் பூக்குழி இறங்குகிறார்கள்!

இருக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் இரவு விருந்து தயாராகிறது. அதனால், ஊரே கமகமக்கிறது. வெளியூர் உறவுக்கார இளைஞர் ஒருவரைப் பார்த்து, 'மச்சான்! எங்க வீட்டுக்கு வந்து சாப்புட்டுட்டுப் போறது' என்று வெட்கத்தோடு அழைக்கிறார் ஒரு பெண். 'கறி விருந்து நாளைக்கித்தானே. கட்டாயமா வந்துர்றேன் புள்ளே' என்று கரகரத்த குரலில் புன்னகையோடு பதிலளித்துவிட்டு பக்கத்து வீட்டிற்குள் நுழைகிறார் அந்த இளைஞர். கிராமத்துத் திருவிழா என்பதாலோ என்னவோ, இளம்பெண்கள் கலர் கலராய் தாவணி உடை அணிந்து வலம் வருகிறார்கள். இஸ்லாமியப் பெண்கள் பலரும் கோயிலுக்கு வந்து சாமியை வணங்குகிறார்கள். பதினோரு மணியளவில் பானகம் கரைக்கப்படுகிறது.

அந்தச் சமயத்தில், ரண்டக்க... ரண்டக்க... ரண்டக்க... மேளச்சத்தம் காதைப் பிளக்கிறது. கோயிலுக்கு அருகேயுள்ள திடலில் கரகாட்டம் ஆரம்பம். 'புதுக்கோட்டை திலகம் கரகாட்டக்குழுன்னா ரொம்ப ஃபேமஸ். பிச்சு எடுத்துருவாய்ங்கள்ல'' என்று படு உற்சாகத்தோடு கூறுகிறார், நமக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் ஒரு கிராமத்துப் பெரியவர். கரகாட்டத்துக்கான மவுசு இன்னும் குறையவே இல்லை என்பதற்கு சாட்சியாக அங்கு மிகப்பெரும் ரசிகர் பட்டாளம் திரண்டிருக்கிறது. அரண்மனை முன்பாக ஆடலுடன் பாடல் நிகழ்ச்சி. அதைக் காண பெண்கள் உள்ளிட்ட இளைஞர்கள் கூட்டத்தால் ஊர் மந்தை நிரம்பி வழிகிறது.

''இங்கே பதினெட்டு சாதி இருக்கு. ஒவ்வொரு சாதிக்காரவுகளும் தொண்டூழியம் செய்வாங்க. தலித் மக்கள்தான், பூக்குழி அமைப்பாங்க. பூக்குழி எறங்குறவங்களுக்கு எங்க ஊரு வண்ணார்தான் வேட்டி, சேலை கொடுப்பாங்க. அதைக் கட்டிக்கிட்டுத்தான் பூக்குழி எறங்கணும். இப்புடி, ஒவ்வொரு சாதிக்காரவுகளுக்கும் ஒவ்வொரு கடமை இருக்கு. ஒரு சாதிக்காரவுக இல்லாட்டிகூட, திருவிழாவே இல்ல. நாங்க எல்லாரும் ஒத்துமையா இருந்து நல்லபடியா திருவிழாவ நடந்துக்கிட்டு வர்றோம்'' என்கிறார் தங்கவேலு.

அதிகாலை நான்கு மணியளவில், பூக்குழி இறங்கும் ஆண்களும் பெண்களும் நீராடுவதற்காக ஜமீன் குளத்தை நோக்கி நடக்கிறார்கள். சாமிக் குடைகளும் இஸ்லாமிய பச்சை வண்ணக்கொடிகளும் அந்த ஊர்வலத்தில் ஏந்திச் செல்லப்படுகின்றன. பூக்குழி இறங்குபவர்கள் ஈரத்துணியோடு திரும்பி வருகிறார்கள். பெண்களில் பலருக்கு அருள் வந்து, 'ம்ம்ம்... ம்ம்ம்...' என்று உறுமுகிறார்கள். ஆண்கள் ஒருவர் பின் ஒருவராக பூக்குழிக்குள் இறங்குகிறார்கள். பெண்களோ பூக்குழியைச் சுற்றி வந்து ஓர் இடத்தில் ஒருவர் பின் ஒருவராக குத்த வைக்க, அவர்களின் தலை மீது, ஒருவர் மண்வெட்டியால் நெருப்பை அள்ளி வைக்கிறார். அங்கு ஒரே பக்திப் பரவசம்.

அதிகாலை ஐந்து மணியளவில், அலங்காரம் செய்யப்பட்ட சப்பரத்தின் மீது ஃபாத்திமா நாச்சியார் சிலை வைக்கப்பட்டு ஊர்வலம் புறப்படுகிறது. அப்போது, 'ஃபாத்திமா அன்னை ஃபாத்திமா ...' என்ற பாடல் ஒலிக்கிறது. ஊர்வலம் முடிந்த பிறகு, ஐதீகப்படி ஃபாத்திமா நாச்சியாரின் சிலை பூமியில் புதைக்கப் படுகிறது. சமூக நல்லிணக்கம் உயிர்ப்புடன் இருக்கிறது.

படங்கள் : மே. மேக் மில்லர்

■ ஆ. பழனியப்பன்

பொங்கல் சிறப்புப் பக்கங்கள்

எல்லா மதமும் எம்மதமே...

மதிய வேளை சாலையில் நடந்து கொண்டிருந்தபோது, 'எல்லாம் இயேசுவே...' என்ற பாடல் நம் காதில் வந்து விழுந்தது. சட்டென்று திரும்பிப் பார்த்தால், அந்தப் பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது... அட, ஒரு மாரியம்மன் கோயிலில்! ஆச்சரியத்துடன் நகர்ந்தோம் அந்த ஊருக்குள். அது திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள வேடபட்டி என்ற கிராமம். பள்ளிவாசலில் பழனியப்பனும், மாதா கோயிலில் ஃபாத்திமாவும், பிள்ளையார் கோயிலில் பீட்டரும் இறைவனை வழிபடுகிறார்கள் என்றால் நம்பவா முடிகிறது? ஆனால், அது உண்மை. ஏறத்தாழ 7,500 பேர் வாழும் இவ்வூரில் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் என எல்லா மதத்தைச் சார்ந்த மக்களும் உள்ளனர். என்னதான் வேறுபட்ட மதங்களை சேர்ந்தவர்களாக இருந்தாலும் இவ்வூர் மக்களிடம் மனிதர்கள் என்ற எண்ணம் மட்டுமே மேலோங்கி இருக்கிறது.

சையது அபுதாகீர்

ஜோசப்

''எந்தவொரு திருவிழாவாக இருந்தாலும், பண்டிகையாக இருந்தாலும் ஊர்மக்கள் அனைவரும் ஒன்று கூடிதான் அதனைக் கொண்டாடி மகிழ்கின்றனர். எங்க ஊர்ல காளியம்மன் கோயில், அன்னை வேளாங்கண்ணி மாதா கோயில், பள்ளிவாசல் என எல்லா மத வழிபாட்டுத் தலங்களும் உள்ளன. இங்கு ஜாதி, மத பேதமின்றி மக்கள் அனைவரும் எல்லா விழாக்களையும் நல்லுணர்வுடனும், மதநல்லிணக்கத்துடனும் ஒன்று சேர்ந்து கொண்டாடி வருகிறோம். எடுத்துக்காட்டாக மாதா கோயில் திருவிழான்னா, நாங்க போய் மாரியம்மன் கோயில் பெரியவருக்கு சந்தனம், பூமாலை போட்டு மரியாதை செலுத்தி மேள தாளத்தோடு கூட்டி வருவோம். அப்படி எல்லா மதப் பெரியவர்களையும், மக்களையும் அழைத்துதான் ஆரம்பிப்போம். ஆடி மாதம் கோயில் திருவிழாவில் சாப்பாடு பரிமாறுவது தொடங்கி, சப்பரம் இழுப்பது வரை எல்லாமே எங்க இஸ்லாம் மற்றும் கிறிஸ்துவ சகோதரர்கள்தான் செய்வார்கள். கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டுக் காலங்களில் கூட்டுத் திருப்பலிகள் நடைபெறும். சென்ற வாரம்கூட சமத்துவப் பொங்கல் கொண்டாடினோம்'' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார், 27 வருடங்களாக இவ்வூரில் வசித்து வரும் ஜோசப். அவரைத் தொடர்ந்து,

ஆரோக்கியசாமி

தனலட்சுமி
கவுன்சிலர்

த.மு.மு.க. கிளைத் தலைவரான சையது அபுதாகீர் கூறியதாவது, ''14 வருடங்களாக இவ்வூரில் நான் வசித்து வருகின்றேன். இதுவரை இங்கு பிரிவினை என்று எதையுமே பார்த்ததே இல்லை. மக்களுக்குள் எதும் பிரச்சினை என்றால் எல்லா மதத்தைச் சார்ந்த தலைவர்களும், மக்களும் ஒன்று கூடி சுமுகமாகப் பேசி

மூன்று மதத்தைச் சேர்ந்த மக்களும் மதத்தை மறந்து ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள் ஒரு கிராமத்தில்

எதுவும் எமக்குச் சம்மதமே!

முடித்து விடுவோம். புது ஆட்கள் எங்கு குடிவந்தாலும் அவர்களை வெளியாட்கள்போல் பழகாமல் சொந்த பந்தங்களை போலத்தான் பழகி வருகிறோம். இவ்வூரில் உள்ள மக்கள் அனைவரும் மாமன், மச்சான் போலத்தான் உள்ளோம். இம்ஃப்தார் தினத்தன்று எல்லா மதத்தினரும் ஒன்று கூடி பள்ளிவாசலில் விருந்துண்டு மகிழ்வோம்'' என்கிறார்.

முத்துமாரியம்மன் கோயில் தலைவர் ஆரோக்கியசாமி, ''நான் ஒரு கிறிஸ்தவன் என்றாலும்கூட, இங்குள்ள மாரியம்மன் கோயில் நிர்வாகத்தை நான்தான் கவனித்து வருகின்றேன். இங்கு கோயில், சர்ச், மசூதி என எல்லாமே இருப்பதால் எங்க ஊருக்கு எல்லா மதத்தைச் சார்ந்த மக்களும் குடி வருவார்கள். காரணம், கடந்த 15 வருடங்களில் இவ்வூர் நல்ல வளர்ச்சியடைந்துள்ளது. எந்த ஒரு விஷயமாக இருந்தாலும் ஊர் மக்களின் ஒத்துழைப்பு அருமையாக இருக்கும்'' என்கிறார்.

எப்படி இந்த சமத்துவ உணர்வு இவ்வூர் மக்கள் மத்தியில் உருவானது என்பதை விளக்கிய நகர்மன்ற உறுப்பினர் தனலட்சுமி மகேந்திரன், ''இந்த ஊரில் முன்பு

இருந்த மக்கள் எங்களுக்கு முன்னோடியாக ஒற்றுமையுடன் வாழ்ந்த காரணத்தால் என்னவோ, இச்சமத்துவப் பண்பு எங்கள் ரத்தத்திலும் ஊறிவிட்டது. நாடு முழுவதும் ஜாதி, மதக் கலவரங்களும் வெடிகுண்டு கலாச்சாரமும் பரவியுள்ள இந்தக் காலகட்டத்தில் சமத்துவத்துக்கு எங்கள் ஊர் ஓர் அருமையான எடுத்துக்காட்டு. எல்லா மக்களும் ஒன்றாக மத நல்லிணக்கத்தோடு வாழ்வதால் போலீஸுக்கு வேலை இருக்காது'' என்கிறார். எத்தனை நதிகள் ஓடினாலும் இறுதியில் சேரப்போவது கடல்தான். அதுபோல எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, இறைவனைத்தானே சேவிக்கிறோம் என்ற எண்ணம் கொண்ட இவ்வூர் மக்கள் தமிழகம் மட்டுமல்ல, இந்த நாட்டிற்கே ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

படங்கள்: அ. கிரிதரன்

■ கே. ஷங்கர்

பொங்கல் சிறப்புப் பக்கங்கள்

பொண்ணு...'மாப்பிள்ளை'டோய்!

நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் கப்பு சமூகத்தைச் சேர்ந்த கோக்ரகொண்டா குடும்பம் வியாபார நிமித்தமாக பல இடங்களுக்கும் சென்றது. அப்போது நாடகங்களைப் பார்க்கும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்தது. அந்தக் காலத்தில் பெண்கள் நாடகங்களில் நடிப்பதில்லை என்பதால் பெண் கதாபாத்திரத்தை ஆண்களே பெண் வேஷமிட்டு நடிப்பார்கள். நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த கோக்ரகொண்டா குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் பெண் வேஷமிட்ட ஆண் நடிகர் மேல் கற்களை வீசி கேலி, கிண்டல் செய்திருக்கிறார்.

வியாபார வேலைகள் முடிந்து சொந்தக் கிராமத்திற்குத் திரும்பிய பின் அவர்கள் குடும்பங்களில் பல விஷயங்கள் வழக்கத்திற்கு மாறாக நடந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்துவிட்டனர். உதாரணமாக அரிசியை வேக வைத்தால் ஒரு பகுதி அரிசி வேகாமல் அப்படியே இருந்தது. குறிப்பாக அவர்கள் குடும்பத்தில் நடக்கும் திருமணங்களில் இதுபோன்ற பல அதிர்ச்சி சம்பவங்கள் நடந்தன. பெண் வேஷமிட்ட நடிகரை கேலி செய்ததாலேயே இதுபோன்ற சம்பவங்கள் நடப்பதாக நம்பிய அவர்கள், அன்றிலிருந்து தங்களின் குலதெய்வமான மேரு கங்காவின் கோபத்தைத் தணிக்க ஒரு உபாயத்தைக் கண்டுபிடித்தனர்.

இனி தங்களது குடும்பங்களில் நடக்கும் திருமணங்களின்போது மாப்பிள்ளை பெண்ணின் அலங்காரத்திலும், மணப்பெண் மாப்பிள்ளையின் உடையிலும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதே அந்த விநோதமான உபாயம். அன்றிலிருந்து இன்றுவரை பல நூற்றாண்டுகளாக இந்த வழக்கத்தை இவர்கள் தவறாமல் பின்பற்றி வருகின்றனர். திருமணத்திற்காகக் கோயிலுக்குச் செல்லும்போது, உடை அலங்காரத்தைப் பொறுத்தவரை பெண் மாப்பிள்ளையாகவும், மாப்பிள்ளை பெண்ணாகவும்தான் சென்றுவருகின்றனர்.

பேண்ட் வாத்தியம் முழங்க... மாப்பிள்ளை பெண்ணின் உடையிலும் பெண், மாப்பிள்ளையின் உடையிலும் உறவினர்கள் புடைசூழ வீட்டிலிருந்து வெளியில் வருகிறார்கள்... மாப்பிள்ளையின் கையில் குங்குமமும் சந்தனமும் பெண்ணின் கையில் வாளும் கேடயமும் ஏந்தியபடி. கோயிலை அடைந்தவுடன் ஒரு பானையை வைத்து அதன் மேல் மேரு கங்கா

மாப்பிள்ளை உடையை மணப்பெண்ணும் மணப்பெண் உடையை மாப்பிள்ளையும் அணிந்து திருமணம் செய்துகொள்ளும் விநோதம் நடக்கிறது ஒரு கிராமத்தில்

படத்தை அர்ச்சகர் வைக்க... ஆடல், பாடல், வழிபாடு எல்லாம் நடக்கின்றன. இது முடிந்தவுடன் கோழியின் கழுத்தை அறுத்து ரத்தத்தை மணமக்களின் நெற்றியில் திலகமிடுகிறார்கள். அதன்பின் மணமக்களும் உறவினர்களும் திரும்பிப் பார்க்காமல் வீடு வந்து சேருகிறார்கள்.

வீட்டுக்கு வந்த பிறகே அவரவர்களுக்கான உடையை அணிந்துகொள்கின்றனர்.

திருமண நாளில் முதலில் மேரு கங்கா அம்மனுக்கு உணவு தயார் செய்யப்படுகிறது. வழக்கமாக கோயிலுக்குக் கொண்டு செல்லும் பூ, பழம் போன்றவற்றுடன் அரிசி, பாசிப் பருப்பு, வேக வைத்த பீன்ஸ் தலா இரண்டரைக் கிலோ, வெல்லம் கலந்த மாவு இரண்டு கிலோ, 300 அப்பம், லட்டு உட்பட இன்னும் சில இனிப்புகள், வேப்பங் கொழுந்து, சாராயம், இவற்றோடு உயிருள்ள கோழியும் கோயிலுக்கு காணிக்கையாகத் தரப்படுகிறது

''சில ஆண்டுகளுக்கு முன் வரை புகைப்படங்கள் எடுக்கவே அனுமதியில்லை. எங்கள் சமூகத்தைச் சேர்ந்த அனைவரும் இந்தச் சடங்குகளை சிரத்தையோடு நம்பிக்கையோடு செய்கிறோம். இதை யாரும் விளையாட்டாக எடுத்துக் கொள்வதில்லை. இப்போதும் சடங்குகளை படம் எடுப்பதில்லை. மணமக்களை மட்டும் எடுக்கிறோம். மீண்டும் பழைய சாபம் வந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறோம்'' என்கிறார், இந்தக் கிராமவாசியான ஹரிபாபு.

இந்த சமூகத்தைச் சேர்ந்த இரண்டு டாக்டர்கள் இந்தச் சடங்குகளில் நம்பிக்கை இல்லாததால் இந்த வழக்கத்தைப் பின்பற்றவில்லை. விளைவு? இதனால் திருமணம் ஆன சில நாட்களிலேயே அவர்கள் மனைவிகளை இழந்ததாகவும், அதன் பின் குலவழக்கத்தைப் பின்பற்றி இரண்டாவதாக திருமணம் செய்து மகிழ்ச்சியாக இருப்பதாகவும் ஹரிபாபு ஒரு சம்பவத்தை நினைவு கூர்கிறார்.

''மேலும் இந்தக் கிராமத்தைச் சுற்றிலும் சீமாந்திரா டெல்டா விவசாயிகள் அதிகம். இவர்களின் ஹாஸ்யம் பிரசித்தி பெற்றது. அவர்களே கூட எங்களின் சம்பிரதாயத்தையும் வழக்கத்தையும் மதிக்கிறாரகள். வெளிநாடுகளில் செட்டில் ஆகிவிட்ட இந்தக் குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் தங்களின் பரம்பரை பழக்கம் மாறிவிடக் கூடாது என்பதற்காக திருமணம் செய்துகொள்ள இங்குதான் வருகிறார்கள்'' என்றும் ஹரிபாபு கூறுகிறார்

கோக்ரகொண்டா குடும்பத்தின் சொந்த ஊர் நல்லமிள்ளி கிராமம். ஆந்திர மாநிலத்தின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் அமலாபுரத்தில் உள்ளது. குறிப்பிட்ட இந்த கப்பு சமூகத்தில் சுமார் 300 பேர் இங்கு வசிக்கிறார்கள்.

■ கீதா

பொங்கல் சிறப்புப் பக்கங்கள்

சமஸ்கிருதம் பேசினால் கோபமே

கர்நாடகா மாநிலத்தின் ஷிமோகா மாவட்டத்திலிருந்து சுமார் 16 கி.மீ. தூரத்தில் துங்கா நதிக்கரையில் உள்ளது மாத்தூர் கிராமம். இயற்கை எழில் கொஞ்சும் அழகிய சிறிய கிராமம் இது. எல்லா நேரமும் வேதங்களின் ஒலி கேட்டுக் கொண்டே இருக்கும் இந்தக் கிராமத்திற்குள் நுழைந்தவுடன் நம்மையும் அறியாமல் ஒரு பரவசம் ஒட்டிக் கொள்கிறது. 250-க்கும் அதிகமான பிராமணக் குடும்பங்கள் வசிக்கும் இந்தக் கிராமத்தில் சதுர வடிவில் அக்ரஹார அமைப்பில் வீடுகள் உள்ளன.

இந்தியாவில் இரண்டு கிராமங்களில்தான் இன்று வரை சமஸ்கிருதம் பேச்சுமொழியாக உள்ளது. அதில் மாத்தூர் மிக முக்கியமானது. 500 ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் புதுக்கோட்டையிலிருந்து பிராமண வகுப்பைச் சேர்ந்த சமஸ்கிருதப் பண்டிதர்கள் தங்களின் தினசரி வழக்கங்களுக்கு வசதியாக துங்கா நதிக்கரையில் குடியேறினார்கள்.

அப்போது அந்தப் பகுதியை ஆண்ட கிருஷ்ண தேவராயர் இங்கு குடியேறிய பிராமணர்களுக்கு அந்தப் பகுதியில் உள்ள நிலத்தையே தானமாகத் தர விரும்பினார். ஆனால், ஒருவரிடமிருந்து தானமாகப் பெறுவது என்றால் அவரின் பாவங்களையும் சேர்த்தே பெறுவது என்ற நம்பிக்கையால் அரசர் கொடுத்த நிலங்களை வாங்க மறுத்துவிட்டார்கள். வசதி படைத்த சக பிராமணர்கள் தரும் உதவிகளைக் கொண்டு அன்றாட வாழ்க்கையை நகர்த்திய அவர்களைப் பார்த்த மன்னர் தன் அரசவையில் உள்ள பண்டிதர் ஒருவரை பிராமணர்போல வேஷம் தரித்து அந்த நிலங்களை அவர்களுக்கே கொடுத்துள்ளார்.

இவர்கள் பேசும் சமஸ்கிருத மொழியை சங்கேதி என்கிறார்கள். தமிழ், சமஸ்கிருதம், கன்னடம் ஆகிய 3 மொழிகளின் கலவையாக இவர்கள் பேசும் மொழி உள்ளது. இதுவரையிலும் இந்த மொழிக்கு எந்த எழுத்து வடிவமும் கிடையாது. பிராமணர்கள் மனை என்று அழைக்கப்படும் இந்த மொத்தக் கிராமத்தையும் மற்ற பகுதியில் உள்ள பிராமணர்கள், அறிஞர்கள் தனி மரியாதையோடு பார்க்கிறார்கள். இந்தக் கிராமத்தில் இருக்கும் பாடசாலையில் பாரம்பரிய முறைப்படி வேதங்கள் குறிப்பாக கிருஷ்ண யஜுர் வேதம் கற்றுத்

வராது...

ஐநூறு ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் புதுக்கோட்டையிலிருந்து கர்நாடக மாநிலம் மாத்தூர் சென்று குடியேறியவர்களின் பேச்சுமொழி சமஸ்கிருதம்

தரப்படுகிறது. தவிர சாஸ்திர சம்பிரதாயங்கள், சடங்குகள் அனைத்தும் போதயானா மற்றும் அபஸ்தம்ப சூத்திரங்களிலிருந்து கற்றுத் தரப்படுகின்றன. இதோடு சேர்த்து மற்ற யஞ்னங்களையும் கற்றுத் தருகிறார்கள்.

''இந்தக் கிராமத்தில் இருக்கும் அனைவருக்கும் தாய் மொழி சங்கேதியாக இருந்தாலும் அனைவரும் சமஸ்கிருதம் மிக நன்றாகப் பேசுவோம். தரி, தமிழ், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலமும் தெரியும்'' என்கிறார் கணபதி, மதிய நேரத்திலும் சுகமாக வீசிய காற்றை அனுபவித்தபடி.

அருகில் உள்ள கிராமங்களிலிருந்து 10-க்கும் குறைவான மாணவர்களே தற்போது இந்த வேதப் பாடங்களைக் கற்று வருகிறார்கள். காரணம் வேதங்களை கற்றுக் கொள்ளும் 5 வருடங்களும் குருகுல முறைப்படி பாடசாலையிலேயே தங்கி இருக்க வேண்டும். இந்த மாணவர்களுக்கான உணவு மற்றும் பிற செலவுகள் அனைத்தையும் (தானமாக வாங்கும் வழக்கம் இங்கு கிடையாது என்பதால்) பல பிராமணக் குடும்பங்கள் ஏற்றுக் கொள்கின்றன.

காலை 10 மணியிலிருந்து மதியம் வரை சமஸ்கிருதப் பண்டிதர்களின் மேற்பார்வையில் மாணவர்கள் வேதம் சொல்கிறார்கள். மதியம் சாம்பார், சாதம், ஏதாவது ஒரு காயுடன் உணவு. அதன்பின் மீண்டும் மாலை வரை வேதம். காலை, மாலை இரண்டு வேளைகளும்கூட மிக எளிமையான உணவு தரப்படுகிறது. அக்ரஹாரத்தை ஒட்டியே சரஸ்வதி வித்யாலயா என்ற அரசுப் பள்ளி உள்ளது. மாநில பாடத்திட்டம் பிரதானமாக இருந்தாலும் இங்கும் சமஸ்கிருதம் இரண்டாவது மொழியாக கற்றுத் தரப்படுகிறது. வேதப் பாடங்கள் எல்லாம் முடிந்து மாலை நேரத்தில் அங்கிருக்கும மைதானத்தில் அல்லது தெருவில் மாணவர்கள கிரிக்கெட் விளையாடுகிறார்கள்.

''தொடர்ந்து சமஸ்கிருதம் பேசினால் கோப உணர்ச்சியே வராது. பயிற்சி மூலம் மனிதனைப் பக்குவப்படுத்தும் ஒரு சில பாரம்பரிய விஷயங்களில் சமஸ்கிருதம் பிரதானமானது'' என்கிறார் ஷாமகேஸ்வரி தீக்ஷிதர்.

வேதங்களையும் சாஸ்திர சம்பிரதாயங்களையும் ஆராய்ச்சி செய்வதற்கும் மாணவர்கள் இங்கு வருகிறார்கள். குறிப்பாக ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளிலிருந்து வரும் ஆராய்ச்சி மாணவர்கள் சில காலம் இங்கேயே தங்கி ஆராய்ச்சியை மேற்கொள்கிறார்கள். இவர்கள் தங்கள் ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக சமஸ்கிருத ஓலைச்சுவடிகளை

எடுத்து கம்ப்யூட்டர் உதவியுடன் அதில் உள்ள எழுத்துக்களைப் பெரிதாக்கி அழியும் நிலையில் உள்ள எழுத்துக்களை மீண்டும் எழுதுகிறார்கள். தற்போதைய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இதை அச்சிட்டு வைக்கும் பணியும் இதில் ஓர் அங்கம்.

ரிக் வேதத்தில் பண்டிதம் பெற்ற பிராமணர்கள் வசிக்கும் இந்தக் கிராமத்திற்கு ரிக் வேதம் கற்றுக் கொள்வதற்காக பல நாடுகளிலிருந்தும் மாணவர்கள் வருகிறார்கள்.

துங்கா நதியின் மறுகரையில் உள்ளது இன்னொரு சமஸ்கிருதக் கிராமம் ஹோசாஹள்ளி. ஹோசா என்றால் கன்னடத்தில் புதிது என்று பொருள். சிருங்கேரி மடத்தின் உதவியுடன் இங்கும் சில மாணவர்களுக்கு சமஸ்கிருதம் கற்றுத் தரப்படுகிறது. இந்தக் கிராமங்களில் சமஸ்கிருதம் கற்றுத் தரும் பெரும்பாலான சமஸ்கிருத வித்வான்களின் வாரிசுகள் மேற்கத்திய கல்வி பயின்று பெங்களூருவில் வேலையில் இருக்கிறார்கள்.

■ அனன்யா

பொங்கல் சிறப்புப் பக்கங்கள்

தமிழிசை பயின்றால் வேலை வாய்ப்புகளையும் பெறலாம்...

தமிழிசையின் வளர்ச்சிக்கு மதுரையில் ஓர் ஆய்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது

மார்கழி மாதம் நிறைவடையப் போகிறது. வழக்கம் போல ரசிகர்களுக்கு கர்நாடக இசை மழையைப் பொழிந்த சபாக்களும் ஓய்வெடுக்கத் தயாராகிவிட்டன. உலகின் மூலை முடுக்குகளில் இருந்துகூட வந்து கர்நாடக சங்கீதத்தை ருசித்த தமிழர்களும் சொந்த ஊர்களுக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் தமிழகத்தில் எந்த மூலையிலாவது தமிழிசைக் கச்சேரிகள் நடக்கின்றனவா எனப் புலனாய்வு செய்துதான் கண்டுபிடிக்க வேண்டி இருக்கிறது. மொழியில் மட்டுமல்ல, இசையிலும் தொன்மை வாய்ந்த தமிழை தாய்மொழியாகக் கொண்ட தமிழர்கள், கர்நாடக இசைக்குத் தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருவது தமிழகத்தில் மட்டுமே நிகழும் நகைமுரண்.

ஆனாலும் ராஜா.சர்.அண்ணமலை செட்டியார் போன்ற தமிழ் ஆர்வலர்கள் தங்கள் காலங்களில் தமிழிசையை வளர்க்க எடுத்த முயற்சிகள் தமிழிசை வரலாற்றில் சில மாற்றங்களை ஏற்படுத்தியது. இந்த முயற்சிகளின் தொடர்ச்சியாக தமிழிசை குறித்த ஆய்வுகள் மேற்கொள்வதற்காக மதுரையிலுள்ள தியாகராசர் கலைக் கல்லூரியில் தமிழிசை ஆய்வு மையம் ஒன்று அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இங்கு தமிழிசை குறித்த ஆய்வுகள் நடைபெறுவது மட்டுமின்றி, கல்லூரி மாணவர்களுக்கு தமிழிசையும் பயிற்றுவிக்கப்படுகிறது. இசைக் கல்லூரிகளைத் தவிர ஒரு தனியார் கல்லூரி ஒன்றில் தமிழிசைக்கென ஓர் ஆய்வு மையம் அமைவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க தொழிலதிபரும், தமிழ் ஆர்வலருமான பால்.சி.பாண்டியன் புரவலராகவும், தியாகராசர் கல்லூரி தலைவர் கருமுத்து கண்ணன் தலைவராகவும், கல்லூரிச் செயலர் உமா கண்ணன் செயலாளராகவும், முனைவர் கு.ஞானசம்பந்தன் ஒருங்கிணைப்பாளராகவும், தமிழிசை ஆய்வாளர் மம்முது ஆய்வாளராகவும் கொண்ட இந்தத் தமிழிசை ஆய்வு மையம் தியாகராசர் கல்லூரி வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. தமிழிசை ஆய்வில் தனது முதல் முயற்சியாக தமிழ் இலக்கியங்களில் உள்ள தமிழிசைக் குறிப்புகளைத் தொகுத்து பேரகராதி (glossary) ஒன்றை வெளியிட்டுள்ளது இந்த மையம்.

"2006-ஆம் ஆண்டு அமெரிக்கா சென்றிருந்தபோது, அமெரிக்க தொழிலதிபரும், தமிழ் ஆர்வலருமான பால்.சி.பாண்டியனுடன் பேசிக்கொண்டிருக்கும்

போது, 'தமிழில் உள்ள இசை குறித்த தகவல்களை தொகுத்தால் பயனுள்ளதாக இருக்கும்' எனத் தெரிவித்தேன். உடனடியாக, இந்த முயற்சிக்குத் தேவைப்படும் அனைத்து செலவுகளையும் தான் ஏற்றுக் கொள்வதாக உறுதி அளித்தார் பால்.சி.பாண்டியன்.

இதைத் தொடர்ந்து தமிழிசைப் பேரகராதியை உருவாக்க நான், மம்முது மற்றும் பல தமிழறிஞர்கள் கொண்ட 10 பேர் குழு அமைத்தோம். பேரகராதி உருவாக்கப்பட்டபின் அதை தமிழ் செம்மொழி மாநாட்டில் வெளியிடலாம் என நினைத்திருந்தோம். ஆனால், அதற்குரிய வாய்ப்புகள் அமையாததால் சென்னை எத்திராஜ் கல்லூரியில் பேராசிரியர். க.அன்பழகன் அவர்கள் தலைமையில் வெளியிட்டோம்.

ஏற்கெனவே தமிழிசைக் குறிப்புகள் தொடர்பான தனித்தனி நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால், தமிழிசை குறித்த அனைத்துத் தகவல்களும் அடங்கிய பெரிய பேரகராதி கொண்டு வரப்படுவது இதுவே முதல்முறை.

தமிழ் இலக்கியங்களில் இரண்டாயிரம் ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்ட இசை தொடர்பான சொற்களின் தொகுப்புதான் இந்தப் பேரகராதி. இதில் இடம்பெற்றுள்ள பல சொற்கள் தற்போது புழக்கத்தில் இல்லை. அவற்றை அழிந்து விடாமல் மீட்டெடுப்பதே இந்தப் பேரகராதியின் நோக்கம். இரண்டாம் நூற்றாண்டில் இருந்து தற்போதுவரை இசை எப்படி மாற்றம் அடைந்துள்ளது என்பதையும் இதில் தெரிவித்துள்ளோம். இது தமிழிசை குறித்து ஆய்வு செய்பவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தற்போது எங்கள் தமிழிசைப் பேரகராதியை இலவசமாக எல்லா நூலகங்களுக்கும் அனுப்பி வருகின்றோம்'' என்கிறார், தமிழிசை ஆய்வு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர். கு.ஞானசம்பந்தன்.

கு.ஞானசம்பந்தன்

சிவப்பிரகாசம்

சந்தனக்குமார்

தமிழ்ப் பேரகராதி உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டு விட்டாலும், தமிழிசை குறித்த தனது ஆர்வத்தை தொடர்ந்திருக்கிறார் பால். சி.பாண்டியன். தமிழிசையை மீட்டெடுப்பதில், தன் அடுத்த முயற்சியாக, ஒரு கல்வி நிலையத்தோடு இணைந்து தமிழிசை ஆய்வுகள் மேற்கொள்ளலாம் என்றும், அதற்கான செலவையும், தானே ஏற்பதாகவும் தெரிவித்திருக்கிறார். இதைத்தொடர்ந்து தமிழ்த்துறைக்கு பிரசித்தி பெற்ற தியாகராசர் கலைக் கல்லூரியில் தமிழிசை ஆய்வு மையம் இசைஞானி இளையராஜா அவர்களால் 2013 ஜூலை மாதம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. சுமார் 10 லட்ச ரூபாய் உள்கட்டமைப்பு வசதிகள், ஒரு லட்ச ரூபாய் செலவில் இசைக்கருவிகள் இம்மையத்தில் அமைக்கப்பட்டுள்ளன. உலகத் தொடர்புகளை வளப்படுத்திக் கொள்ள இதற்கென தனி இணையதளமும் உருவாக்கப்பட்டுள்ளது.

''இசை குறித்த ஆய்வுகள் மட்டுமின்றி, மாணவர்களிடையே தமிழிசையைப் பரப்ப வேண்டும் என்பதற்காக மாணவர்களுக்கு தமிழிசையும், இசைக் கருவிகள் இசைக்கவும் கற்றுக் கொடுக்கிறோம். வாரத்தில் மூன்று நாட்கள் கல்லூரி நேரம் முடிந்ததும் இந்த வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதனால் மாணவர்கள் கல்வியோடு தமிழிசையை கற்றுக் கொள்ளும் வாய்ப்பும் கிடைக்கிறது. தற்போது தமிழிசை மையத்தில் நாற்பதுக்கும் மேற்பட்ட தியாகராசர் கலைக் கல்லூரி மாணவர்கள் ஆர்வத்தோடு இசை மற்றும் இசைக்கருவிகள் பயின்று வருகின்றனர். இதற்கென தனித்தனி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஒவ்வொரு பருவத்திலும் ஒரு தமிழிசை நிகழ்ச்சியை மாணவர்களுக்காக நிகழ்த்திக் காட்டுகிறோம். சமீபத்தில் காவடிச்சிந்து நிகழ்ச்சி மாணவர்களுக்காக நடத்தப்பட்டது. முனைவர் பட்ட ஆய்வுக்காக தமிழிசையை தேர்ந்தெடுக்கும் மாணவர்களுக்கு உதவித்தொகை அளிக்கும் திட்டமும் உள்ளது'' என்கிறார் முனைவர். கு.ஞானசம்பந்தன்.

தமிழிசை மையத்தின் இசை ஆசிரியரான சிவப்பிரகாசம் கூறும்போது, ''தற்போதைய காலகட்டத்தில் தேவாரம், திருவாசகம் போன்ற தமிழிசைப் பாடல்கள் கற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. ஆனால், இங்கு மாணவர்கள் ஆர்வத்துடன் இசை கற்று வருகின்றனர். தேவாரம், திருவாசகம், திவ்யப்பிரபந்தம், பாரதியார் பாடல்கள், திருவருட்பா, திருப்புகழ் போன்ற தமிழிசை சார்ந்த பாடல்களை மாணவர்களுக்குக் கற்றுத் தருகிறோம். தற்போது இசை சார்ந்த பல வேலைவாய்ப்புகள் உலகம் முழுவதும் கிடைக்கின்றன. எனவே தமிழிசையை தொடர்ந்து பயிற்சி

''தமிழிசை நிகழ்ச்சிகளில் தமிழர்கள் கலந்து கொள்ள வேண்டும்''

-தமிழிசை ஆய்வாளர் மம்முது

''முத்தமிழ் என்று நாம் சொல்கிறோமே தவிர, அதில் இயற்றமிழ் தவிர்த்து இசை, நாடகத்தமிழ் பரவலாக யாருக்கும் தெரிவதில்லை. ஒருமுறை அமெரிக்கா சென்றிருக்கும்போது, அங்குள்ள பல்வேறு நண்பர்களின் வீடுகளுக்குச் செல்ல வேண்டி இருந்தது. அங்கு எல்லாருடைய வீட்டிலும் ஏதாவது ஓர் இசைக்கருவியை வைத்திருக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் ஒரு இசைக்கருவி வாசிக்கத் தெரிந்திருக்கிறது. அங்கு இசையைக் கொண்டாடுகின்றனர். ஆனால் நம்மிடையே

முன்னோடி தமிழிசை ஆய்வாளர்: 1

தஞ்சை மு. ஆபிரகாம் பண்டிதர் (1859- 1919):

தமிழிசை குறித்த ஆய்வுகளுக்கான முன்னோடி தஞ்சை மு. ஆபிரகாம் பண்டிதர். திருநெல்வேலியில் பிறந்த இவர் ஆசிரியர் பயிற்சி பெற்று அங்கேயே ஆசிரியராகப் பணியாற்றினார். இவரின் மனைவியும் ஒரு ஆசிரியர். பின்னர் 1883-ஆம் ஆண்டு தஞ்சாவூருக்கு வந்து தனது ஆசிரியர் பணியைத் தொடர்ந்தார். தமிழிசை குறித்து இவர் எழுதிய, 'கருணாமிர்த சாகரம்' என்ற நூல் தமிழிசை ஆய்வுகளுக்கான தொடக்கப்புள்ளியாகக் கருதப்படுகிறது. 1,395 பக்கங்களை உடைய இந்த நூல் இன்றுவரை தமிழிசை ஆய்வாளர்களுக்கு மிகப்பெரும் பொக்கிஷமாக பயன்பட்டு வருகிறது.

அந்தக் காலங்களில் இசை கற்க வரும் மாணவர்களுக்கான பயிற்சிப் பாடங்கள் தெலுங்கு, கன்னடம் மற்றும் வடமொழியிலேயே இருந்தன. தமிழ் மொழியில் இல்லை. இந்தக் குறையைப் போக்கி, தமிழில் இசைப் பயிற்சிப் பாடங்கள் வேண்டும் என்பதற்காக 96 தமிழ்ப் பாடல்களைக் கொண்ட, 'கருணாமிர்த சாகரத் திரட்டு' என்ற நூலை 1907-இல் வெளியிட்டார் பண்டிதர். இதுதவிர திருமணச் சடங்குகளில் தமிழிசை ஒலிக்க வேண்டும் என்பதற்காக ஊஞ்சல் பாட்டு, திருமணப் பாடல்கள் ஆகியவற்றை உருவாக்கினார்.

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் இசை குறித்த, செய்திகள், இன்றைய கர்நாடக இசையில் மூல இலக்கணங்களாக இருப்பதையும், இன்றைய கர்நாடக இசை ராகங்கள்தான் அன்று பண்களாக இருந்தன என்றும் ஸ்வர ஆய்வுகள் மூலம் நிரூபித்தார்.

சங்கீத வித்தியாலயா மகாசன சங்கம் என்ற அமைப்பினை ஏற்படுத்தி, தஞ்சையில் தன் சொந்தச் செலவில் 1912-ஆம் ஆண்டு முதல் 1916-ஆம் ஆண்டு வரை 6 இசை மாநாடுகளை நடத்தினார். இம்மாநாடுகள் மூலம் கிடைத்த செய்திகளின் தொகுப்பே, 'கருணாமிர்த சாகரம்' என்ற நூல். தமிழிசை ஆய்வுகள் மட்டுமின்றி, சிறந்த மொழிபெயர்ப்பாளராகவும் திகழ்ந்தார் இவர். தெலுங்கு மொழியில் பாடப்பட்ட தியாகராசரின் பல கீர்த்தனைகளை தமிழில் மொழி பெயர்த்த பெருமை இவரையே சேரும். தன் வாழ்க்கையையும், வாழ்நாளையும் தமிழிசைக்காகவே செலவிட்ட இவர், 1919-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

இந்தப் பழக்கம் தலைகீழாக உள்ளது. இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் தமிழிசை அழியும் வாய்ப்புகள் அதிகம்.

தமிழிசையைக் காப்பாற்றுவது நம் ஒவ்வொருவரின் கையில்தான் உள்ளது. இன்று திருமணங்களில் நாதஸ்வரம், தப்பாட்டம் போன்ற தமிழிசைகள் இடம்பெறுவதில்லை. வேறு மாநில இசைக்கு வழங்கப்படும் வாய்ப்புகள் கூட தமிழிசைக் கலைஞர்களுக்கு தமிழர்களால் வழங்கப்படுவதில்லை. இந்த நிலையை மாற்ற வேண்டும். தமிழிசைக் கலைஞர்களுக்கான பொருளாதார வாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டாலே தமிழிசையை பெருமளவில் காப்பாற்ற முடியும். கர்நாடக சங்கீத சபாக்கள்போல தமிழிசைக்காக சபாக்கள் உருவாக்கப்பட வேண்டும். அங்கு நடக்கும் தமிழிசை நிகழ்ச்சிகளில் தமிழர்கள் கலந்து கொள்ள வேண்டும்.''

செய்வதன் மூலம் மாணவர்கள் வேலை வாய்ப்புகளையும் பெற முடியும்'' என்கிறார்.

தமிழ்த்துறை மாணவர்கள் மட்டுமல்லாது, அனைத்துத் துறை மாணவர்களும் இங்கு இசை கற்று வருகின்றனர். முத்தாய்ப்பாக தமிழ்த்துறையைச் சேர்ந்த பேராசிரியை கற்பகம் என்பவரும் மாணவர்களோடு மாணவராக இசை கற்று வருகிறார். ''இசையில் ஆர்வம் இருந்தாலும் நான் கிராமப்புறத்தில் இருந்ததால் கற்றுக்கொள்ள முடியவில்லை. தற்போது எங்கள் கல்லூரியில் இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. முன்னர் மாணவர்களுக்கு பக்தி இலக்கியங்களை வாசித்துக் காட்டும் நான், தற்போது பாடிக் காட்டுகிறேன். இதனால் மாணவர்களும் ஆர்வத்தோடு பாடங்களைக் கவனிக்கின்றனர். எல்லா ஆசிரியர்களுக்கும் இசைப் பயிற்சி அளித்தால் நல்ல பலன் கிடைக்கும்'' என்கிறார்.

தமிழிசையை முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பாக எடுத்துள்ள சந்தனக்குமார் கூறும்போது, ''தமிழர் வழிபாட்டிலும், சடங்கிலும் இசைக்கருவிகள் என்ற தலைப்பில் எம்.பில். ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தேன். தற்போது தமிழிசை ஆய்வு மையத்தின் வழிகாட்டுதலால் முனைவர் பட்ட ஆய்வுக் கட்டுரைக்கு தமிழிசையை தேர்தெடுத்துள்ளேன். ஒவ்வொரு தமிழ்த்துறை மாணவரும் கண்டிப்பாக தமிழிசை குறித்து அறிந்து கொள்ள வேண்டும். தற்போது என் முனைவர் பட்ட ஆய்வுக்காக உதவித்தொகை ஆய்வு மையத்தால் வழங்கப்படுகிறது'' என்கிறார்.

''தற்போதைய காலகட்டத்தில் தமிழிசையை மீட்டெடுப்பது தமிழர்களாகிய நம் ஒவ்வொருவரின் கடமை'' என்கிற முனைவர் கு.ஞானசம்பந்தன், ''தமிழ் இலக்கியங்களை நூல்களாகவும், சொற்பொழிவுகளாகவும் இருப்பதற்குப் பதில் இசை வடிவில் கொண்டுவருவது, பள்ளிகளில் தமிழ் இசை குறித்த பாடங்கள் கொண்டு வரப்படுவது, ஊடகங்கள் தமிழிசைக்கும், தமிழிசைக் கலைஞர்களுக்கும் முன்னுரிமை அளிப்பது போன்ற முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்'' என தமிழிசையை வளர்க்க மேற்கொள்ள வேண்டிய முயற்சிகளை பட்டியலிட்டார்.

இறுதியாக, ''நமது மொழியில் இசைக்கான அத்தனை அம்சங்களும் உள்ளன என்பதை நிரூபிக்கவே இத்தனை பெருமுயற்சி எடுத்து வருகிறோம். 13-ஆம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தர் இசையில் செய்யாத ஆய்வுகளே இல்லை எனலாம். கண்ணன் பாட்டை இந்த ராகத்தில்தான் பாடவேண்டும் என மெட்டுப்போட்டு பாடியிருக்கிறார் பாரதி. இசை மூலம் பல்வேறு நோய்களை தீர்க்க முடியும் என ஆய்வுகள் சொல்கின்றன. ஆனால், வயிற்றுவலி போக அப்பர் பாடியது, வெப்பு நோய் போக திருஞானசம்பந்தர் பாடியது, கண்ணை திரும்பப் பெற சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடியது என இசையின் மருத்துவக் குணங்களை பல நூற்றாடுகளுக்கு முன்னரே சொன்னவை தமிழ் இலக்கியங்கள். தமிழகத்தின் பல்வேறு கல்லூரிகளிலும் தமிழிசை ஆய்வு மையங்கள் தொடங்கப்பட வேண்டும்.

முன்னோடி தமிழிசை ஆய்வாளர்:2

வீ.ப.கா.சுந்தரம் (1915-2003):

வீரணன் பரமசிவம் காமாட்சி சுந்தரம் என்பதன் சுருக்கமே வீ.ப.கா.சுந்தரம். மதுரையிலுள்ள கோம்பை என்ற ஊரில் பிறந்த இவர், ஆபிரகாம் பண்டிதருக்கு அடுத்து, தமிழிசை ஆய்வில் முக்கிய பங்காற்றியவர். தன் வாழ்நாள் முழுவதும் பிற மொழி இசை ஆதிக்கத்தை எதிர்த்து, இசைத் தமிழின் சிறப்புகளை வெளியுலகிற்கு சுட்டிக்காட்டியவர். ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் தலைமை ஆசிரியர், தமிழ்ப் பேராசிரியர், தமிழ் வித்வான், இசை ஆசிரியர் எனப் பல பணிகளில் இருந்த இவர், இறுதியாக பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். இங்கு பணிபுரிந்த காலத்தில் தனது தமிழிசை குறித்த ஆய்வுகளைத் தொகுத்து, 'தமிழிசைக் கலைக் களஞ்சியம்' என்னும் பெயரில் நான்கு தொகுதிகளாக வெளியிட்டார். தமிழிசை குறித்து வெளியிடப்பட்ட மிகப்பெரிய கலைக் களஞ்சியம் இது.

தமிழில் வழங்கப்படும் ஐவகை நிலங்களுக்கு உரிய இசையை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார் என சுட்டிக்காட்டி, அன்று 1.முல்லையாழ், 2.குறிஞ்சியாழ், 3.மருதயாழ், 4.நெய்தல்யாழ், 5.சுடுபாலை என வழங்கப்பட்ட தமிழிசைதான் இன்று அரிகாம்போதி, நடபைரவி, கரகரப்ரியா, தோடி, சங்கரா பரணம் என அழைக்கப்படுகின்றன என நிரூபித்தவர்.

தமிழிசையை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கும்போது, புதிய தமிழ் கீர்த்தனைகள், நாடகங்கள் உருவாக வாய்ப்புள்ளன. இது தமிழிசையில் பெரிய மாற்றங்களை உண்டாக்கும். எனவே அடுத்த ஆண்டிலிருந்து எங்கள் கல்லூரியில் தமிழிசையை ஒருவருடச் சான்றிதழ் படிப்பாக அளிக்க உள்ளோம்'' என்கிறார்.

தொடர்புக்கு: www.tamilpannisai.in

அறுத்தால் ம

டாக்டர்.
வி.ராதாகிருஷ்ணன்

டாக்டர்.
சி.தமிழ்ச்செல்வி

அறுவடை செய்த தானியங்களைப் பாதுகாப்பது எப்படி? டிப்ஸ் தருகிறார்கள் வேளாண் வல்லுநர்கள்

நெல், மக்காச்சோளம், உளுந்து என்று தானியப் பயிர்கள் விளைந்து அறுவடைக்குத் தயாராக உள்ள இந்தப் பருவத்தில் தானியங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் வழிமுறைகளையும் பகிர்ந்து கொள்கிறார்கள் திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையத்தின் உதவிப் பேராசிரியர்கள் டாக்டர். வி.ராதாகிருஷ்ணன் மற்றும் டாக்டர். தமிழ்ச்செல்வி.

தானிய சேமிப்பின் அவசியம்

தமிழகத்தைப் பொருத்தவரை குறிப்பிட்ட பருவத்தில் ஆண்டிற்கு ஒருமுறை மட்டுமே தானிய அறுவடை செய்ய முடிகிறது என்பதால் விளையும் தானியத்தை சேமித்து வைத்தால்தான் உணவுத் தட்டுப்பாட்டை தவிர்க்க இயலும்.

இன்னொரு முக்கிய விஷயம், அடுத்த பருவத்திற்கான விதைகளையும் இதிலிருந்தே பாதுகாத்து வைப்பது. சேமித்து வைக்காமல் அந்தந்தப் பருவத்தில் விதைகளை வாங்கினால் விதையின் விலை இரட்டிப்பாக இருப்பதுடன் விதைத் தட்டுப்பாடும் ஏற்படலாம். தவிர, அதிக அளவில் தானிய விதையை சேமித்து வைத்தால், தேவைக்குப் போக மீதியை அடுத்த பருவத்தில் விற்று கூடுதல் லாபமடையலாம்.

தானிய சேமிப்பின்போது உணவு தானியங்களில் பூச்சிகள், வண்டுகள், எலிகள், பறவைகள் மற்றும் இயற்கை மாற்றங்கள் முதலியவை பெருமளவில் பாதித்து அவற்றின் சத்துக்களைக் குறைப்பதோடு அவற்றின் தரத்தையும் எடையையும் குறைக்கும் சில காரணிகள்.

கதிரடிக்கும் களம்

களத்துமேட்டில் உள்ள ஓட்டைகள், கிருமிகள் தங்குவதற்கும் முட்டைகள் இடுவதற்கும் பூச்சிகளின் இருப்பிடமாகவும் இருக்கின்றன. எனவே கதிரடிக்கும் களத்தை சுத்தமாகவும் ஓட்டைகள் இருந்தால் அவற்றை அடைத்தும் தூசிகள் இல்லாதவாறும் பார்த்துக் கொள்ள வேண்டும். களத்துமேடுகளில் கதிரடித்த பின் உள்ள சக்கைகள், தாள்கள் மற்றும் இதர பயிர் உபரிகளை முற்றிலும் அகற்றி சற்றே தள்ளி அவற்றின் போர்களை அமைக்க வேண்டும். களத்துமேட்டில் தண்ணீர் நிற்காதவாறு பார்த்துக் கொள்வது நல்லது.

ஈரப்பதம்

சேமித்து வைக்கப்படும் தானியத்தை சரியான அளவிற்கு காய வைக்காமல் விட்டுவிட்டால் எளிதில் பூச்சிகள் மற்றும் புழுக்கள், பூஞ்சான்கள் தாக்கி மக்கிய வாடை, தூர்நாற்றம், சத்துக்கள் குறைவு, தரக்குறைவு உண்டாவதுடன் மேலும் அந்த விதைகள் நச்சுத்தன்மை அடைகின்றன. எனவே தானியங்களை நிலவொளியிலோ அல்லது உச்சிவெயில் வரும் வரையிலோ உலர்த்தி 8 முதல் 12 சதம் ஈரம் இருக்குமாறு சேமித்து வைக்க வேண்டும்.

ட்டும் போதுமா?

இடைக்கால விதை நேர்த்தி

விவசாயிகள் சேமித்து வைத்திருக்கும் குறைந்த அளவு விதைகளை 3 அல்லது 4 மாதகால சேமிப்பிற்குப் பின் உறை வைத்து உலர வைக்கும் முறையில் விதை சேமிப்புக்காலத்தை அதிகரிக்கலாம் இதற்கு டை சோடியம் பார்பெட் என்ற ரசாயன மருந்தை 100 லிட்டர் நீருக்கு 3.65 கிராம் விகிதத்தில் கரைத்து வைக்க வேண்டும். இந்தக் கரைசலில் விதைகளை ஒரு மணி நேரம் உலர வைத்து, பிறகு நிழலில் காய வைக்க வேண்டும்.

பக்குவப்படுத்தும்போது ஏற்படும் சேதம்

தவறான வழியில் அல்லது கவனக்குறைவாக பக்குவப்படுத்தும்போது தானிய சேதாரம் ஏற்படலாம். மிக அதிகமான முறையில் தானியத்தை இயந்திரம் கொண்டு அறுவடை செய்யும்போது தானியங்கள் நொறுங்குவது மட்டுமல்லாமல், பூச்சிகளின் தாக்குதலும் இருக்கும். எனவே உபகரணங்களை நேர்த்தியான முறையில் உபயோகிப்பது நல்லது.

சேமிப்பு அறையில் எலிகளின் சேதாரத்தை தடுக்கும் முறைகள்

நமது உணவு தானியத்தில் எலிகளால் 10 சதவீதத்திற்கு மேல் சேதாரம் ஆகிறது. மேலும் எலிகள் தானிய மூட்டைகளை ஓட்டை போடுவதால் தானியங்கள் தரையில் விரயமாகின்றன.

சேமிப்பு இடத்தில் உள்ள ஜன்னல்கள், கிரில்கள், குழாய்கள் ஆகியவற்றில் தரையிலிருந்து 3 அடிக்கு மேல் கம்பி வலை அமைக்க வேண்டும். தானிய சேமிப்பு அறையில் உள்ள அனைத்து கழிவுப் பொருட்களையும் அகற்றி விடுவது நல்லது. அறையில் உள்ள கதவுகளில் இடைவெளி இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அறைகளில் உள்ள சிறு துவாரங்கள், விரிசல்களை அடைத்துவிட வேண்டும். துவாரங்கள் பெரிதாக இருந்தால் கண்ணாடித்தாள் சிமெண்ட் கலவை கலந்து அடைக்கலாம்.

அறையின் சுற்றுச் சுவர் தரைமட்டத்திலிருந்து 3 அடி உயரத்திலும் பக்கவாட்டுச் சுவர் 1½ அடி அகலத்திற்கு வெளிப்புறத்தில் நீட்டிவிட்டு அதன் வாசற்படி சுவரைத் தொடாமல் இருக்கும்படி அமைக்க வேண்டும். கட்டிடங்களின் கூரைகளை தொடும்படியாக உள்ள மரக்கிளைகள், கயிறுகள், ஏணிகள் போன்றவற்றை அகற்றுவதுடன் சுற்றுப்புறத்தில் புதர்ச்செடிகள், செடிகள் முதலியவற்றை வளரவிடக்கூடாது.

தானியத்தை உபயோகிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மரப்பத்தாயம், குதிர் போன்ற சேமிப்பு சாதனங்களின் அடிப்பகுதியில் துத்தநாகத் தகடு பொருத்தி 60 செ.மீ. உயர மேடை மீது வைக்கவேண்டும். எலிப் பொறிகளை வைத்தும் எலிகளை அதிக எண்ணிக்கையில் பிடிக்கலாம்.

பறவைகளிடமிருந்து பாதுகாப்போம்!

பறவைகளினால் ஏற்படும் சேதம் ஒரு நாளைக்கு 8 முதல் 25 கிராம் வரை. மைனா, காகம், கிளி, புறா மற்றும் சிட்டுக்குருவி இந்த சேதாரத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

அறுவடை நேரத்தில் கதிர்கள் முற்றி இருக்கும் சமயத்தில் பறவைகள் அவற்றைக் கொத்தி உண்கின்றன அதனால் மணிகள் கதிரிலிருந்து உதிர்வது அதிகம். தானியத்தை களத்தில் உலர வைக்கும்போதும் பறவைகள் அவற்றை உண்பதோடு கழிவுகளையும் இடுகின்றன.

கவண் கல் உதவியுடன் பறவைகளை விரட்டி அடிக்கலாம். அறுவடைக்கு முன் தகர டப்பாக்களைக் கொண்டு சப்தம் எழுப்பி பறவைகளை விரட்டலாம். சேமிப்பு அறையில் ஜன்னல்களுக்கு கம்பி வலை பொருத்த வேண்டும். வயல்வெளிகளைச் சுற்றி ஒலிநாடாவைக் கட்டி, அதில் வரும் அதிர்வின் மூலமாக பறவைகளை விரட்டலாம்.

பூச்சிகளைக் கட்டுப்படுத்த

பூச்சிகள் தானியத்தைத் துளையிட்டு அதன் பின் அந்த தானியத்தின் உள்ளேயே முட்டையிட்டு அது புழுவாகி உள்ளிருந்தே தின்று அதன் வாழ்க்கை சுழற்சியை முடித்துக் கொள்ளும். வளர்ச்சியடைந்த பின் வெளியே வந்து இனப்பெருக்கம் செய்து அடுத்த சந்ததியை உருவாக்கும்.

இந்த வகையான பூச்சிகள் தானியங்களில் தங்களைச் சுற்றிக் கொண்டு வீடுபோல அடைத்து அதற்கு உள்ளே வாழும் தன்மையுடையவை. நவீன சேமிப்பு உபகரணங்களை உபயோகித்தல் அதிலும் உலோகக் குதிர்கள் போன்றவை சிறு விவசாயிகளுக்கு தானியத்தைச் சேமித்துக்கொள்ள மிகச்சிறந்த சாதனமாகும்.

தானியத்தை அறையில் அடுக்கும்போது மூட்டைகளை தரையில் வைக்காமல் கட்டைகள் மற்றும் ஓலைப் பாய்களின் மீது அடுக்கி வைப்பதால் ஈரம் மற்றும் பூச்சிகளிடமிருந்து தானியத்தைப் பாதுகாக்கலாம். தானியத்தை அடுக்கி வைக்கும்போதும் இடைவெளிவிட்டு சுவரின் மீது தானிய மூட்டை படாமல் நல்ல காற்றோட்டம் வருமாறு பாதுகாக்க வேண்டும். தானிய சேமிப்பு அறையானது கதிர் அடிக்கும் இடத்திலிருந்து தள்ளி இருக்க வேண்டும்.

சேமிப்பிற்குப் பயன்படுத்தப்படும் சாக்குப்பைகளை புதிதாக அல்லது பூச்சித் தாக்குதலின்றி இருக்குமாறு தயார் செய்வது முக்கியம். பெரிய சாக்குப் பைகளை பயன்படுத்தும்போது டைகுளோரோவா 0.1 சதவீதக் கரைசலில் நனைத்து உலர்த்திய பின் உபயோகிப்பது நல்லது. ஊக்குவிக்கப்பட்ட களிமண்ணை விதைகளுக்குக் குறிப்பாக பயறுவகைப் பொருட்களுடன் 1:100 என்ற விகிதத்தில் கலந்து வைப்பதால் பூச்சிகளிடமிருந்து விடுதலை பெறலாம்.

தானியத்துடன் வேப்பம் விதை பவுடர், வேம்பு இலை ஆகியவற்றை 1:100 என்ற விகிதத்தில் கலந்து பயன்படுத்தினால் பூச்சிகளை சமாளிக்கலாம். வயல்வெளிகளிலிருந்து தானியத்துடனேயே வரும் பெரும்பாலான பூச்சிகள் சேமிப்பு அறையிலேயே பெருகி, பெரும் சேதத்தை ஏற்படுத்துகின்றன. காலை, மாலை வேளைகளில் காற்றோட்டம் அதிகம் உள்ள நேரங்களில் இவை பெரும் அழிவை ஏற்படுத்தும். இதனைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ச.மோகன் இதற்கென்றே தேவைக்கு ஏற்ப பல்வேறு விதமான பிரத்யேகப் பொறிகளை உருவாக்கியுள்ளார். இதனைப் பெற்று விவசாயிகள் பலன் பெறலாம்.

பயறு வகைப் பயிர்களை சேமிக்கும்போது பயறு வண்டுகளின் தொல்லை மிக அதிகம். இவ்வண்டுகள் இடும் முட்டைகளை விதைகளுக்கு பாதகம் இல்லாமல் அழிக்க, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் கண்டுபிடித்த புதிய உபகரணத்திற்கு மத்திய அரசின் காப்புரிமை கிடைத்துள்ளது. இதுபோன்ற கருவி வேறு எங்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்புக்கு: **டாக்டர். ராதாகிருஷ்ணன் 99525 17010**

கூடாரத்தி
கொப்பரை

தென்னை மரங்கள் இன்று பல தமிழக குடும்பங்களின் வாழ்வாதாரமாக உள்ளன. கடந்த சில ஆண்டுகளாக கடுமையான வறட்சி காரணமாக தென்னை மரங்களை பல நோய்கள் தாக்கி, விவசாயிகளுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தின. இதுதவிர, தென்னைப் பொருள்களுக்கு சரியான விலையும் கிடைப்பதில்லை. இதனால் தென்னை விவசாயிகள் பெரும் அவதியுற்றனர். அதே நேரத்தில் விவரம் தெரிந்த தென்னை விவசாயிகள் தென்னைப் பொருள்களை எளிய முறையில் மதிப்புக்கூட்டல் செய்து விற்று நல்ல லாபம் பெற்று வருகின்றனர்.

அந்தவகையில் தமிழகத்திலேயே முதல் முறையாக கொப்பரைத் தேங்காய்களை காய வைக்கும் சூரியஒளி உலர் கூடாரத்தை அரசின் உதவியோடு தஞ்சை மாவட்டம் பேராவூரணியை அடுத்துள்ள புனல்வாசல் கிராம விவசாயி மரிய மைக்கேல் அமைத்துள்ளார்.

விவசாயி மரிய மைக்கேல் இந்த உலர் கூடாரம் பற்றிய தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்:

சு.வீரமணி

...தில் காயுது பார் ...ரத் தேங்கா...

தமிழகத்தில் முதல்முறையாக கொப்பரைத் தேங்காய்களை காய வைக்கும் சூரியஒளி உலர் கூடாரத்தை அரசின் உதவியோடு அமைத்துள்ளார் ஒரு விவசாயி

''தேங்காயை உலர்த்தி கொப்பரைத் தேங்காயாக தயார் செய்து விற்பனை செய்யும்போது, லாபம் கொஞ்சம் கூடுதலாகக் கிடைக்கும். இந்தக் கொப்பரைத் தேங்காய்கள் எண்ணெய் எடுக்கவும் இன்னும் பிற பொருட்கள் செய்யவும் பயன்படுகின்றன. சாதாரணமாக கொப்பரைத் தேங்காயை உலர்த்துவதற்கு ஒருவார காலம் ஆகும். இதிலும் இரவு நேரங்களில் வெயில் இல்லாததால் கொப்பரைத் தேங்காய்களில் ஈரப்பதம் அதிகமாகி பூசனம் பிடித்து கொப்பரையின் தரம் குறைகிறது. இதனால் பல முறை நாங்கள் நட்டமடைந்துள்ளோம்.

அப்போதுதான் வேளாண் துறை கொப்பரைத் தேங்காய்களை காயவைக்க புதிய தொழில்நுட்பங்கள் வந்துள்ளதாகக் கூறினார்கள். இந்தத் தொழில்நுட்பத்தைப் பற்றி அவர்கள் விளக்கிக் கூறிய பிறகு நாம் ஏன் முயற்சி செய்துபார்க்கக் கூடாது எனத் தோன்றியது. மேலும் இந்தக் கூடாரம் அமைப்பதற்கு 50 சதவீதம் மானியமாக அரசே தந்து விடுவதாகக் கூறிய பின்னர் சரி, இதை செய்து பார்த்துவிடலாம் என முடிவெடுத்தேன்.

மரிய மைக்கேல்

அப்புறம் இந்த சூரிய ஒளிக்கூடாரத்தை அமைத்து அதில் வைத்து கொப்பரைத் தேங்காய்களை காய வைக்க ஆரம்பித்தேன். இந்தக் கூடாரம் சூரிய ஒளியை உறிஞ்சி வெப்பத்தை சீராக வைத்து தேங்காய்களை காயவைக்க உதவுகிறது. இந்த முறையைப் பயன்படுத்தி காயவைக்கும்போது, நாள் முழுவதும் வெப்பம் சீராகக் கிடைப்பதால் ஈரப்பதத்தால் தேங்காய்களில் பூசனம் பிடிப்பது தவிர்க்கப்படுகிறது. இதனால், தேங்காய்க் கொப்பரைகளில் ஏற்படும் சேதம் பெருமளவு தவிர்க்கப்படுகிறது.

சாதாரணத் தரையில் காயவைக்கும்போது, தேங்காய்கள் காய ஒருவார காலம் ஆகும். ஆனால், சூரிய உலர் கூடாரத்தில் கொப்பரை தயார் செய்ய 3 நாட்கள் போதும். பூசனம் எதுவும் பிடிக்காமல் சீராக வெப்பம் கொடுத்துக் காயவைப்பதால் கொப்பரையின் தரமும் அதிகமாக இருக்கும். சாதாரண முறையில் மாதத்திற்கு 16 ஆயிரம் காய்கள்தான் உலர்த்த முடியும் ஆனால், சூரிய உலர் கூடாரத்தில் காயவைக்கும் போது 32 ஆயிரம் காய்களை உலர்த்தலாம். இதனால் 2 மடங்கு லாபம் அதிகமாக கிடைக்கும் வாய்ப்புள்ளது. இதில் தானியங்களையும் உலர்த்திக் கொள்ள முடிவதால் மற்ற பயிர்களையும் காய வைக்கப் பயன்படுத்தலாம். அதைப்போல விதைகளையும் உலர்த்தி கொள்ளலாம்.

மேலும் தரையில் காய வைக்கும்போது ஆட்களும் அதிகமாகத் தேவை. அதனால் செலவும் அதிகமாக இருக்கும். ஆனால், இந்த முறையில் ஆட்கள் தேவை மிகவும் குறைவு. அதேபோல வெப்பத்தை சீராகப் பாய்ச்சிக் காய வைப்பதால் கொப்பரைகளின் தரம் அதிகரித்து நல்ல விலையும் கிடைக்கிறது. அதிக அளவில் தேங்காய் காய வைக்க முடிவதால் நேர விரயம் தவிர்க்கப்பட்டு நல்ல லாபமும் கிடைக்கிறது'' என்கிறார்.

இந்தப் புது முயற்சி பற்றி பேராவூரணி உதவி வேளாண் இயக்குநர் ஈஸ்வர் கூறியதாவது...

''தற்போது தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் வேளாண் துறையின் மூலம் அரசு அனுமதித்துள்ள அளவுப்படி கொப்பரைத் தேங்காய் சூரிய ஒளிக்கூடாரம் அமைக்க 50 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. இந்த முறையைப் பயன்படுத்தி தேங்காயை கொப்பரைத் தேங்காயாக மாற்றும்போது விரைவாக உலர்த்த முடிவதோடு, அதிக அளவிலான லாபமும் கிடைக்கிறது.

இந்த உலர்கூடாரம் அமைக்க விரும்பும் விவசாயிகள் அவரவர் பகுதிகளில் உள்ள வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அல்லது உதவி வேளாண்மை அலுவலர்களையோ அணுகும்போது அவர்களுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்படும்.''

(பசுமை படரும்)



பாசமுள்ள புதிய தலைமுறைக்கு
ஆசிரியர்: ஆர்.பி. சத்தியநாராயணன்
விலை: ₹90



பத்தாயிரம் மைல் பயணம்
ஆசிரியர்: வெ.இறையன்பு
விலை: ₹180

போர்த்தொழில் பழகு
ஆசிரியர்: வெ.இறையன்பு
விலை: ₹250



மனிதர் தேவர் நரகர்
ஆசிரியர் : பிரபஞ்சன்
விலை: ₹210

என் ஜன்னலுக்கு வெளியே
ஆசிரியர்: மாலன்
விலை: ₹130

உயிரே உயிரே
ஆசிரியர்: மாலன்
விலை: ₹200

எவரும் செய்யலாம் ஏற்றுமதி
ஆசிரியர்: வீ.அரிதாசன்
விலை: ₹150

ஏற்றம் தரும் மாற்றம்
ஆசிரியர் : வீ. அரிதாசன்
விலை : ₹ 170

நீங்களும் ஜெயிக்கலாம்
ஆசிரியர் : ரமணன்
விலை : ₹120

எப்படி ஜெயித்தார்கள்?
ஆசிரியர் : ரமணன்
விலை: ₹110

சந்தித்திருக்கிறீர்களா?
ஆசிரியர் : எம்.பி. உதயசூரியன்
விலை : ₹ 90

உங்கள் உடல் பேசுகிறேன்
ஆசிரியர்: கீதா
விலை: ₹80

புத்தகங்களை தபாலில் பெற

- சென்னையில் மாற்றத்தக்க வகையில் காசோலை, வரைவோலைகள் (செக், டி.டி) New Generation Media Corporation Pvt. Ltd. என்ற பெயரில் மட்டுமே இருத்தல் வேண்டும்.
- உங்களுடைய முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை கண்டிப்பாகக் குறிப்பிடவும்.
- அனுப்ப வேண்டிய முகவரி: புதிய தலைமுறை பதிப்பகம், 25A, NP, Industrial Estate, Ekkattuthangal, Chennai - 600 032, Ph: 4596 9701 / 702
- நீங்கள் அனுப்பும்போது, புத்தகத்தின் பெயரைக் கண்டிப்பாகக் குறிப்பிடவும்.
- இந்த நூல்களை இணையம் மூலமும் நீங்கள் பெறலாம்.
  விவரங்களுக்கு... www.puthiyathalaimurai.com

புத்தகங்கள் வாங்கி உங்கள் நூலகத்தை மதிப்புக் கூட்டுங்கள்!

37-ஆவது சென்னைப் புத்தகக் காட்சி

நாள்: (10.01.2014 – 22.01.2014)

இடம்: ஒய்.எம்.சி.ஏ. மைதானம், நந்தனம், சென்னை



அகமும் புறமும்
ஆசிரியர்: கீதா
விலை: ₹80



ஹலோ டாக்டர்
ஆசிரியர்: கீதா
விலை: ₹70

கன்ஸ்யூமர்கள் கவனிக்கவும்
ஆசிரியர் : இவள் பாரதி
விலை : ₹ 110

என் பள்ளி
ஆசிரியர்: கல்யாண்குமார்
விலை: ₹90

புத்தகக் காட்சியில் எமது புதிய வெளியீடுகள்

காலத்தின் குரல்
ஆசிரியர்: மாலன் விலை: ₹210

'புதிய தலைமுறை' இதழில் வெளிவந்த தலையங்கங்களின் தொகுப்பு

காற்றின் பாடல்
ஆசிரியர்: கலாப்ரியா விலை: ₹140

மயிலிறகால் மனதை வருடுவது போன்று எழுதப்பட்ட அனுபவப் பதிவுகள்

மனக்குகைச் சித்திரங்கள்
ஆசிரியர்: ஆத்மார்த்தி விலை: ₹120

மனதின் ஆழத்தில் கல்வெட்டாகப் பதிந்து நிற்கிற மனிதர்களைப் பற்றிய எழுத்துச் சித்திரங்கள்

ஊர் வெறுத்தது; கணவர்

தடைகளை உடை

முதல் தமிழ்ப்

'தமிழில் வெளியான முதல் பேசும் படத்தில் கதாநாயகி; தென்னிந்தியாவின் முதல் பெண் இயக்குநர்; தமிழ் சினிமாவின் முதல் பெண் தயாரிப்பாளர்; தமிழ்ப் படங்களின் முதல் பெண் கதை, வசனகர்த்தா' என தமிழ்த் திரையுலகில் எத்தனையோ 'முதல்' புகழ் கொண்ட பெருமைமிகு தமிழ் மகள் டி.பி. ராஜலட்சுமி.

இன்று திரைத்துறையில் ஏராளமான பெண்கள் கொடிகட்டிப் பறப்பதைக் கைதட்டி ரசிக்கிற இதே நாட்டில்தான் 80 ஆண்டுகளுக்கு முன்பு, பெண்கள் கலைத்துறைப் பக்கம் காலடிகூட எடுத்துவைக்கக் கூடாது என்ற பொதுப்புத்தி கவ்வியிருந்தது. அப்படியொரு அடர் இருட்டைப் புறந்தள்ளி, அதே கலைத்துறையில் பன்முகத் திறமைகளோடு சுடர் விட்டுப் பிரகாசித்த விடிவெள்ளி டி.பி. ராஜலட்சுமி.

தமிழ் சினிமாவின் உச்சகட்ட உயரம் தொட்ட இந்த நட்சத்திரத்தின் ஆரம்ப வாழ்க்கையோ பெருந்துயரம். ராஜலட்சுமி பிறந்த ஊர் தஞ்சை மாவட்டத்திலுள்ள இசைக் கிராமமான திருவையாறு. அப்பா பஞ்சாபகேச அய்யர். அம்மா மீனாட்சி. சின்னக் குடும்பம். சிரம ஜீவனம். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்து, பால்ய விவாகத்திலும் மாட்டிவைத்த விந்தை மனிதர்கள் நிரம்பிய காலகட்டம் அது.

மழலை மாறாத 8 வயதிலேயே ராஜலட்சுமிக்கு மணம் செய்து வைத்தனர். புகுந்த வீட்டில் வரதட்சணைக் கொடுமை புரட்டி எடுத்ததால், பிறந்த வீட்டுக்கே விரட்டியடிக்கப்பட்டார் ராஜலட்சுமி. பால்ய வயதில் மகளின் வாழ்க்கை பாழ்பட்டுப்போன துயரத்தால் இடிந்து போனது குடும்பம். அதை நினைத்தே நோய்வாய்ப்பட்டு மடிந்துபோனார் தந்தை. தலைவனை இழந்த குடும்பத்தை வறுமை நெரித்தது. வாடிப்போன மீனாட்சி, மகள் ராஜலட்சுமியோடு திருச்சிக்கு இடம் பெயர்ந்தார். இயல்பிலேயே இசை ஊரில் பிறந்த ராஜலட்சுமிக்கு இனிமையான குரல் வளம். ஒரு கோயிலில் உட்கார்ந்து மனம் உருகிப் பாடினார். அன்றிலிருந்து வயிற்றுப்பாட்டுக்கு வழிகாட்டியது

ஒதுக்கினார்

த்து நடித்த பெண்

தொடர்
எம்.பி. உதயசூரியன்

அதிர்ந்தது பூமி - 12

தமிழகத்தை உலுக்கிய சம்பவங்கள் பற்றிய தொடர், சம்பவங்களில் தொடர்புடைய நேரடி சாட்சியங்களுடன்

ராஜலட்சுமியின் வாய்ப்பாட்டு. சாமண்ணா நாடகக் கம்பெனி திருச்சியில் வெகு பிரபலம். ராஜலட்சுமிக்கு அப்போது 12 வயது. குரலிலும் தோற்றப் பொலிவிலும் ஒரு குட்டி தேவதையாக ஜொலித்தவர், நாடக நடிகையாக மேடை ஏறினார்.

பெண்கள் நாடகங்களில் நடிப்பதை கௌரவக் குறைச்சலாக கருதிய காலம் அல்லவா? அதனால் பதின்வயதுச் சிறுவர்களே பெண்கள் வேடத்திலும் (ஸ்திரி பார்ட்) நடித்து வந்தனர். என்னதான் பெண்மையின் அம்சங்களோடு, நடை உடை பாவனைகளில் ஜொலித்தாலும், உண்மையில் அந்த 'ஸ்திரி பார்ட்கள்' ஆண்கள் என்பதை ஒளித்துவைக்க முடியாததுதானே. ஆகவே நாடக ரசிகர்களும் அவர்களை, 'ஆதங்க ஆறுதலோடுதான்' கண்டுகளித்து வந்தனர்.

அப்பேர்ப்பட்ட சூழலில், அச்சுஅசலாக ஓர் அழகுப் பெண் அச்சுவெல்லக் குரலில் பாடியபடி அபாரமாக நடிப்பதையும் கண்டு நாடே ரசித்து மயங்கியது. ஆண்களை பெண்களாக நடிக்க வைத்த பெரும்பாலான நாடகக் கம்பெனிகளுக்கு ராஜலட்சுமி அதிர்ஷ்டலட்சுமியாகத் தெரிய ஆரம்பித்தார். அந்தக்கால நாடகங்களின் முடிசூடா மன்னனான எஸ்.ஜி.கிட்டப்பாவுக்கே ஜோடியாக நடித்ததால் தமிழகமெங்கும் ராஜ லட்சுமியின், 'கலை அலை' வீசியது.

நாடக உலகில் 'ராஜ(லட்சுமி) பவனி' வந்த அதே சூழலில், வசனமில்லாத மௌனப் படங்களும் தமிழ் சினிமாவில் வர ஆரம்பித்தன. 1929-ஆம் ஆண்டு வெளியான தமிழின் முதல் மௌனப்படமான, 'கோவலன்' உட்பட 10-க்கும் மேற்பட்ட மௌனப் படங்களின் கதாநாயகியாக ராஜலட்சுமி நடித்தார். இதனால், 'சினிமா நட்சத்திரம்' என்ற ஒளிவட்டமும் சேர்ந்துகொள்ள, ராஜலட்சுமி நடிக்கும் நாடகங்கள் வசூலை வாரிக் குவிக்க, பொருளாதாரத்தில், 'ராணி' லட்சுமியாக உயர்ந்தார்.

1931. வெளிநாடுகளில் இருந்து வெளியான பேசும் படங்கள் இந்தியாவில் திரையிடப்பட்டன. அதைக்கண்ட பம்பாய்த் தயாரிப்பாளர் அர்தேஷிர் இரானி, 'ஆலம் ஆரா' என்ற இந்தி மொழி பேசும் இந்தியாவின் முதல்

நேரடி சாட்சியம்

"அம்மா அபார தைரியசாலி"

டி.எஸ். கமலா மணி
டி.பி. ராஜலட்சுமியின் மகள்

''கணவரை இழந்த பிறகு ஆதரிக்க யாருமில்லாமல் போகவே பாட்டி, எங்க அம்மாவை அழைச்சுக்கிட்டு திருச்சிக்கு வந்து தனி வீடு எடுத்துத் தங்கியிருந்தாங்க. 8 வயசிலேயே எங்க அம்மா அருமையா பாடி ஆடறதைப் பாத்த நாடகத் தந்தை சங்கரதாஸ் சுவாமிகள், 'இந்தப் பொண்ணுக்கு நல்ல எதிர்காலம் இருக்கு'ன்னு சொல்லி, நாடகக் கம்பெனியில் சேர்த்துவிட்டார். அதிலேர்ந்து அம்மாவுக்கு ஏறுமுகம்தான். நாடகம், அப்புறம் சினிமான்னு உச்சத்துல இருந்தாங்க. ஆனா நடிக்க வந்ததால, எங்களை எங்க ஜாதியிலேர்ந்து தள்ளி வெச்சு, தனிமைப்படுத்திட்டாங்க. அம்மாவை அவரோட முதல் கணவரும் ஒதுக்கி விட்டுட்டார். ஆனாலும் அம்மா அபார தைரியசாலி. எதுக்கும் கலங்கலை. 'ஆண் துணை இல்லேன்னாலும் பெண்ணால வாழமுடியும்'னு துணிச்சலா வாழ்ந்து காட்டினாங்க. அம்மாவுக்கு ரொம்ப இளகின மனசு. கஷ்டம்னு வர்ற பெண்களுக்கு கை நிறையக் கொடுத்து உதவி பண்ணுவாங்க. சொத்து பத்து, ஏழெட்டு வீடுகள்னு வசதியாத்தான் இருந்தோம். ஆனாலும் வயசான பிறகு அம்மாவுக்கு சர்க்கரை, வாதநோய் பாதிப்புகளால, அவங்க வைத்தியம் மற்றும் குடும்பச் செலவுகளுக்காக சொத்துகள் கரைஞ்சுருச்சு. சினிமா துறையில் ஒரு புரட்சிகரமான பெண்ணாக விளங்கிய எங்க அம்மாவோட பேர்ல ஒரு நினைவு விருதோ, அவங்களுக்கு ஒரு சிலையோ வெச்சு கௌரவப்படுத்தணும் என்பதுதான் என்னோட ஒரே வேண்டுகோள்.''

பேசும் படத்தைத் தயாரித்தார். அதேபோல் மற்ற மொழிகளிலும் படங்கள் தயாரிக்க அவர் முனைந்தார். அந்தச் சூழலில் தமிழ்ப்படக் கதாநாயகி தேர்வுக்காக மும்பை சென்ற ராஜலட்சுமி, தமிழில் முதல் பேசும் படமான, 'காளிதாஸ்' கதாநாயகியாக ஆனார்.

1931 அக்டோபர் 31-ஆம் தேதி. தமிழ் சினிமாவின் முதல் பேசும் படமான, 'காளிதாஸ்' சென்னை சினிமா

சினிமா ஸெண்டிரல்
1931ம் வருஷம் அக்டோபர் மாதம் 31 தேதி சனி முதல்
தமிழ், தெலுங்கு, பாஷைகளில் தயாரிக்கப்பட்ட முதல்
பேசும் படக் காட்சியை கேளுங்கள்.
மிஸ் டி. பி. ராஜலக்ஷிமி
நடிக்கும்
''காளிதாஸ்''
முழுதும் பேச்சு, பாடல், நடனம் நிறைந்த காட்சி.
இம்பீரியல் மூவிடோன் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டது.
உயர்ந்த கீர்த்தனங்கள், தெளிவான பாடல்கள், கொரத்தி நாட்டியங்கள்
பாதி கெஜட் காட்சிகளும் காண்பிக்கப்படும்.

'காளிதாஸ்' பட விளம்பரம்

சென்ட்ரல் தியேட்டரில் திரையிடப்பட்டது. 'தமிழ், தெலுங்கு பாஷைகளில் தயாரிக்கப்பட்ட முதல் பேசும் படம் காட்சியைக் கேளுங்கள். மிஸ் டி.பி. ராஜலட்சுமி நடிக்கும் காளிதாஸ் முழுதும் பேச்சு, பாடல், நடனம் நிறைந்த காட்சி. உயர்ந்த கீர்த்தனங்கள், தெளிவான பாடல்கள், கொரத்தி நாட்டியங்கள், பாதி கெஜட் காட்சிகளும் காண்பிக்கப்படும்' - இது, 'காளிதாஸ்' படத்தின் அப்போதைய பத்திரிகை விளம்பரம்.

உலகத் தமிழ் சினிமா வரலாற்றிலேயே முதன்முறையாகத் திரையில் தோன்றிய முதல் தமிழ்க் கதாநாயகி டி.பி. ராஜலட்சுமியைப் பார்த்து ரசிகர்கள் எழுப்பிய சந்தோஷ ஆரவாரத்தால் அதிர்ந்தன தியேட்டர்கள். அன்றிலிருந்து சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்ப்படங்களின் வசீகர அச்சாணியாக உச்சாணிக் கொம்பில் கொடிக் கட்டிப் பறந்தார் ராஜலட்சுமி. 20-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்த இவர், 'மிஸ் கமலா' என்ற படத்தை சொந்தமாகத் தயாரித்தும் இயக்கினார். கட்டுரையின் முதல் பாராவில் சொன்ன அத்தனை, 'முதல்' சாதனைகளோடு சாதித்துக் காட்டி சரித்திரம் படைத்த டி.பி.ராஜலட்சுமியை, 'தமிழ் சினிமாவின் ராணி' என்று கொண்டாடினர் திரையுலகினரும் ரசிகர்களும்.

கலையின் மீதுள்ள பக்தியைப் போலவே காந்தியின் மீதும் தேசத்தின் மீதும் பெரும் பற்றுக் கொண்டிருந்தார் ராஜலட்சுமி. சுதந்திரப் போராட்டத்தை கதைக்களமாகக் கொண்டு, 'இந்தியத் தாய்' என்ற படத்தைத் தயாரித்தார். ஆனால் அந்நாளைய சென்சார் கட்டுப்பாடுகளால் அந்தப் படம் பாதியிலேயே கைவிடப்பட்டதால் ராஜலட்சுமிக்கு பெரும்தொகை நஷ்டம். ஆனாலும் 'சுதந்திரப் போராட்டத்துக்காக நான் அளித்த சிறு காணிக்கை இது' என்று அவர் பெருந்தன்மையாகக் கூற... சிலிர்த்துப் போனது நாடு.

வழக்கம்போல வாழ்வின் கடைசி நாட்களில் பல சினிமா நட்சத்திரங்களை வாட்டும் கஷ்டத்திற்கு ராஜலட்சுமியும் தப்பவில்லை. ஆனாலும் அந்த நிலையிலும் செம்மையாக வாழ்ந்து, 1964-இல் தனது 52-ஆவது வயதில் மறைந்த டி.பி.ராஜலட்சுமி, தான் பிறந்த 11.11.1911 என்ற தேதியைப் போலவே, தமிழ் சினிமாவின் வரலாற்றிலும் நிரந்தரமாக ஜொலிக்கிற அபூர்வத் தாரகைதான்!

(அதிரும்)

Movieznow.com

அறிமுகப்படுத்துகிறோம்

3D

அட்டைகள்

கற்றுக்கொள்ளுங்கள் ஒரு

புதிய

பரிமாணத்தில்!

இனி ஒரு புதிய பரிமாணத்தில் கற்போம்,

முதன்முறையாக 3D அட்டைகளுடன்

அழகிய வடிவமைப்பில் Smartwork நோட் புக்குகள்.

- பல்வேறு அளவுகளில் கிடைக்கும்
- பார்க்க ஏதுவாக பெரிதாக அச்சடிக்கப்பட்ட பக்க எண்களும், சிறப்பு அம்சங்களும்

விருப்பமுள்ள விநியோகஸ்தர்கள் 044 2740 2752 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளவும் அல்லது sales@greenpearlpublications.com க்கு இமெயில் செய்யவும்.

Manufactured by: **Green Pearl Publications Private Limited,**
211/2, East Potheri Village Street, Kattankulathur - 603 203.
Tamilnadu. Phone: 044 2740 2752.

SMARTWORK

Moviezzworld.com

பேபிபி வெயிட் சிந்தனை!

Moviezzworld.com

'சிந்தனைத் திறன்ல இரண்டு அம்சங்கள் இருக்கு. ஒண்ணு... ஒருமித்த சிந்தனை. இன்னொண்ணுதான் ரொம்ப முக்கியமானது. அதுதான் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்கிற காரணின்னு சொல்லலாம். அது என்னன்னு யாராவது சொல்ல முடியுமா..?'

எல்லாரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி இருந்தார்கள். யாரும் பதில் சொல்வதாக இல்லை.

'உமா... உங்களுக்கும் தெரியலியா..?'

'எனக்கொன்று தோணுது. சொல்லவா சார்?'

'வொய் நாட்..?'

'சார்... அது வித்தியாசமா யோசிக்கிறது..?'

'யெஸ். நீங்க சொன்னது ரொம்ப சரி... கிவ் ஹெர் ஏ பிக் ஹேண்ட்...

மிஸ் உமா சொன்னதுதான். வித்தியாசமா சிந்திக்கணும். இன்ஃபேக்ட், வித்தியாசம்னு சொல்றது கூட அவ்வளவு சரியில்லை.

லேடரல் திங்கிங்னு கேள்விப்பட்டு இருக்கீங்களா..?'

'இல்லை' என்பது போல் பலர் தலையாட்டினார்கள்.

தொடர்

பாஸ்கரன் கிருஷ்ணமூர்த்தி

'கேள்விப்படலைன்னு நீங்க சொல்றதையே பல பேர் நம்ப மாட்டாங்க. ஏன்னா... அந்த அளவுக்கு நிறைய பேர் இதைப் பத்தி இப்போ பரவலாப் பேசிக்கிட்டு இருக்காங்க.

'வித்தியாசமான கோணத்துல, சில சமயங்கள்ல, இல்-லாஜிகலா கூட யோசிச்சு, தீர்வு கண்டுபிடிக்கலாம். அப்படி சிந்திக்கறதுதான், லேடரல் திங்கிங்.'

'சார்...' உமா பேசினாள்: 'ஏதாவது எக்சாம்பிள் சொன்னீங்கன்னா நல்லா இருக்கும்.'

'ட்ரை பண்றேன்... ஊம்... ஒருத்தர் தன்னுடைய துண்டுல அரிசி, பருப்பு, காய்கறி வாங்கனாருன்னு சொன்னோம் இல்லை..? அதுவே ஒருவிதத்துல, லேட்டரல் திங்கிங்தான். அதையே இன்னும் டீடெய்ல்டா பார்ப்போம். அதுக்கு முன்னே... ஒரு விஷயம் சொல்றேன். நோட் பண்ணிக்குங்க.'

சிறிது இடைவெளி விட்டு, சுற்றியும் ஒருமுறை எல்லாரையும் பார்த்தான்.

'பரவாயில்லை. எல்லாரும் ரொம்ப அட்டெண்டிவ்வா இருக்கீங்க. ஐ அம் ஸோ ஹேப்பி அபவுட் இட். நான் சொல்ல வந்த முக்கியமான விஷயம் என்னன்னா...

எந்த ஒரு கேள்விக்கும் ஒரு பதில்தான் இருக்கணும்னு அவசியம் இல்லை. அதே மாதிரி, எந்த ஒரு பிரச்சினைக்கும் ஒரே ஒரு தீர்வுதான் சாத்தியம் அப்படிங்கறதும் கட்டாயம் இல்லை. சரிதானே..?'

'யெஸ் சார். திருக்குறளை வேறு என்ன பெயர் சொல்லி அழைக்கலாம்னு கேட்டா, பல சரியான விடைகள் இருக்கு. இந்திய சுதந்திரத்துக்குப் பாடுபட்ட தலைவர்கள் பேரைச் சொல்லச் சொன்னா, மகாத்மா காந்தியில இருந்து, பல பதில்கள் சாத்தியம்...' ஜெகதீஷ் மெலிதாகக் கைதட்ட, தொடர்ந்து அரங்கம் மொத்தமும் கைதட்டியது.

'ஆமாம். இது மாதிரிதான் பல சமயங்கள்ல, பல கேள்விகளுக்கு பல பதில்கள் இருக்கும். ஆனா என்ன பண்ணிடறோம்... ஒரு விடை, ஒரு தீர்வை மட்டுமே மனசுல வெச்சிக்கிட்டு, அதனோடவே போராடிக்கிட்டு இருக்கோம். வேற வேற வழியில, மாறுபட்ட கோணத்துல, அணுகினா ஒருவேளை இன்னும் பெட்டரான, ஈசியான சொல்யூஷன் கிடைக்கலாம். ஆனா, ஒரு குறிப்பிட்ட மைண்ட்-செட்ல இருந்து நாம வெளியே வர மாட்டேங்கறோம். அதனால, மற்ற விடைகள் எல்லாம் கவனத்துக்கே வர மாட்டேங்குது. ஒரு சிம்பிள் எக்சாம்பிள். பார்க்கலாமா..?'

ஆர்வமுடன் பலபேர் தலையாட்டினார்கள்.

'இப்போ... ஒரு தலைப்பு சொல்றேன். ஃபோர் எக்சாம்பிள்... பேப்பர் வெய்ட்.'

'புரியலை சார்...' என்று குரல் எழுந்தது.

கையால் உருண்டையாக சைகை செய்து, 'பேப்பர் வெய்ட்' என்றான். 'இந்த... பேப்பர் வெய்ட் பத்தி ஏதாவது சொல்லுங்க. பார்க்கலாம்...'

ஒருவன் எழுந்து, 'அது கண்ணாடியில இருக்கும்' என்றான்.

அவன் நண்பன், 'அப்படியெல்லாம் இல்லை. ஏன்... வுட், அயர்ன், கல்லுல இருக்கக் கூடாதா..?' என்று உட்கார்ந்தபடியே சொன்னான்.

வேறொருவன் 'அது ஒரு கல், ஒரு கண்ணாடி சேர்ந்து செய்த கலவை சார்...' என்றான். அவனுடைய நண்பர்கள் கரகோஷம் செய்தார்கள்.

'சார்.. அது டிஃபரண்ட் கலர்ஸ்ல இருக்கலாம்...' என்றான் ஒருவன்.

'ஒரு ஆர்ட் பீஸா கூட பார்க்கலாம்...' என்றாள் ஒரு மாணவி.

'யாரையாவது அடிக்கலாம்...' என்று த்ரோ செய்து காண்பித்தான் ஒருவன். ஆங்காங்கே சிரிப்பலை எழுந்தது.

ஜெகதீஷ் கேட்டான் 'முதல் டார்கெட் நான்தானா..? கையில ஒண்ணும் வெச்சிக்கலையே..?'

மாணவர்கள் கரகோஷத்துடன் சிரித்தார்கள்.

'சார், வெவ்வேற விலையில கிடைக்கும். அப்புறம்...' தொடந்தாள் உமா... 'பேப்பர் வெய்ட் இல்லாதபோது, வேற ஏதாவது, புத்தகமோ ஏதோ கூட பேப்பர் வெய்ட்டா யூஸ் பண்ணலாம்...'

'வெரி குட். யு ஆர் அல்மோஸ்ட்

'வித்தியாசமான கோணத்துல, சில சமயங்கள்ல, இல்-லாஜிகலாகூட யோசிச்சு, தீர்வு கண்டுபிடிக்கலாம். அப்படி சிந்திக்கறதுதான், லேடரல் திங்கிங்'

வாசல்-12

எல்லாக் கதவுகளும் திறந்தே இருக்கின்றன!

www.vikatan.com

அட் இட். இதையே இன்னும் இம்ப்ரூவைஸ் பண்ண முடியுதா... பாருங்களேன்...'

சிறிது நேரம் மௌனம் நிலவியது.

'என்ன... அவ்வளவுதானா..? இன்னும் இருக்கே... கொஞ்சம் மாத்தி யோசிங்க. எல்லாம் நமக்குத் தெரிஞ்சதுதான். நான் சொன்னப்புறம், இது எங்களுக்குத் தெரியாதான்னு கேட்கக் கூடாது...'

மேற்கொண்டு பதில் எதுவும் வரவில்லை. 'நானே சொல்லட்டுமா..?'

'சரி... 'சொல்லுங்க... சொல்லுங்க...'

'சொல்றேன். ஆனா... நான் சொல்றதைக் கேட்டுட்டு, நிச்சயமா நீங்க என்னைத் திட்டுவீங்க...'

புன்னகையுடன் தொடர்ந்தான்.

'ஃபர்ஸ்ட் ஆஃப் ஆல், பேப்பர் வெய்ட்டுங்கறது, பேப்பரை விட வெய்ட்டா இருக்கணும்...'

ஆங்காங்கே கேலியாய் சிரித்தனர்.

'பேப்பர்னு ஒண்ணு இருந்தாதான், பேப்பர் வெய்ட்டுக்கே, வெய்ட்...'

சிரித்தார்கள் சிலர்; கைதட்டினார்கள் சிலர்.

'அதைவிட முக்கியம்... பேப்பர்ல, வெய்ட்டா ஏதாவது இருக்கணும்...'

சிலர் விசில் அடித்தார்கள்.

'பாருங்களேன்... நமக்குத் தேவையே இல்லாத, ஏதோ ஒரு குப்பை காகிதம் இருக்குன்னு வெச்சிக்குங்களேன். தூக்கி டஸ்ட் பின்ல போடுவோமா..?

இல்லை... பொறுப்பா டேபிள் மேல எடுத்து வெச்சி, அதுக்கும் மேல பேப்பர் வெய்ட் வெச்சுட்டுப் போவமா..? ஆக... பேப்பர்ல ஏதேனும் விஷயம் இருந்தாதான், வெய்ட்டுக்கு அவசியமே. இல்லையா..?'

சிரித்தபடி, தலையாட்டினார்கள்.

'பேப்பரும் இருந்து, அதுல விஷயமும் இருந்து, பேப்பர் வெய்ட்டும் இருந்தாலும்கூட, காத்தும் இருந்தாதான், பேப்பர் வெய்ட் வேணும்... இல்லையா..?'

இப்போது பலமாகக் கைதட்டினார்கள். 'பாருங்களேன்... ஒரு சூட்கேஸ் இல்லை... ஒரு பீரோவுக்கு உள்ளே ஒரு பேப்பரை வைக்கிறோம். அப்போ..?

பேப்பரும் வெச்சு, வெய்ட்டும் சேர்த்தா வைக்கறோம்..? உள்ளே காத்து பலமா வீசுமா..? நோ சான்ஸ். இல்லையா..? அதனால... வெய்ட்டுக்கு வேலை இல்லை. கரெக்ட்டா..?'

சிரித்துக் கொண்டே 'ஆமாம்...' என்றார்கள்.

'முடியலை. இன்னும் ஒண்ணு இருக்கு. யாராவது ட்ரை பண்றீங்களா..?'

'சார்... நாங்க இந்த விளையாட்டுக்கு வரலை...' என்றாள் உமா.

'ஸீ... வெய்ட்டான பேப்பர், பேப்பர் வெய்ட், பலமா காத்து... எல்லா கண்டிஷன்ஸும் இருக்கு. ஓ.கே.வா..? இன்னும் ஒண்ணு வேணுமே... நோ ஐடியா..?'

'ஊஹூம்...' என்று குழப்பத்தில் தலையாட்டினார்கள்.

'இதைத்தான் மைண்ட் ப்ளாக்னு சொல்றேன். ஸீ... பேப்பர் வெய்ட்ங்கறது ஒரு ஆப்ஜெக்ட். அது தானாவே... பேப்பர் மேல போய் உட்கார்ந்துக்குமா..? அதை எடுத்து வைக்க ஒரு கை வேணும் இல்லை..?'

சரமாரியாகக் கைதட்டல் எழுந்தது.

'எல்லாமே நமக்குத் தெரிஞ்ச பதில்கள்தான். இல்லை..? ஆனா... நாம அந்தக் கோணத்துல சிந்திச்சுப் பார்க்கலை. அவ்வளவுதான்... இதேபோல, தன்னுடைய துண்டுல உப்பு வாங்கிட்டுப் போறவருக்கு என்னென்ன ஆப்ஷன்ஸ் இருந்து இருக்க முடியும்னு யோசிச்சுப் பாருங்க. இன் தி வொர்ஸ்ட் கேஸ், தன்னுடைய இரண்டு கைகளிலும் கொள்கிற அளவுக்கு உப்பை வாங்கி, தன் உள்ளங்கைகளில் வைத்துக்கொண்டே, வீடு வரை சென்றிருக்கலாம்.

அவசரத் தேவைக்கு, ஏதாவது செய்துதானே ஆகணும்..? எதுவுமே தவறான யோசனை இல்லை. எது ஆகச் சிறந்த யோசனை..? இந்த அடிப்படையில்தான் போட்டித் தேர்வுகளில்கூட வினாக்கள் கேட்கப் படுகின்றன. வாட் இஸ் தி பெஸ்ட் ஆப்ஷன் அவய்லபிள்... அதை செலக்ட் பண்றதுதானே... அப்ஜெக்டிவ் டைப் கொஸ்டின்ஸோட கான்செப்ட். இல்லையா...?

'சார்... பேப்பர் வெய்ட்ல, இன்னொரு பாயிண்ட்டும் இருக்கு. அதை விட்டுட்டீங்களே..?' என்றாள் உமா.

'இஸ் இட்..? எங்கே சொலுங்க பார்ப்போம்..'

'அதுவே அந்த இடத்துல ஒரு குழந்தைதான் இருக்குன்னு வெச்சிப்போம். நீங்க சொல்ற எல்லாமே இருக்கு. ஆனலும் அந்தக் குழந்தைக்கு, வெய்ட் எடுத்து பேப்பர் மேல வைக்கணும்னு தெரியாது இல்லை..? ஸோ..? அதனுடைய யூஸ் பத்திய சென்ஸும் இருக்கணும்..'

'எக்சலண்ட்...' என்றான் ஜெகதீஷ்.

'அதுமட்டும் இல்லை... பெரியவங்களாவே இருக்கட்டும். அந்த நேரத்துக்குக் காத்து இல்லாம இருக்கலாம். ஆனா, தான் இல்லாதபோது காத்து அடிச்சு, பேப்பர் பறந்து போயிட்டா..? அதனால, ஃப்யூச்சரை யோசிச்சு, முன்னமே வெய்ட் வெச்சிட்டுப் போறதுதான் புத்திசாலித்தனம்...'

பேராசிரியர் எழுந்து நின்று கைதட்டினார். மற்றவர்களும் சேர்ந்து கொண்டனர். அத்தனை பேர் முகங்களிலும் ஒரு மகிழ்ச்சி தெரிந்தது.

'ஐ திங்க் மிஸ் உமா இஸ் தி ஃபிட்டஸ்ட் பெர்சன் டு லீட் நௌ. மிஸ் உமா... ப்ளீஸ் கம் ஆன் டு தி ஸ்டேஜ்'.

முகத்தில் பெருமிதம் பொங்க, மேடை ஏறினாள் உமா.

ஃப்ரண்ட்ஸ்... லெட் அஸ் நௌ, டேக் தி டிஸ்கஷன் டு தி நெக்ஸ்ட் லெவல்'!

(திறக்கும்)

'பேப்பர்ல ஏதேனும் விஷயம் இருந்தாதான், வெய்ட்டுக்கு அவசியமே'

எம்ப்ளாய்மெண்ட்

வடக்கு ரயில்வேயில் 5,679 காலியிடங்கள்

இந்திய ரயில்வேயின்கீழ் இயங்கி வரும் வடக்கு ரயில்வேயில் பல்வேறு பணிகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணிகள்: Pointsman, Gateman, Khalasi helper, Trackman, Carriage Cleaner, DSL Khallasi, Safaiwala, Cookmate, Hospital attendant

காலியிடங்கள்: Pointsman - 688, Gateman - 262, Khalasi helper - 1895, Trackman - 2529, Carriage Cleaner - 272, DSL Khallasi - 22, Safaiwala - 5, Cookmate - 2, Hospital attendant - 4.

கல்வித் தகுதி: பத்தாம் வகுப்பு தேர்ச்சி அல்லது ஐ.டி.ஐ. சான்றிதழ்.

வயது: 33-க்குள் (ஓ.பி.சி. பிரிவினருக்கு மூன்று ஆண்டுகளும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 5 ஆண்டுகளும் வயது வரம்பில் விலக்கு அளிக்கப்படும்)

விண்ணப்பக் கட்டணம்: ₹100/-

விண்ணப்பிப்பது எப்படி?

1. விண்ணப்பப் படிவத்தை இணையதளத்தில் இருந்து டவுன்லோடு செய்து பிரிண்ட் எடுத்துக்கொள்ளவும்.

2. விண்ணப்பப் படிவத்தை Blue அல்லது Black Ball Point பேனாவில் அடித்தல், திருத்தல் இல்லாமல் எழுத வேண்டும்.

3. தற்போது எடுக்கப்பட்டிருக்கும் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்துடன் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்துகொள்ள வேண்டும்.

4. இணையதளத்தில் இருந்து பிரிண்ட் செய்த Challan-ஐ பயன்படுத்தி சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா வங்கியில் 3311403687 என்ற அக்கவுண்ட் எண்ணில் விண்ணப்பக் கட்டணத்தை செலுத்த வேண்டும் அல்லது NEFT Code No CBI NO 280311 என்ற எண்களைப் பயன்படுத்தி வேறு வங்கியிலும் விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்தலாம்.

5. விண்ணப்பக் கட்டணத்தை Assistant Personnel Officer, Railway Recruitment Cell, Lajpat Nagar I, New Delhi - 110 024 என்கிற முகவரிக்கு இந்தியன் போஸ்டல் ஆர்டராகவும் அனுப்பலாம்.

6. பூர்த்தி செய்த விண்ணப்பங்களுடன் கட்டணம் செலுத்திய Challan அல்லது போஸ்டல் ஆர்டர் ரசீதையும், பத்தாம் வகுப்பு சான்றிதழ் நகலையும், சாதிச் சான்றிதழ் நகலையும் சேர்த்து அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி: Assistant Personnel Officer(RRC), Railway Recruitment Cell, Lajpat Nagar I, New Delhi - 110 024.

விண்ணப்பங்களை அனுப்ப கடைசி தேதி: 10.02.2014

இணையதள முகவரி: www.rrcnr.org

கெயில் நிறுவனத்தில் எக்சிக்யூட்டிவ் என்ஜினீயர் பணியிடங்கள்

கெயில் நிறுவனத்தில் எக்சிக்யூட்டிவ் என்ஜினீயர் பணிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி: எக்சிக்யூட்டிவ் என்ஜினீயர் - 65

கல்வித் தகுதி: மெக்கானிக்கல், எலெக்ட்ரிக்கல், இன்ஸ்ட்ருமெண்டேஷன், கெமிக்கல் ஆகிய துறைகளில் ஏதேனும் ஒன்றில் பி.இ. அல்லது பி.டெக். பட்டம். கேட் 2014 தேர்வுக்கு விண்ணப்பித்தவர்கள் மட்டுமே இந்தப் பணிக்கு விண்ணப்பிக்க முடியும்.

காலியிடங்கள்: (மெக்கானிக்கல் - 18, எலெக்ட்ரிக்கல் - 14, இன்ஸ்ட்ருமெண்டேஷன் - 13, கெமிக்கல் - 20

வயது: 25-க்குள்

விண்ணப்பிக்க கடைசி தேதி: 28.01.2014

விவரங்களுக்கு: https://gailebank.gail.co.in

என்.டி.பி.சி. நிறுவனத்தில் எக்சிக்யூட்டிவ் டிரெய்னி பணியிடங்கள்

நேஷனல் தெர்மல் பவர் கார்ப்பரேஷன் நிறுவனத்தில் எக்சிக்யூட்டிவ் டிரெய்னி பணிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி: எக்சிக்யூட்டிவ் டிரெய்னி

கல்வித் தகுதி: எலெக்ட்ரிக்கல், மெக்கானிக்கல், சிவில், எலெக்ட்ரானிக்ஸ், இன்ஸ்ட்ருமெண்டேஷன் ஆகிய துறைகளில் ஏதேனும் ஒரு துறையில் பி.இ. அல்லது பி.டெக். பட்டம். கேட் 2014 தேர்வுக்கு விண்ணப்பித்தவர்கள் மட்டுமே இந்தப் பணிக்கு விண்ணப்பிக்க முடியும்.

வயது: 27-க்குள்

விண்ணப்பிக்க கடைசி தேதி: 18.01.2014

விவரங்களுக்கு: www.ntpccareers.net

MOHAMEDMUZZAMMIL.com

புதிய தலைமுறை
இனியொரு விதி செய்வோம்
16 ஜனவரி 2014 மலர் 05 இதழ் 17
நிர்வாக ஆசிரியர்
ஆர்.பி. சத்தியநாராயணன்
ஆசிரியர்
மாலன்
(நாராயணன்)
அசோசியேட் எடிட்டர்கள்
பெ. கருணாகரன்
எம்.பி. உதயசூரியன்
மூத்த உதவி ஆசிரியர்கள்
ஆ. பழனியப்பன்
கீதா
உதவி ஆசிரியர்
யுவகிருஷ்ணா
மூத்த நிருபர்
அதிஷா
நிருபர்கள்
இவள் பாரதி
பூ.சர்பனா
எம். செந்தில்குமார்
என். ஹரிபிரசாத்
கார்ட்டூனிஸ்ட்
முருகு
புகைப்படக்காரர்
க. அறிவழகன்
வடிவமைப்பு
மு.க. ரவிசந்திரஹாசன்
எம்.ஜெ.மோகன்குமார்
அ. வெனிஸ்
ஜி. ராஜேஷ்
துரை. அருணாச்சலம்
அலுவலகம்:
எண். 25-A, (NP) திரு-வி-க, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை - 600 032.
கருத்து, படைப்புகளை அனுப்ப:
தபால் பெட்டி எண்: 3209
சென்னை - 600 032.
தொலைபேசி எண்கள்:
ஆசிரியர் பிரிவு: 044-45969717
ஃபேக்ஸ்: 044-45969536
சந்தா மற்றும்
சர்க்குலேசன் பிரிவு: 044 - 45969701
விளம்பரப் பிரிவு:
80560 07202 / 87545 74332
மின்னஞ்சல்: கருத்துகளுக்கு
feedback@puthiyathalaimurai.com
சந்தா பிரிவு
subscriptions@newgenmedia.in
இணையதளம்:
http://www.puthiyathalaimurai.com
Printed and Published by N.Govindarajulu on behalf of New Generation Media Corporation Pvt. Ltd, No.25-A (NP) Thiru.Vi.Ka. Industrial Estate, Guindy, Chennai - 600 032. Printed at Frontline Printers Private Ltd, M-7, Thiru.Vi.Ka. Industrial Estate, Guindy, Chennai - 600 032. Editor: V.Narayanan

பெரிய அங்கீகாரம்

பல்வேறு மாமனிதர்களை சிறந்த மனிதர்களாகக் கூறி, இறுதியில் எங்களையும் சிறந்த மனிதர்கள் என்று கூறி, பெரிய அங்கீகாரம் தந்து தலையங்கம் வாயிலாக பெருமை சேர்த்துவிட்டீர்கள்.

வெ. லட்சுமி நாராயணன், வடலூர்

நம்பிக்கை இந்தியன்

எளிமையைப் பின்பற்றும் போப்பாண்டவர், வெற்றியின் உச்சத்தைப் போராடித் தொட்ட சச்சின், ஊழலைப் பின்னுக்குத் தள்ளி முன்னுக்கு வந்த கெஜ்ரிவால், இலங்கைத் தமிழருக்காய் குரல் கொடுத்த கேமரூன் போன்ற வெற்றியாளர்களை விட, அன்றாடம் பிரச்சினைகளோடு போராடி வாழும் நம்பிக்கையை இழக்காத ஒவ்வொரு இந்தியனையும் 'சென்ற ஆண்டின் சிறந்த மனிதர்' எனப் பாராட்டி எழுதப்பட்ட தலையங்கம் ஒவ்வொரு இந்தியனின் வலியையும் உணர்ந்து எழுதப்பட்டது.

ச.கிறிஸ்து ஞானவள்ளுவன், வேம்பார்.

புதிய வெளிச்சம்

'நட்சத்திரங்கள் 2013' என்று 'புதிய தலைமுறை' அரைத்த மாவை அரைக்காமல் புதியவர்களை, அறிந்தவர்களை, அறியவேண்டியவர்களை அபாரமாக ஆராதனை புரிந்திருப்பது போற்றத் தக்கது. அறிவியல், விளையாட்டு சுற்றுச்சூழல், சமூக சேவை, இலக்கியம், ஊடகம், இணையம், சினிமா, இசை என்று பல துறை புதிய தலைமுறைகளை வெளிச்சமிட்ட விதம் மெச்சத் தகுந்தது.

ஆர். இ. மணிமாறன், இடையன்குடி

அணுகுமுறை புதிது

'நட்சத்திரங்கள் 2013'-இல் பல்துறை சாதனையாளர்களைப் பாராட்டிவிட்டு, வருகின்ற ஆண்டுகளிலும் அவர்களின் சாதனைகள் தொடரவேண்டும் என்று வாழ்த்தி உற்சாகப்படுத்தியிருந்த செய்திகள் எல்லாவற்றிலும், 'புதிய தலைமுறை'யின் அணுகுமுறை புதிது; வரவேற்கப்படவேண்டியது.

அ. கருப்பையா, பொன்னமராவதி

கடுமையான உழைப்பாளி

'தடைகளைக் கடந்தவர்!' என்ற தலைப்பில் அரசியல் நட்சத்திரம் 2013 ஆக ஜொலித்த மு.க. ஸ்டாலின், உண்மையில் கடுமையான உழைப்பாளர் என்பதை மாற்றுக்கட்சியினரும் மறுக்க முடியாது. 2014-ஆம் ஆண்டின் சவால்களை அவர் சமாளித்து வெற்றி பெற வாழ்த்துகள்.

ப. ரமேஷ், சென்னை

பரவசப் பெருமை

புத்தாண்டுச் சிறப்பிதழில் இடம்பெற்ற, 'பாரெங்கும் பரவும் பறை' கட்டுரையைப் படித்து பரவசம் அடைந்தேன். தமிழகத்தின் பாரம்பரியக் கலையான பறை இசை அயல்நாடுகளில் பரவி வருகிறது என்பது பெருமை கொள்ளவைக்கும் செய்தி.

எம்.கே.பழனிவேல்,
கல்யாணி இருப்பு

அற்புதக் கட்டுரைகள்

குடிசைப்பகுதி குழந்தை இதழாளர்கள் எழுதிய கட்டுரைகள் அற்புதம். இவர்கள் வருங்காலத்தில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவார்கள் என்பதில் ஐயமில்லை.

ராமசாமி,
விழுப்புரம்

உயிரோட்டமான படங்கள்

'வையத் தலைமைகொள்' தொடருக்காக வாசுதேவன் வரைந்தளிக்கும் படங்கள், இறையன்பு விவரிக்கும் காட்சிகளை உயிரோட்டமாக்குகின்றன. வாழ்த்துகள் வாசுதேவன்!

கா. இராஜசேகர், மங்களபுரம்

பின்பற்றவேண்டிய திட்டம்

'யானையைத் தூரத்தும் தேனீ' செய்தி அதிசயமானதும் அபூர்வமானதுமாகும். விவசாயிகளை காத்தருளவும் உயிர்ப் பலிகள் நடப்பதைத் தடுக்கவும் இந்தத் தேனீ சுவர் திட்டத்தை நிச்சயம் எல்லா நாட்டினரும் பின்பற்றலாமே?

வி. ஹரிகிருஷ்ணன், திருச்சி

அழகான படப்பிடிப்பு

இயக்குநர் சீமான், தான் வாழ்ந்த அரனையூர் பற்றிய அனுபவங்களை நம்மிடையே பகிர்ந்த விதமும் கிராமத்துச் சூழலை படம் பிடித்துக் காட்டிய அழகும் அவரது இயக்குநர் திறனை வெளிப்படுத்தியது.

லெட்சுமி மணிவண்ணன்,
சிக்கல்

சாதிப்பது உறுதி

'ரோலர் ஸ்கேட்டிங்' கிரிக்கெட் கட்டுரை ஆச்சரியப்பட வைத்தது. முயன்றால் முடியாதது எதுவும் இல்லை. இந்த விளையாட்டிலும் நம் நாட்டு இளம்வீரர்கள் சாதித்துக் காட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை.

வள்ளியூர் ஏ.பி. எஸ். ரவீந்திரன்
நாகர்கோவில்

பெரிய வெற்றி

எவ்வளவு பெரிய திறமைசாலி ஆனாலும் அதற்கான அங்கீகாரம் கிடைத்தால்தான் அதன் அடுத்த பரிமாணத்தை எட்ட முடியும். ஜி.டி. நாயுடுவின் கண்டுபிடிப்புகளை மத்திய அரசு அங்கீகரிக்காவிட்டாலும், அவரது கண்டுபிடிப்புகளையோ, அவரையோ பற்றி இன்றைய இளையோர்கூட, 'நீயென்ன பெரிய ஜி.டி.நாயுடுவா?' எனப் பேசக் கேட்டுள்ளோம். இதுவே அந்த விஞ்ஞானிக்கான மிகப்பெரிய வெற்றியாகும்.

பி.எஸ்.கார்த்திகேயன்,
மேலகபிஸ்தலம்

மக்கள் மனசு

கடந்த வார வாக்கெடுப்பின் முடிவுகள்

ஆம் ஆத்மி கட்சி பாணியிலான மாற்று அரசியல் தமிழகத்தில்...

எஸ்.எம்.எஸ். :

A) சாத்தியம்	88%
B) சாத்தியமில்லை	12%
C) கருத்து இல்லை	0%

இணையதளம் :

அ) சாத்தியம்	52%
ஆ) சாத்தியமில்லை	45%
இ) கருத்து இல்லை	3%

Mozzworz.com

ஓவியம்: வாசுதேவன்

கனல் மணக்கும் பூ

12 ஜனவரி 1863

சுவாமி விவேகானந்தர்

பிறந்தநாள்

ஒரு சரித்திர நாடகம் மிக அருமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கதாபாத்திரங்களுடன் ஒன்றிப் போய் நடிக, நடிகையர்கள் நாடகத்தை நிஜமாக்கிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று சில ஆங்கிலேய போலீஸ்காரர்கள் வருகிறார்கள். வந்தவர்கள் முக்கிய நடிகரைப் பிடித்திழுக்கிறார்கள்.

என்ன நடக்கிறது, புராண நாடகத்தில் போலீஸ் எப்படி? பார்வையாளர்கள் குழம்புகிறார்கள். இல்லை, உண்மையில் ஆங்கிலேய போலீஸ் அந்த நடிகரை ஏதோ காரணத்திற்காகக் கைது செய்கிறது. அருமையாக நடித்தவரை இப்படி அநியாயமாக நடத்துகிறார்களே?

ஆனாலும் ஆங்கிலேயன் எது செய்தாலும் நம்மால் ஒன்றும் செய்ய முடியாதே என்று இந்திய அடிமைக் கூட்டம் தங்களுக்குள் புழுங்கிக் கொண்டிருந்தது.

அப்போது - 'வெளியே போ, நாடகம் முடிந்தபின் உன் கைதை வைத்துக்கொள்' என்று ஒரு கம்பீரக் குரல் கேட்டது. சிறுவனின் குரலாக இருந்தாலும் அதில் இருந்த அக்னி அனைவரிடத்திலும் பற்றிக் கொண்டது.

உடனே, இந்தியர்கள் உற்சாகம் பெற்று, 'வெளியே போ' என்று உரக்கக் கத்தினார்கள்.

அந்தச் சிறுவனின் தலைமைப் பண்பால், அடிமை இந்தியர்கள் விழித்துக் கொண்டனர். ஆங்கிலேயனை விரட்டியடித்தனர். இந்திய நாடகம் தொடர்ந்தது.

அந்த அக்னிக்குஞ்சுதான் நரேன் எனப்பட்ட சுவாமி விவேகானந்தர். அன்று அவர் மூட்டிய கனல், 'விழித்திரு, லட்சியம் அடையும் வரை ஓயாது உழைத்திடு' என்று நம் குளிர் நடுக்கத்தைப் போக்கிக் கொண்டே இருக்கிறது.

'50 ஆண்டுகளுக்கு மற்ற எல்லாக் கடவுளர்களையும் மறந்துவிட்டு பாரதத் தாயை மட்டும் போற்றி வணங்குங்கள்' என்று ஆணையிட்டார் சுவாமிஜி.

இதைச் சொன்னது 1897 -ஆம் ஆண்டு. இந்த எண்ணுடன் ஓர் 50-ஐக் கூட்டிப் பாருங்கள். வருவது இந்தியச் சுதந்திர ஆண்டாகத்தான் இருக்கும்.

தில்லியைச் சேர்ந்த அருணிமா சின்ஹா சென்ற ஆண்டு ஒரு சாதனையைப் படைத்திருக்கிறார். அவரது இடது கால் நீக்கப்பட்ட நிலையிலும் ஒரு காலின்றி எவரெஸ்ட் மலையில் ஏறி சாதனை படைத்தார்.

அந்தச் சாதனைக்குப் பின்னே எத்தனையோ வேதனைகள், சோதனைகள் இருந்தன. ஓரிரு வருடங்களுக்கு முன்பு இரவில் அருணிமா சின்ஹா லக்னோவிலிருந்து தில்லிக்குப் பயணம் சென்று கொண்டிருந்தார். ரயிலில் திருட்டுக் கும்பல் ஒன்று ஏறி பல பயணிகளை அடித்து உதைத்துத் திருடிக் கொண்டிருந்தது. அருணிமாவின் கழுத்து செயினையும் கொலைகாரக் கும்பல் கழற்றச் சொன்னது. அவர்களுடன் அவர் போரிட்டார். கடைசியில் அந்தக் கொலைகாரக் கும்பல் அவரைத் தூக்கி வெளியே வீசிவிட்டது.

அப்போது இருளில் வேகமாக வந்த ஒரு ரயில் அவரின் ஒரு காலைத் துண்டித்துவிட்டது. அவரது அலறல், ரயிலின் சத்தத்தின் முன்பு யாருக்குமே கேட்கவில்லை. காலையில் கிராம மக்கள் அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அவரது ஒரு கால் நீக்கப்பட்டது.

அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் திணறியபோது எவரெஸ்ட் ஏறி சாதனை செய்வது என்று முடிவெடுத்தார். மலையேற்றத்தின் பல கட்டங்களில் அவர் மனதில் உறுதியை இழக்க வைக்கும் நிலை ஏற்பட்டது. அப்போது அவர் படித்த விவேகானந்தரின் நூல்கள் அவருக்கு நம்பிக்கையையும் தைரியத்தையும் அளித்தன .

வாழ்வில் துயருற்றவர் சுவாமிஜியின் சிந்தனைகளைப் படிப்பதால் மன உறுதி பெற்று சாதனையாளர் ஆகிறார். விவேகானந்தரை இன்று நாம் பலவிதங்களில் கொண்டாடுகிறோம். வெறும் கொண்டாட்டங்களில் மட்டும் அந்த மாமனிதர் திருப்தி அடைய மாட்டார். மாறாக, அவர் மூட்டிவிட்ட அக்னியை இன்று மக்கள் தங்கள் நெஞ்சங்களில் வைத்துக்கொண்டால் அவர்களது அறியாமை இருளை அகற்றிவிடும். அரசியலில், சமுதாயத்தில், தனிமனித வாழ்வில் படிந்துவிட்ட அசுத்தங்கள் அத்தீயில் தூசாகும்.

கட்டுரையாளர்: **ஆசிரியர், 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்'**

கனவுகளை நனவாக்கும் கல்விக்கூடம்

2006-ம் ஆண்டில் காவல் துறையின் பிரபல அதிகாரியான திரு. Dr. C. சைலேந்திரபாபு IPS அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட எங்கள் IMPACT IAS ACADEMY தரும் தரமான பயிற்சிகளால் ஏராளமானவர்கள் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளார்கள். 2009-ம் ஆண்டில் எங்கள் அகாடமியில் பயிற்சி பெற்று ஐ.ஏ.எஸ். தேர்வினை தமிழில் எழுதிய திரு. ராஜேந்திர சோழன் 32-ம் இடத்தில் வெற்றி பெற்று தமிழகத்திற்கே பெருமை சேர்த்தார். இதே போல TNPSC குரூப் 1ல் தமிழகத்தில் முதல் மாணவனாக தேர்ச்சி பெற்ற திரு.முத்துகுமார் தற்போது ஐ.ஏ.எஸ். தேர்ச்சி பெற்று சட்டீஸ்கர் மாநிலத்தில் பணியாற்றி வருகிறார்.

எங்கள் அகாடமியில் ஐஏஎஸ் தேர்வுகளுக்கான பயிற்சியை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இருமொழி பயிற்சியாக நடத்தி வருகிறது. கிராமப்புற மாணவர்கள் மற்றும் பட்டப் படிப்பில் 80 சதவீதத்திற்கும் மேல் மதிப்பெண் பெற்றவர்களுக்கும் பயிற்சி கட்டணத்தில் 10 சதவீதம் விலக்கு அளிக்கப்படுகிறது. வெளி இடங்களில் இருந்து வரும் மாணவர்களின் வசதிக்காக குறைவான கட்டணத்தில் முறையான மூன்று வேளை உணவு, நிறைவான வசதிகள் கொண்ட தங்கும் விடுதி வசதியும் உண்டு.

நாங்கள் வங்கி பணிகளுக்கான IBPS PO / Clerical தேர்வுகளுக்கு எங்கள் துணை நிறுவனமான I BEACONS ACADEMY மூலம் சிறப்பு பயிற்சி அளிக்கிறோம் என்று இம்பாக்ட் ஐ.ஏ.எஸ் அகாடமியின் நிர்வாக இயக்குநர் திரு. A. திருமுருகன் தெரிவித்தார்.

மத்திய அரசு பணியாளர் தேர்வு ஆணையம் (UPSC) IAS தேர்வில் கொண்டு வந்துள்ள மாற்றத்தினை கருத்தில் கொண்டு எங்கள் நிறுவனம் 2014 ஐஏஎஸ் தேர்வுக்கான ஓராண்டு ஒருங்கிணைந்த பயிற்சி வகுப்பினை வரும் ஜனவரி 20-ம் தேதி முதல் துவங்க உள்ளது. அதற்கான சேர்க்கை அண்ணா நகர், தாம்பரம் மற்றும் பெங்களூரில் நடைபெறுகிறது.

THE IMPACT IAS ACADEMY SPINNING SUCCESS SINCE 2006

UPSC TOPPERS

TNPSC TOPPERS 2013

IMPACT OFFERS

INTENSIVE COACHING PROGRAMME

for TNPSC Group I & II @

Chennai and Bangalore.

class commences on Jan 20th onwards.

(Regular and weekend batch)

Admission open

Hostel Facility available for Men & Women

மேலும் விவரங்களுக்கு:

The Impact IAS Academy

Corporate Office:

No. 13/99, 'AE' Block, 6th Street,
10th Main Road, Anna Nagar (W),
Chennai - 600 040.
Ph: +9144-26221537, Cell: 9840557455

www.impactiasacademy.com
impactias@gmail.com

Branch Office:

Chennai: No.11, Second floor, Ganesh nagar, velachery main road, Above IOB bank, Selaiyur, Chennai-73.
Phone: 044-43567891 / 9789990222

Bangalore: No. 645, 1st Floor, Opp. Charan Bank, 10th B Main, Pavithra Hotel Opp. Lane, Jayanagar 4th Block, Bangalore, Karnataka, India - 560 111.
Cell : +91 98808 19172 / +91 99009 90485.

PUTHIYA THALAIMURAI TAMIL WEEKLY REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER
NO TNTAM/2009/30183. R.Dis.no.937/11 Postal Registration No. TN/CC(S)DN 407/14-16 WPP License No. TN/PMG(CCR) / WPP-151 / 2013. Date of publication 08.01.2014

Mytamilworld.com